## வரலாறு

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்

அலகு — 1

1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை? ஜெர்மனி, ஆஸ்திரிய — ஹங்கேரி, உதுமானியர்.
2. எவ்விடத்தில் எத்தியோப்பியாவின் படை இத்தாலியின் படைகளைத் தோற்கடித்தது? அடோவா
3. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது? ஜப்பான்
4. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார்? லெனின்
5. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது? பதுங்குக் குழிப்போர்முறை
6. எந்த நாடு முதல் உலகப்போருக்குப் பின்னர் தனித்திருக்கும் கொள்கையைக் கைக்கொண்டது? அமெரிக்க ஐக்கிய நாடுகள்
7. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச் செயலர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? பிரிட்டன்
8. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது? ரஷ்யா .

அலகு — 2

1. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது? போப்
2. யாருடைய ஆக்கிரமிப்போடு மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று? **ஹெர்மன் கோர்ட்ஸ்**
3. பெருநாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக்கொண்டனர்? **ஸ்பானியர்**
4. லத்தீன் அமெரிக்காவுடன் "நல்ல அண்டை வீட்டுக்காரன்" எனும் கொள்கையைக் கடைப்பிடித்த அமெரிக்கக் குடியரசுத்தலைவர் யார்? **ரூஸ்வெல்ட்**
5. உலகத்தின் எந்தப்பகுதி டாலர் அரசியல் ஏகாதிபத்தியத்தை விரும்பவில்லை? **லத்தீன் அமெரிக்கா**
6. தென்னாப்பிரிக்காவின் இனஒதுக்கல் கொள்கையின் மூளையாகச் செயல்பட்டவர் யார்? **வெர்வோர்டு**
7. தென் அமெரிக்காவின் விடுதலையைத் துரித்தப்படுத்தியது எது? **நெப்போலியனின் படையெடுப்புகள்**
8. லத்தீன் அமெரிக்க விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீட்டை நியாயப்படுத்துவதற்காக மன்றோ கொள்கையில் திருத்தம் கொண்டு வந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் யார்? **தியோடர் ரூஸ்வெல்ட்**

அலகு — 3

1. ஜப்பான் சரணடைவதாக எப்போது முறைப்படி கையெழுத்திட்டது? **செப்டம்பர் 2, 1945**
2. பன்னாட்டுச் சங்கம் உருவாக்கப்படுவதில் முன்முயற்சி எடுத்தவர் யார் ? **உட்ரோவில்சன்.**
3. ஜப்பானியக் கப்பற்படை அமரிக்க கப்பற்படையால் எங்கே தோற்கடிக்கப்பட்டது? **மிட்வே போர்.**
4. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கே வீசியது? **ஹிரோஷிமா**
5. ஹிட்லர் எவரை மிகவும் கொடுமைப்படுத்தினார்? **யூதர்கள்**
6. ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்? **சேம்பர்லின்**
7. எப்போது ஐக்கிய நாடுகள் சபையின் பட்டய சாசனம் கையெழுத்தானது? **ஜீன் 26, 1945**
8. பன்னாட்டு நீதிமன்றத்தின் தலைமையகம் எங்கே அமைந்துள்ளது? **தி ஹேக்**

DIRECTORATE OF SCHOOL EDUCATION PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 4

1. வம்போவா இராணுவக் கழகத்தின் முதல் இயக்குனர் யார்? ஷியாங்-கே-ஷேக்
2. எந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பொதுவுடைமைக் கொள்கையைக் கட்டுக்குள் அடக்க ஒரு கொள்கை வரைவை முன் வைத்தா ட்ரூமென்
3. சீனாவில் மக்கள் அரசியல் கலந்தாய்வு மாநாடு எப்போது நடைபெற்றது? செப்டம்பர் 1949
4. அமெரிக்க ஐக்கிய நாடும் அதன் ஐரோப்பிய நேச நாடுகளும் சேர்ந்து சோவியத் நாட்டின் ஆக்கிரமிப்பைத் தவிர்க்க ஏற்படுத்திய அமைப்பின் பெயர் நேட்டோ ஆகும்.
5. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செயற்குழுவிற்கு 1969இல் தலைவராகப் பதவியேற்றவர் யார்? — யாசர் அராபத்
6. வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் எந்த ஆண்டு ஒன்று சேர்க்கப்பட்டது? 1976
7. அரேபியக் கூட்டமைப்பு எவ்விடத்தில் ஏற்படுத்தப்பட்டது? கெய்ரோ
8. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது? 1991

அலகு — 5

1. எந்த ஆண்டில் உடன்கட்டை ஏறுதல் (சதி) ஒழிக்கப்பட்டது? 1829
2. தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பெற்ற சமாஜத்தின் பெயர் யாது? ஆரிய சமாஜம்
3. யாருடைய பணியும் இயக்கமும், 1856 ஆம் ஆண்டு விதவை மறுமண சீர்திருத்தச் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிகோலியது? ஈஸ்வர் சந்திர வித்யாசாகர்
4. "ராஸ்ட் கோப்தார்" யாருடைய முழக்கம்? பார்சி இயக்கம்
5. நாம்தாரி இயக்கத்தை உருவாக்கியவர் யார்? பாபா ராம் சிங்
6. சுவாமி ஸ்ரத்தானந்தா என்பவர் யார்? ஆரிய சமாஜத்தில் பிளவை ஏற்படுத்தியவர்
7. விதவை மறுமணச் சங்கத்தை ஏற்படுத்தியவர் யார்? M.G. ரானடே
8. சத்யார்த்த பிரகாஷ் எனும் நூலின் ஆசிரியர் யார்? தயானந்த சரஸ்வதி

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 6

1. கிழக்கிந்திய கம்பெனியின் நாடுபிடிக்கும் ஆசையை எதிர்த்து நின்ற முதல் பாளையக்காரர் யார்? பூலித்தேவர்
2. கர்நாடகப் போர்களில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட செலவினங்களுக்காக கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து கடனாகப் பணத்தை வாங்கியவர் யார்? ஆற்காட்டு நவாப்
3. சந்தா சாகிப்பின் மூன்று முகவர்களோடும் நெருங்கிய நட்பினை ஏற்படுத்திக் கொண்டவர் யார்? பூலித்தேவர்
4. சிவசுப்பிரமணியனார் எங்கு தூக்கிலிடப்பட்டார்? நாகாலபுரம்
5. திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்? மருது சகோதரர்கள்
6. வேலூர் புரட்சி எப்போது வெடித்தது? 1806 ஜீலை 10
7. வேலூர் கோட்டையில் புதிய இராணுவ விதிமுறைகளை அறிமுகப்படுத்தக் காரணமாயிருந்த தலைமை தளபதி யார்? சர் ஜான் கிரடாக்
8. வேலூர் புரட்சிக்குப் பின் திப்பு சுல்தானின் மகன்கள் எங்கு அனுப்பப்பட்டார்கள்? கல்கத்தா

அலகு — 7

1. 1818 ஆம் ஆண்டு கிழக்கு வங்காளத்தல் ஹாஜு "ஷரியத்துல்லா" கீழ்க்கண்டவற்றில் எதனைத் தொடங்கினார்? ஃபராசி இயக்கம்
2. நிலம் கடவுளுக்குச் சொந்தம் என்று அறிவித்ததுடன் நிலத்தின் மீது வரிவிதிப்பதோ வாடகை வசூலிப்பதோ இறைச் சட்டத்திற்கு எதிரானது என்று கூறியவ டு டு மியான்
3. நிரந்தரக் குடியிருப்பின் கீழ் ஜமீன்களை உருவாக்கும் திட்டத்தின்படி தங்கள் சொந்த நிலத்தை விட்டு விரட்டப்பட்டவர்கள் யார்? சாந்தலர்கள்
4. கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதி யார்? பிபின் சந்திர பால்
5. வங்கப்பிரிவினை எந்த நாளில் நடைமுறைக்கு வந்தது? 1905 அக்டோபர் 16
6. சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம் எந்தப் பின்னணியில் நிறைவேற்றப்பட்டது? முண்டா கிளர்ச்சி

7. 1916 ஆம் ஆண்டு ஏப்ரலில் தன்னாட்சி இயக்கத்தை முதலில் தொடங்கியவர் யார்? **திலகர்**
8. நீல் தர்ப்பன் நாடகம் மூலமாக இண்டிகோ பயிரிடும் விவசாயிகளின் இன்னல்கள் குறித்து ஆங்கிலேயரின் கவனத்துக்கு கொண்டு சென்றவர் யார்? **தீன பந்து மித்ரா**

அலகு — 8

1. அமிர்தரஸில் ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர் யார்? **சைஃபுதீன் கிச்லு மற்றும் சத்தியா பால்**
2. இந்திய தேசிய காங்கிரஸின் எந்த அமர்வில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கப்பட்டது? **நாக்பூர்.**
3. விடுதலை நாளாக கீழ்க்ண்டவற்றில் எந்த நாள் அறிவிக்கப்பட்டது? **1930 ஜனவரி 26**
4. முதலாவது வனங்கள் சட்டம் எந்த ஆண்டில் இயற்றப்பட்டது? **1865**
5. 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது? **கோவில் நுழைவு நாள்**
6. மாகாண தன்னாட்சியை அறிமுகம் செய்த சட்டம் எது? **இந்திய அரசுச் சட்டம் 1935**
7. காந்தியின் வேட்பாளாரான பட்டாபி சீதாராமய்யாவை வீழ்த்தி 1939 ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைவராக பதவிக்கு வந்தவர் யார்? **சுபாஷ் சந்திர போஸ்**
8. 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்தபோது காந்தியடிகள் எங்கிருந்தார்? **நவகாளி**

அலகு — 9

1. சென்னை மகாஜன சபையின் முதல் தலைவர் யார்? **P. ரங்கையா**
2. இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு / அமர்வு எங்கே நடைபெற்றது?**ஆயிரம் விளக்கு**
3. அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது எனக் கூறியவர் யார்? **அன்னிபெசன்ட்**
4. கீழ்க்காண்பனவற்றில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் அதிகாரபூர்வமான ஆங்கிலச் செய்தித்தாள் எது? **ஜஸ்டிஸ்**
5. கீழ்காண்பவர்களுள் சுயராஜ்ஜியவாதி யார்? **S. சத்தியமூர்த்தி**
6. சென்னைக்கருகேயுள்ள உதயவனத்தில் சத்யாகிரக முகாமை அமைத்தவர் யார்? **T. பிரகாசம்**
7. இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடத்தப்பெற்றது? **சேலம்**
8. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது ராணுவத்துடனான காங்கிரஸ் தொண்டர்களின் மோதல் நடைபெற்ற இடம் எது? **மதுரை**

அலகு — 10

1. இந்தியாவைச் சேர்ந்த சமூக சீர்த்திருத்தவாதிகளின் முன்னோடி **ராஜா ராம்மோகன்ராய்** ஆவார்.
2. 1709ஆல் தரங்கம்பாடியில் **சீகன்பால்கு** ஒரு முழுமையான அச்சகத்தை நிறுவினார்.
3. **குடியரசு** சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரப்பூர்வச் செய்தித்தாள் ஆகும்.
4. சமயம் அகற்றப்பட்ட அவ்விடத்தில் **பகுத்தறிவுவாதம்** வைக்கப்பட வேண்டுமென பெரியார் விரும்பினார்.
5. 1893இல் ஆதி திராவிட மகாஜன சபையை **இரட்டைமலை சீனிவாசன்** நிறுவினார்.
6. இந்தியாவின் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட தொழிற்சங்கம் **1918** இல் உருவாக்கப்பட்டது.
7. அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய **பணியாளர் தேர்வு வாரியம்** நீதிக் கட்சியால் நிறுவப் பெற்றது.
8. சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து முதன் முறையாகச் சட்டமேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் **எம்.சி.ராஜா**

DIRECTORATE OF SCHOOL EDUCATION PUDUCHERRY
S.GARATHAI NOKKI 2019-20

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

அலகு — 1

1. 1894 ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.
2. 1913 ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட லண்டன் உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதிய நாடு உருவாக்கப்பட்டது.
3. 1902 ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.
4. பால்கனில் மாசிடோனியா நாடு பல்வகை இன மக்களைக் கொண்டிருந்தது.
5. டானென்பர்க் போரில் ரஷ்யா பேரிழப்புகளுக்கு உள்ளானது.
6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் கிமளன்சோ ஆவார்.
7. லெனின் போல்ஷ்விக் அரசை நிறுவுவதற்கு முன்னர், தாராளவாதிகள்,மிதவாதிகள், சோசலிஸ்ட்டுகள் ஆகியோரின் புதியக் கூட்டணிக்கு கெரன்ஸ்கி பிரதமராக தலைமை ஏற்றார்,
8. 1925 ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

அலகு — 2

1. சமூக ஜனநாயகக் கட்சியை நிறுவியவர் பெர்ட்டினன்ட் லாஸ்ஸல்வி.
2. நாசிச கட்சியின் பிரச்சாரங்களுக்குத் தலைமையேற்றவர் ஜோசப் கோய பெல்ஸ்.
3. வியட்நாம் தேசியவாதிகள் கட்சி 1927 இல் நிறுவப்பட்டது.
4. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை கெஸ்டபோ என அழைக்கப்பட்டது.
5. தென்னாப்பிரிக்க ஒன்றியம் 1910 ஆண்டில் மே மாதம் உருவானது.
6. ஆப்ரிக்க தேசியக் காங்கிரஸ் தேசிய தலைவான நெல்சன் மண்டலோ 27 ஆண்டுகள், சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.
7. அஸ்டெக்குகள் ஒரு ராணுவ நாடாகும்.
8. **போயர்கள் ஆப்பிரிக்க நேர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்.**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 3

1. இராணுவ நீக்கம் செய்யப்பட்ட ரைன்லாந்து பகுதியை ஹிட்லர் தாக்கினார்
2. இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் ஆகியவற்றிற்கிடையேயான ஒப்பந்தம் ரோம்—பெர்லின்—டோக்கியோ அச்சு உடன்படிக்கை என அழைக்கப்பட்டது.
3. F.D. ரூஸ்வெல்ட் கடன் குத்தகைத் திட்டத்தைத் தொடக்கி வைத்தார்.
4. 1940இல் ராஜினாமா செய்த பிரிட்டன் பிரதமர் சேம்பர்லின் ஆவார்.
5. “இவ்வளவு குறைவான நபர்களுக்கு இவ்வளவு அதிகமானோர் இவ்வளவு அதிமாக கடமைப்பட்டிருப்பது” என ராயல் ஏர்போர்ஸ் விமானப்படை ன் வீரத்திற்கு சர்ச்சில் புகழாரம் சூட்டினார்.
6. ரேடார் என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி
7. உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் மனித உரிமைகள் குறித்து 30 பிரிவுகளைக் கொண்டிருந்தது.
8. பிரிட்டனில் இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் வாக்களிப்பின் மூலம் அதிகாரத்தில் அமர்த்தப்பட்டவர் தொழிலாளர் கட்சியை சேர்ந்த கிளமண்ட் அலி ஆவார்.

அலகு — 4

1. நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர் டாக்டர் சன்யாட்சென்
2. 1918இல் பீகிங் பல்கலைக்கழகத்தில் மார்க்ஸியக் கோட்பாட்டை அறியும் அமைப்பு நிறுவப்பட்டது.
3. டாக்டர் சன் யாட் சென்னின் மறைவுக்குப் பின்னர் கோமிங்டாங் கட்சியின் தலைவராக இருந்தவர் ஷியாங் கே ஷேக்

4. அமைதியையும் பாதுகாப்பையும் விரும்பிய அரபுநாடுகளுக்கு திறந்தே இருந்த ஒப்பந்தம் பாக்தாத் ஒப்பந்தம் (சென்டோ)
5. துருக்கி அரபுப் பேரரசை ஏற்படுத்தும் நோக்கைக் கொண்டிருந்த ஒப்பந்தம் வெர்செய்ல்ஸ்
6. ஜெர்மனி நேட்டோவில் 1955 ஆண்டு இணைந்தது.
7. ஐரோப்பிய குழுமத்தின் தலைமையகம் ஸ்ட்ராஸ்பர்க் நகரில் அமைந்துள்ளது.
8. ஐரோப்பிய இணைவை உறுதி செய்ய 7 பிப்ரவரி 1992இல் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் மாஸ்டிரிக்ட் (நெதர்லாந்து)

அலகு — 5

1. ராமலிங்க அடிகள் (அ) வள்ளலார் சமரச வேத சன்மார்க்க சங்கத்தை நிறுவினார்.
2. புனே சர்வஜனிக் சபாவை நிறுவியவர் மகாதேவ் ரானடே.
3. சத்யசோதக் சமாஜத்தைத் தொடங்கியவர் ஜோதிபா பூலே.
4. குலாம்கிரி நூலை எழுதியவர் ஜோதிபா பூலே
5. சத்யார்த்த பிரகாஷ் எனும் நூல் ஒரு கடவுள் வழிபாடு, உருவ வழிபாட்டை நிராகரித்தல், பிராமிணர் மேலாதிகத்தை மறுத்தல் நேர்மறைக் கொள்கைகளை பட்டியலிடுகிறது.
6. ராமகிருஷ்ணா மிஷன் சுவாமி விவேகானந்தர் ஆல் நிறுவப்பட்டது.
7. சிங்சபா அகாலி இயக்கத்தின் முன்னோடியாகும்.
8. ஸ்ரீ நாராயண தர்மபரிபாலன யோகம் கேரளாவின் சாதியக் கட்டுமானத்தில் வியக்கத்தகு மாற்றங்களைக் கொண்டு வந்தது.
9. “ஒரு பைசா தமிழன்” பத்திரிக்கையைத் துவக்கியவர் அயோத்தி தாசர்.

அலகு- 6

1. பாளையக்காரர் முறை தமிழகத்தில் விஸ்வநாத நாயக்கர் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
2. சிவகிரி பாளையக்காரத்தைத் தவிர மேற்குப்பகுதிகளில் வீற்றிருந்த பாளையக்காரர்கள் அனைவரும் பூலித்தேவரை ஆதரித்தனர்
3. வேலுநாச்சியாரும் அவரது மகளும் எட்டாண்டுகளாக கோபால நாயக்கர் பாதுகாப்பில் இருந்தனர்.
4. கட்டபொம்மனை சரணடையக் கோரும் தகவலைத் தெரிவிக்க பானெர்மென் இராமலிங்கர் என்பவரை அனுப்பி வைத்தார்.
5. கட்டபொம்மன் கயத்தாறு என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.
6. மருது சகோதரர்களின் புரட்சி பிரிட்டிஷ் குறிப்புகளில் இரண்டாவது பாளையக்காரர் போர் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது.
7. ஃபதே ஹைதர் என்பவர் புரட்சிக்காரர்களால் வேலூர் கோட்டையின் புதிய சுல்தானாக அறிவிக்கப்பட்டார்.
8. வேலூர் கோட்டையில் புரட்சியை ஒடுக்கியவர் ஜில்லஸ்பி ஆவார்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY

அலகு — 7

1. 1757ஆம் ஆண்டு ராபர்ட் கிளைவுக்கு ஜகத்சேத்துகள் என்று அழைக்கப்பட்ட வங்காளத்தின் கடன் வாங்குவோர் நிதி ஆதரவு தந்தனர்.
2. மன்னராட்சிக்கும் நிலசுவான்தாரர்களுக்கும் எதிரான வஹாபி கிளர்ச்சி இயக்கம் 1827 ஆம் ஆண்டு வாக்கில் தொடங்கப்பட்டது.
3. சோட்டா நாக்பூர் பகுதியில் நடந்த மிகப்பெரிய பழங்குடியினர் கிளர்ச்சி கோல் கிளர்ச்சி
4. சோட்டா நாக்பூர் குத்தகை சட்டம் பழங்குடியினரல்லாத மக்களை பழங்குடி நிலத்தில் நுழைய தடைவிதித்தது.
5. 1854ஆம் ஆண்டு வாக்கில் பீர்சிங் தலைமையில் சமூகக் கொள்ளை நடவடிக்கைகள் நடந்தன.
6. 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சியில் கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்ட ஆங்கிலேய தளபதி மேஜர் ஜெனரல் ஹக்வீலர்
7. சோட்டா நாக்பூர் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு 1908.
8. W.C பானர்ஜி இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு 1885

அலகு — 8

1. காந்தியடிகள் முதல் வகுப்பு ரயில் பெட்டியில் இருந்து **பீட்டர் மாரிட்ஸ் பெர்க்** ரயில் நிலையத்தில் கீழிறக்கப்பட்டார்.
2. காந்தியடிகளின் அரசியல் குரு **கோபால கிருஷ்ண கோகலே** ஆவார்.
3. கிலாபத் இயக்கத்துக்கு **மௌலானா முகமது அலி மற்றும் மௌலானா சௌகத் அலி** தலைமை ஏற்றார்.
4. 1919 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் மாகாணங்களில் **இரட்டை ஆட்சி** அறிமுகம் செய்தது.
5. வடமேற்கு எல்லை மாகாணத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தை தலைமையேற்று நடத்தியவர் **கான் அப்துல் காஃபர் கான்**
6. சிறுபான்மையினர் மற்றும் ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கு தனித் தொகுதிகளை வழங்கும் **வகுப்புவாரி ஒதுக்கீடு** ஐ ராம்சே மெக்டொனால்டு அறிவித்தார்.
7. **உஷா மேத்தா** என்பவர் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின்போது காங்கிரஸ் வானொலியை திரைமறைவாக செயல்படுத்தினார்.
8. “பாகிஸ்தான்” என்ற வார்த்தைப் பதத்தை **ரஹ்மத் அலி** உருவாக்கினார்.

அலகு — 9

1. சென்னை உயர் நீதிமன்றத்தில் பணியமர்த்தப்பட்ட முதல் இந்திய நீதிபதி **T. முத்துசாமி** ஆவார்.
2. தனது எழுத்துக்களின் வாயிலாக ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டலை **G. சுப்பிரமணியம்** அம்பலப்படுத்தினார்.
3. பாரத மாதா சங்கம் எனும் ரகசிய அமைப்பை நீலகண்ட பிரம்மச்சாரி தொடங்கினார்.
4. சென்னையில் தொழிற்சங்கங்களைத் தொடங்குவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் **B.P. வாடியா**
5. பிராமணரல்லாத மாணவர்களுக்காக தங்கும் விடுதியை நிறுவியவர் **C. நடேசனார்** ஆவார்.
6. சென்னையில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தவர் **ராஜாஜி**.
7. யாகுப் ஹசன் முஸ்லிம் லீக்கின் சென்னைக் கிளையை உருவாக்கியவராவார்.
8. 1932 ஜனவரி 26இல் **பாஷ்யம்** புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக் கொடியை ஏற்றினார்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAINOKKI 2019-20

அலகு — 10

1. முதன் முதலாக அச்சேறிய ஐரோப்பிய மொழி அல்லாத மொழி தமிழ் ஆகும்.
2. புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியை உருவாக்கியவர் **F.W. எல்லிஸ்**
3. **மறைமலையடிகள்** தமிழ் மொழியியல் தூய்மை வாதத்தின் தந்தையெனக் கருதப்படுகிறார்
4. தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை முதலில் அங்கீகரித்தது **நீதிக்கட்சி அரசு** ஆகும்.
5. சூரியநாரயண சாஸ்திரி எனும் பெயர் **பரிதிமாற்கலைஞர்** என மாற்றம் பெற்றது.
6. **ஆபிரகாம் பண்டிதர்** தமிழ் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
7. இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் **முத்துலட்சுமி அம்மையார்**.

## III. பொருத்துக

அலகு —1

| | | | |
|---|---|---|---|
| 1. | பிரெஸ்ட்-லி-லிடோவஸ்க் உடன்படிக்கை | - | ரஷ்யாவும் ஜெர்மனியும் |
| 2. | ஜிங்கோயிசம் | - | இங்கிலாந்து |
| 3. | கமால் பாட்சா | - | துருக்கி |
| 4. | எம்டன் | - | சென்னை |
| 5. | கண்ணாடி மாளிகை | - | வெர்செய்ல்ஸ் |

அலகு — 2

1. டிரான்ஸ்வால் - தங்கம்
2. டோங்கிங் - கொரில்லா நடவடிக்கைகள்
3. ஹின்டன்பர்க் - ஜெர்மனி
4. மூன்றாம் ரெய்க் - ஹிட்லர்
5. மாட்டியோட்டி - இத்தாலி

அலகு —3

1. பிளிட்ஸ்கிரிக் - மின்னல் வேகத்தாக்குதல்
2. ராயல் கப்பற்படை - பிரிட்டன்
3. கடன் குத்தகை - ரூஸ்வெல்ட்
4. வோல்கா - ஸ்டாலின் கிரேடு
5. க்வால்டல் கெனால் - சாலமன் தீவு

அலகு —4

1. டாக்டர் சன் யாட் சென் - கோ மிங்டாங்
2. சிங்மென் ரீ - கொரியா
3. அன்வர் சாதத் - எகிப்து
4. ஹோ சி மின் - வடக்கு வியட்நாம்
5. நிகோடின் டியம் - தெற்கு வியட்நாம்

அலகு —5

1. அய்யாவழி - வைகுண்ட சுவாமிகள்
2. திருவருட்பா - ஜிவகாருண்யப்பாடல்கள்
3. பாபா தயாள்தாஸ் - நிரங்கரி இயக்கம்
4. ஈஸ்வர்சந்திர வி த்யாசாகர் - விதவை மறுமண சீர்திருத்தச்சட்டம்
5. தேவேந்திரநாத் - ஆதி பிரம்மசமாஜம்

அலகு —6

1. தீர்த்தகிரி - ஓடாநிலை
2. கோபால நாயக்கர் - திண்டுக்கல்
3. பானெர்மென் - இராமலிங்கனார்
4. சுபேதார் ஷேக் ஆதம் - வேலூர் புரட்சி
5. கர்னல் போன்கோர்ட் - வேலூா கோட்டை

அலகு —7

1. வஹாபி கிளர்ச்சி - டிடுமிர்
2. முண்டா கிளர்ச்சி - ராஞ்சி
3. பேகம் ஹஸ்ரத் மஹால் - லக்னோ
4. கன்வர் சிங் - பீகார்
5. நானாசாகீப் - பேஷ்வா இரண்டாம் பாஜிராவ்

அலகு —8

1. ரௌலட் சட்டம் - கருப்புச்சட்டம்
2. ஒத்துழையாமை இயக்கம் - பட்டங்களைத் திரும்ப ஒப்படைத்தல்
3. 1919 ஆம் ஆண்டில் இந்திய அரசு சட்டம் - இரட்டை ஆட்சி
4. இந்திய பொதுவுடைமை கட்சி - M. N.ராய்
5. 16 ஆகஸ்ட் 1946 - நேரடி நடவடிக்கை நாள்

DIRECTORATE OF SCHOOL EDUCATION PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு —9

| | | |
|---|---|---|
| 1. சென்னைவாசிகள் சங்கம் | - | சித்திரவதை ஆணையம் |
| 2. ஈ.வே.ரா. | - | வைக்கம் வீரர் |
| 3. S.N. சோமையாஜீலு | - | நீல் சிலையை அகற்றுதல் |
| 4. வேதாரண்யம் | - | உப்பு சத்தியாகிரகம் |
| 5. தாளமுத்து | - | இந்தி எதிர்ப்பு போராட்டம் |

அலகு —10

| | | |
|---|---|---|
| 1. திராவிடர் இல்லம் | - | நடேசனார் |
| 2. தொழிலாளன் | - | சிங்காரவேலர் |
| 3. தனித்தமிழ் இயக்கம் | - | மறைமலையடிகள் |
| 4. ஜீவிய சரித சுருக்கம் | - | இரட்டைமலை சீனிவாசன் |

## IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 1

1. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்
   i) முதல் உலகப்போர் வெடித்தபோது இத்தாலி நடுநிலைமை வகிக்கும் நாடாக இருந்தது.
   ii) வெர்செய்ல்ஸ் அமைதி உடன்படிக்கையில் இத்தாலி பெரும் ஏமாற்றமடைந்தது.
   iii) செவ்ரஸ் உடன்படிக்கை இத்தாலியுடன் கையெழுத்திடப்பட்டது.
   iv) சிறிய இடங்களான ட்ரைஸ்டி, இந்தியா, தெற்கு டைரோல் போன்றவை கூட இத்தாலிக்கு மறுக்கப்பட்டது.

   <u>அ) i), ii) ஆகியன சரி</u>

2. i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது
   ii) துருக்கி மைய நாடுகள் பக்கம் நின்று போரிட்டது.
   iii) பிரிட்டன் துருக்கியைத் தாக்க துருக்கி கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றியது.

   (ஈ) <u>i), ii), iv) ஆகியன சரி</u>

3. கூற்று : ஜெர்மனியும் அமெரிக்காவும் மலிவான தொழிற்சாலைப் பொருள்களை உற்பத்தி செய்து இங்கிலாந்தின் சந்தையைக் கைப்பற்றின.
   காரணம் : இருநாடுகளும் தங்கள் தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்தன.

   <u>ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல</u>

4. கூற்று : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தகளரியான போர்களில் முடிந்தன.
   காரணம் : சொந்தநாட்டு மக்களிடமிருந்து கடுமையாக எதிர்ப்பு இருந்தது.

   <u>அ) காரணம், கூற்று ஆகிய இரண்டுமே சரி</u>

அலகு — 2

1. i) முதல் உலகப்போரின் போது ஆஸ்திரியாவை தெற்கு முனைப்போரில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபட வைப்பதே இத்தாலியின் முக்கியக் கடமையாக இருந்தது.
   ii) இத்தாலியைக் காட்டிலும் நீண்ட காலங்கழித்தே ஜெர்மனி பாசிசத்தைக் கைக்கொண்டது.
   iii) அமெரிக்காவில் மிகப்பெரியும் பங்குச்சந்தை வீழ்ச்சி 1929 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாளில் ஏற்பட்டது.

iv) ஆப்பிரிக்க தேசிய காங்கிரசின் மீதானத் தடை 1966இல் விலக்கிக் கொள்ளப்பட்டது

(ஈ) **i), ii), iii) ஆகியன சரி**

2\. கூற்று : தற்காப்புப் பொருளாதாரக் கொள்கையை முன்னீறுத்தியப் பொருளாதார தேசியம் எனும் புதிய அலையால் உலக வணிகம் பாதிக்கப்பட்டது.
காரணம் : அமெரிக்கா, கடன்பட்ட நாடுகளுக்குப் பொருளாதார உதவி செய்ய விருப்பமில்லாமல் இருந்ததனால் இந்நிலை உண்டானது.

**ஆ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல**

3\. கூற்று : 1884-85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாடு காலனியாதிக்க சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்களின் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானித்தது.
காரணம் : ஆங்கிலேயருக்கும், போயர்களுக்கும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற போர் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பானதாகும்.

**அ) கூற்று, காரணம் ஆகிய இரண்டுமே சரி**

அலகு — 3

1\. i) வங்கித் தொழில் யூதர்களின் முக்கியமான வணிக நடவடிக்கையாகும்
ii) ஹிட்லர் யூதர்களைத் துன்புறுத்தினார்
iii) சித்ரவதை முகாம்களில் யூதர்கள் கொல்லப்பட்டனர்.
iv) தற்போது ஐக்கிய நாடுகள் சபை 129 நாடுகளை உறுப்பு நாடுகளாக கொண்டுள்ளது.

அ) **i), ii),(iii) சரி**

2\. கூற்று : குடியரசுத்தலைவர் ரூஸ்வெலட் அமெரிக்கா தனது தனித்திருக்கும் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்.
காரணம் : அவர் 1941 இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்

**அ) கூற்றும் காரணமும் சரி**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 4

1\. i) கற்றறிந்த சிறுபான்மையினரின் தாக்கத்தில் சீனாவின் (1898) இளம் பேரரசர் துவக்கிய சீர்திருத்தங்கள் நூறு நாள் சீர்திருத்தம் என்று அறியப்படுகிறது.
ii) கோமிங்டாங் கட்சி தொழிலாளர்களையும் விவசாயிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியது.
iii) மஞ்சூரியா மீதும் ஷாண்டுங் மீதும் ஜப்பான் பொருளாதாரக் கட்டுப்பாட்டை விதிக்க யுவான் ஷி-கே உடன்பட்டதால் தேசியவாதிகள் பார்வையில் அவர் செல்வாக்கு இழந்தார்.
iv) சோவியத் நாடு இருபது ஆண்டு காலத்திற்கும் மேலாக சீன மக்கள் குடியரசை அங்கீகரிக்க மறுத்தது.

**(இ) i) மற்றும் iii), சரி**

2\. i) கிழக்கு ஐரோப்பாவில் 1948இல் சோவியத்நாடு நிறுவிய இடதுசாரி அரசுகளை சோவியத் இராணுவம் விடுதலை செய்தது
ii) வடக்கு அட்லாண்டிக் பகுதியில் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்யவே நேட்டோ உருவாக்கப்பட்டது.
iii) சீட்டோவின் உறுப்பு நாடுகள் அப்பகுதியில் மக்களாட்சி பரவுவதைத் தடுக்கும் நோக்கோடு செயல்பட்டார்கள்
iv) ஜப்பானுக்கெதிராக பிரிட்டன் அணுகுண்டைப் பயன்படுத்தியதின் மூலம் அது ரஷ்யாவுக்கு தன்னுடைய அழிக்கும் திறனை எடுத்துக்காட்ட விரும்பியது.

**(ஆ) i) மற்றும் ii) சரி**

3. கூற்று (கூ): அமெரிக்காவின் மார்ஷல் திட்டம் போரில் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளின் மறுநிர்மாணத்திற்காக முன்வைக்கப்பட்டது
காரணம் : அமெரிக்க நாடு அத்திட்டத்தின் மூலம் ஐரோப்பிய நாடுகளைத் தன் செல்வாக்கின் கீழ் கொண்டுவர நினைத்தது

<u>இ) கூற்றும் காரணமும் சரி, காரணம் கூற்றைத் துல்லியமாக விளக்குகிறது.</u>

அலகு — 5

1. i) ராஜா ராம் மோகன்ராய் ஒரு கடவுள் கோட்பாட்டை போதித்தார்
ii) அவர் உருவ வழிபாட்டை ஆதரித்தார்
iii) சமூகத் தீமைகளைக் கண்டனம் செய்வதை எதிர்த்து அவர் சிற்றேடுகளை வெளியிட்டார்.
iv) ராஜா ராம்மோகன் ராய் கவர்னர் வில்லியம் பெண்டிங்கால் ஆதரிக்கப்பட்டார்

<u>**இ) i) iii) iv) ஆகியன சரி**</u>

2. i) பிரார்த்தனை சமாஜம் டாக்டர் ஆத்மாராம் பாண்டுரங்கால் நிறுவப்பெற்றது
ii) இந்த சமாஜம் அனைத்துச் சாதியினரும் பங்கேற்கும் சமபந்திகளையும் சாதிக்கலப்புத் திருமணங்களையும் ஊக்குவித்தது.
iii) ஜோதிபா பூலே ஆண்களின் மேம்பாட்டிற்காகப் பணியாற்றினார்.
iv) பிரார்த்தனை சமாஜம் பஞ்சாலையைப் பிறப்பிடமாகக் கொண்டது.

**இ) i) மற்றும் ii) சரி**

3. i) ராமகிருஷ்ணா மிஷன் கல்வி, உடல் நலம் பேரிடர்களின் போது நிவாரணப் பணி செய்தல் போன்ற சமூகப் பணிகளில் செயலூக்கத்துடன்அ ஈடுபட்டது
ii) பேரின்பநிலை எய்தும் பழக்கங்களின் மூலம் ஆன்ம ரீதியாக இறைவனோடு இணைவதை
iii) ராமகிருஷ்ணா ராமகிருஷ்ணனை ஏற்படுத்தினார்.
iv) ராமகிருஷ்ணர் வங்கப்பிரிவினையை எதிர்த்தார்

**ஆ) <u>i), மற்றும் ii) சரி</u>**

4. கூற்று : ஜோதிபா பூலே ஆதரவற்றோருக்கான விடுதிகளையும் விதவைகளுக்கான விடுதிகளையும் திறந்தார்.
காரணம் : ஜோதிபா பூலே குழந்தைத் திருமணத்தை எதிர்த்தார். விதவை மறுமணத்தை ஆதரித்தார்.
<u>ஆ) கூற்று சரி, காரணம் கூற்றுக்குப் பொருத்தமானதாக உள்ளது</u>

அலகு — 6

1. பாளையக்காரர் முறை காகத்தீயப் பேரரசின் நடைமுறையில் இருந்தது?
i) கான் சாகிப்பின் இறப்பிற்குப் பின் பூலித்தேவர் நெற்கட்டும் செவலை 1764இல் மீண்டும் கைப்பற்றினார்
ii) கம்பெனி நிர்வாகத்திற்கு தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதால் யூசுப்கான் துரோகி என்று குற்றம் சுமத்தப்பட்டு 1764இல் தூக்கிலிடப்பட்டார்
iii) ஒண்டிவீரன் கட்டபொம்மனின் படைப்பிரிவுகளில் ஒன்றைத் தலைமையேற்று வழிநடத்தினார்

<u>**ஆ) i) ii) மற்றும் iii) ஆகியவை சரி**</u>

2. i) கர்னல் கேம்ப்கெல் தலைமையின் கீழ் ஆங்கிலேயப் படைகள் மாபூஸ்கானின் படைகளோடு இணைந்து சென்றன
ii) காளையார்கோவில் போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டப் பின் வேலுநாச்சியார் மீண்டும் அரியணையப் பெறுவதற்கு மருது சகோதரர்கள் துணைபுரிந்தனர்

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHI WORK 2019-20

iii) திண்டுக்கல் கூட்டமைப்புக்கு கோபால நாயக்கர் தலைமையேற்று வழிநடத்தினார்
iv) காரன்வாலிஸ் மே 1799இல் கம்பெனிப் படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டார்

**<u>ஆ) ii) மற்றும் iii) ஆகியவை சரி</u>**

3. கூற்று : பூலித்தேவர், ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற முயன்றார்
காரணம் : மராத்தியர்களோடு ஏற்கனவே தொடர் போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் ஹைதல் அலியால் பூலித்தேவருக்கு உதவ முடியாமல் போனது

**(இ) <u>கூற்றும் மற்றும் காரணம் ஆகியவை சரி காரணம் கூற்றைச் சரியாகவே விளக்குகிறது</u>**

4. கூற்று : புதிய இராணுவ நெறிமுறை மட்டுமில்லாமல் தலைப்பாகையில் வைக்கப்படும் தோலிலான இலட்சினையும் கடும் எதிர்ப்பை விளைவித்தது
காரணம் : தோல் இலட்சினை விலங்குகளின் தோலில் செய்யப்பட்டது

<u>ஆ) கூற்று மற்றும் காரணம் ஆகியவை சரி காரணம் கூற்றைச் சரியாகவே விளக்குகிறது</u>

அலகு — 7

1. i) மிர் ஜர்ப்பரிடம் இருந்து 2 கோடியே 25 லட்ச ரூபாயை வாங்கிய கிழக்கு இந்திய கம்பெனி அதனை பிரிட்டனில் தொழிற்புரட்சி மேம்பட முதலீடு செய்தது
ii) 1831-1832 ஆம் ஆண்டு அரசு அதிகாரிகள் மற்றும் கடன் கொடுப்போருக்கு எதிரான கிளர்ச்சியைக் கோல் மக்கள் ஒருங்கிணைந்தனர்
iii) 1855ம் ஆண்டில் சாந்தலர் கிளர்ச்சிக்கு சித்து, கணு ஆகிய இரண்டு சாந்தலர் சகோதரர்கள் தலைமை ஏற்றனர்
iv) 1879 ஆம் ஆண்டில் சாந்தலர்கள் வசம் இருந்த பகுதிகளை ஒழுங்குமுறைப்படுத்த ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

**அ) <u>i) ii) மற்றும் iii) சரியானவை</u>**

2. i) இஸ்லாமிய மதத்தின் சமத்துவ இயல்பை வலியுறுத்திய டுடுமியான் நிலம் கடவுளுக்குச் சொந்தமானது என்று அறிவித்தார்
ii) ஊழல்கறை படிந்த இந்திய ஆட்சியாளர்களின் வசம் இருந்த பகுதிகள்வாரிசு இழப்பு கொள்கையின்படி ஆங்கிலேய ஆட்சியின் கீழ் இணைக்கப்பட்டன.
iii) 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட பிறகு சட்டத்தைப் பின்பற்றாமல் இந்தியர்கள் பற்றிய வழக்குகளை விசாரித்து அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கவும் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.
iv) **1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சி** தோல்வி அடைந்ததற்கு ஆங்கிலேயருக்கு இந்திய இளவரசர்களும் ஜமீன்தாரர்களும் விசுவாசமாக இருந்ததும் அதற்கான பல்வேறு காரணங்களில் ஒன்றாகும்

**<u>இ) i) மற்றும் iv) சரியானவை</u>**

3. i) காலனி ஆட்சி பற்றி பொருளாதார விமர்சனத்தைச் செய்தது ஆரம்பகால இந்திய தேசியவாதிகளின் மிக முக்கியமான பங்களிப்புகளில் ஒன்றாகும்
ii) இந்தயாவில் வறுமை அதிகரிக்க சமய ரீதியிலான சுரண்டலே மிக முதன்மையான காரணம் என்று ஆரம்பகால காங்கிரஸ் தலைவர்கள் தெரிவித்தனர்
iii) சுயராஜ்ஜியம் அல்லது தன்னாட்சியை எட்டுவதே மிதவாத காங்கிரஸ் தலைவர்களின் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தது
iv) வங்காளத்தின் ஆதிக்கத்தை குறைப்பதையும் தேசியவாத இயக்கத்தை பலுவிழக்கச் செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு வங்கப் பிரிவினை நடந்தது

**ஆ) <u>i) மற்றும் iv) சரியானவை</u>**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

4. கூற்று : இந்திய வரலாற்றில் முதன் முறையாக காலனி ஆட்சியின் கீழ்அரசு வனங்களின் மீது நேரடி தனியுரிமையைக் கோரியது
காரணம் : இண்டிகோ விவசாயம் செய்யுமாறு விவசாயிகளை நிர்பந்திக்க தொழில் செய்வோர் மிரட்டல் மற்றும் வன்முறையைக் கையாண்டனர்

(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி ஆனால் காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் இல்லை.

5. கூற்று : பிரிட்டிஷ் அரசு 1857ஆம் ஆண்டில் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது
காரணம் : மையப்படுத்தப்பட்ட நிர்வாகம் இல்லாததால் கிளர்ச்சி தோல்வி கண்டது.

இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே சரி அத்துடன் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்

அலகு - 8

1. i) இந்திய பொதுவுடைமை கட்சி 1920 ஆம் ஆண்டு தாஷ்காண்டில் தொடங்கப்பட்டது
ii) சிங்கார வேலர் கான்பூர் சதித்திட்ட வழக்கில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்
iii) ஜெயபிரகாஷ் நாராயண், ஆச்சார்ய நரேந்திர தேவ், மினு மசானி ஆகியோர் தலைமையில் காங்கிரஸ் சமதர்ம கட்சி உருவானது
iv) வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் சமதர்மவாதிகள் பங்கேற்கவில்லை.

ஈ) i) ii) மற்றும் iii) சரியானது

2. i) இந்துஸ்தான் குடியரசு ராணுவம் 1924 ஆம் ஆண்டு கான்பூரில் உருவானது.
ii) ககோரி சதித்திட்ட வழக்கில் ராம் பிரசாத் பிஸ்மில் விசாரிக்கப்பட்டார்
iii) இந்துஸ்தான் சமதர்ம குடியரசு அமைப்பு சூர்யா சென் என்பவரால் உருவாக்கப்பட்டது
iv) சிட்டகாங் ஆயுதக்கிடங்கு தாக்குதல் B.K. தத்தால் நடத்தப்பட்டது

அ) i) மற்றும் ii) சரியானது

3. கூற்று : காங்கிரஸ் முதலாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டது
காரணம் : காங்கிரஸ் இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்ள காந்தி - இர்வின் ஒப்பந்தம் வழிசெய்தது

(இ) கூற்று தவறானது ஆனால் காரணம் சரியானது

4. கூற்று : காங்கிரஸ் அமைச்சரவைகள் 1939 ஆம் ஆண்டு பதவி விலகின
காரணம் : காங்கிரஸ் அமைச்சரவைகளை ஆலோசிக்காமல் இந்தியாவின் காலனி ஆதிக்க அரசு போரில் பங்கேற்றது.

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரியானது மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்

அலகு — 9

1. i) சென்னைவாசிகள் சங்கம் 1852இல் நிறுவப்பட்டது
ii) தொழில் வெளிவந்த தேசியப் பருவ இதழான சுதேசமித்திரன் 1891இல் தொடங்கப்பட்டது
iii) குடிமைப்பணித் தேர்வுகள் இந்தியாவில் மட்டுமே நடத்தப்படவேண்டுமென சென்னை மகாஜன சபை கோரியது
iv) சீனிவாசனார் ஒரு தீவிர தேசியவாதியாவர்

அ) i) மற்றும் ii) சரியானது

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
S.GARATHAROKKI 2019-20

2. i) ஒத்துழையாமை இயக்கத்தில் பெரியார் பங்கேற்கவில்லை
   ii) முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த யாகூப் ஹசனுடன் ராஜாஜி நெருக்கமாகப் பணியாற்றினார்
   iii) ஒத்துழையாமை இயக்கத்தில் தொழிலாளர்கள் கலந்து கொள்ளவில்லை
   iv) தமிழ்நாட்டில் கள்ளுக் கடைகளுக்கு முன்பாக மறியல் செய்யப்படவில்லை

ஆ) ii) சரியானது

3. கூற்று : நீதிக்கட்சி தன்னாட்சி இயக்கத்தை எதிர்த்தது
   காரணம் : தன்னாட்சி இயக்கம் பிராமணர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கிவிடுமென நீதிக்கட்சி அஞ்சியது

ஈ) கூற்று காரணம் ஆகிய இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்

4. கூற்று : பிராமணர் அல்லாதவர்க்கு சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் வேண்டும் என்ற பிரச்சனையைப் பெரியார் எழுப்பினார்
   காரணம் : காங்கிரஸின் முதல் அமைச்சரவையின் போது ராஜாஜி விற்பனை வரியை ரத்துச் செய்தார்

(ஆ) கூற்று சரி காரணம் தவறு

அலகு — 10

1. i) மிக முன்னதாகவே வெளியிடப்பட்ட தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812 இல் வெளியிடப்பட்டது
   ii) பனையோலைகளில் எழுதப்பெற்ற பல்வேறு தமிழ் இலக்கண இலக்கிய கையெழுத்துப் பிரதிகளை மறைமலையடிகள் சேகரித்துத் தொகுத்தார்
   iii) இராபர்ட் கால்டுவெல் திராவிட மொழிகளுக்கும் சமஸ்கிருதத்திற்கும் இடையில் இல்லாத ஒப்புமை திராவிட மொழிகளுக்கிடையே நெருக்கமாக நிலவுவதை நிரூபித்தார். தமிழின் தொன்மையையும் நிரூபித்தார்
   iv) திரு.வி.கல்யாணசுந்தரம் தொழில் சங்க இயக்கத்தின் தொடக்ககால முன்னோடியாக இருந்தார்

உ) i) iii) iv) சரியானது

2. i) இந்திய பெண்கள் சங்கத்தைத் தோற்றுவித்ததில் மார்க்ரெட் கசினும் ஒருவராவார்
   ii) பெரியார் தன் வாழ்நாள் முழுவதையுமு தானே உருவாக்கிய சிந்தனையாளர்கள், பகுத்தறிவாளர்கள் அமைப்புகளின் மூலமாக மூட நம்பிக்கைகளுக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொள்வதில் செலவழித்தார்
   iii) சிங்காரவேலர் இந்து மகாசபையின் தீவிர ஆதரவாளர் ஆவார்
   iv) தென்னிந்தியாவிலுள்ள சாதிமுறை வடக்யேயிலிருந்து வந்த பிராமணர்களின் வருகையோடு தொடர்புடையது என பெரியார் உறுதிபடக் கூறினார்.

இ) i), ii) iv) சரியானது

3. கூற்று : சென்னை மாகாணத்தில் 1920 முதல் 1937 வரை நீதிக்கட்சி தொடர்ந்து ஆட்சியில் இருந்தது
   காரணம் : இக்கால கட்டத்தில் இரட்டையாட்சிக்கு எதிராக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்தது

ஆ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல

4. கூற்று : முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்தபோது ஆங்கில அரசாங்கம் இந்தியாவில் போருக்குப் பின்னர், பிரதிநிதித்துவ நிறுவனங்களை அறிமுகம் செய்வது குறித்துப் பரிசீலனை செய்து கொண்டிருந்தது

DIRECTORATE OF SCHOOL EDUCATION PUDUCHERRY
S.GARATHAI NOKKI 2019-20

காரணம் : 1920-இல் இரட்டையாட்சியானது ஒரு அரசு முறையாக மாகாணங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**இ) கூற்று, காரணம் ஆகிய இரண்டும் சரி**

## V. தலைப்பு வினாக்கள்

அலகு -1

1. ஏகாதிபத்தியம்

(அ) முன்னுரிமை முதலாளித்துவம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
**இது அரசின் கட்டுபாடற்ற சுதந்திர வணிகம்**

(ஆ) ஜப்பான் எவ்வாறு ஒரு ஏகாதிபத்திய சக்தியாக வடிவெடுத்தது?
**மேற்கத்திய நாடுகளை பின்பற்றி**

(இ) **பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொழில்வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு காலனிகள் ஏன் தேவைப்பட்டன?**
**மூலப்பொருள், சந்தைகளின் தேவை அதிகரிப்பால்**

(ஈ) முதலாளித்துவம் உருவாக்கிய முரண்பாடுகள் யாவை?
**அதிக வறுமை- செல்வம், குடிசை பகுதி - கோபுரங்கள்**

2. ஜெர்மன் பேரரசர்

(அ) ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியமின் இயல்பு யாது?
**அவர் இரக்கமற்ற, ஆக்கரமிப்பு தன்மை கொண்டவர்**

(ஆ) ஜெர்மனின் வன்முறைசார் தேசியம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
**வெறிகொண்ட நாட்டுப்பற்று — குல்தூர் (KULTUR)**

(இ) மொராக்கோ விவகாரங்களில் கெய்சர் வில்லியம் தலையிட்டது ஏன்?
**மொராக்கோவை பிரான்ஸ் ஆக்கிரமித்ததால்**

(ஈ) ஜெர்மனியின் ஆப்பிரிக்கக் காலனிகளுக்கு என்ன நேர்ந்தது?
**நேச நாடுகளிடம் சரணடைந்தன**

3. பால்கன்போர்கள்

(அ) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது?
**துருக்கியை தாக்கி மாசிடோனியாவை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர**

(ஆ) முதல் பால்கன் போரின் விளைவுகள் யாவை?
**அல்பேனியா புதிய நாடு உருவானது**

(இ) இப்போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் யாவர்?
**துருக்கி - பல்கேரியா**

(ஈ) இரண்டாவது பால்கன்போரில் இறுதியில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயரென்ன?
**புகாரெஸ்ட் உடன்படிக்கை**

அலகு — 2

1. இந்தோ-சீனாவின் காலனிய எதிர்ப்புப் போராட்டம்

(அ) காலனியாதிக்க நீக்கம் எனும் கோட்பாட்டைத் தெளிவுபட விளக்குக.
**காலனிகளின் கட்டுபாடுகளைச் சொந்த தேசிய அரசிடம் வழங்குவது**

(ஆ) இந்தோ-சீனாவை உருவாக்கிய மூன்று நாடுகள் எவை?
**ஸ்ரீலாவோஸ் காம்போடியா, வியம்நாம்**

(இ) காலனியாதிக்க எதிர்ப்புணர்வுகள் வளர்வதற்கு கம்யூனிசச் சிந்தனைகள் எவ்வாறு உதவின?

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

**இந்தோ-சீனாவின் செல்வம் காலணி ஆதிக்க சக்திக்கே பயன்படுவதை பலர் உணர்ந்தனர்**

(ஈ) இந்தோ-சீனாவின் மைய நீரோட்ட அரசியல் கட்சி எது?

**வியட்நாம் தேசியக் கட்சி**

2. ஹோ சி மின்

(அ) ஹோ சி மின் எங்கே பிறந்தார்?

**டோங்கிங்**

(ஆ) ஹோ சிமின் எவ்வாறு நன்கு அறியப்பட்ட வியட்நாமின் தேசியவாதியானார்?

**"விசாரணையில் பிரெஞ்சு காலனியாதிக்கம்" என்ற கட்டுரை மூலம்**

(இ) ஹோ சி மினின் புரட்சிகர இளைஞர் இயக்கம் குறித்து நீவீர் அறிந்தன்ன?

**1925-ல் புரட்சிகர இளைஞர் இயக்கம் நிறுவினார். அவர் மாஸ்கோ சென்று புரட்சியின் நுட்பங்களைக் கற்றார்**

(ஈ) வியட்நாம் விடுதலைச் சங்கம் இந்தோ-சீனாவில் எவ்வாறு அழைக்கப்பட்டது?

**வியட்மின்**

3. தென் அமெரிக்க அரசியல் நிகழ்வுப் போக்குகள்

(அ) ஒட்டுமொத்த தென் அமெரிக்காவும் எந்த ஆண்டில் ஐரோப்பிய மேலாதிகத்திலிருந்து விடுதலை பெற்றது?

**1830**

(ஆ) மத்திய அமெரிக்காவில் எத்தனைக் குடியரசுகள் உருவாயின?

**5**

(இ) எந்த ஆண்டில் கியூபா அமெரிக்காவால் கைப்பற்றப்பட்டது?

**1898**

(ஈ) தென் அமெரிக்காவில் குழுக்களின் ஆட்சிகள் பலராலும் விரும்பப்படாமைக்குக் காரணம் என்ன?

**பொருளாதார பெருமந்தம்**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 3

1. ஸ்டாலின் கிரேடு போர்

(அ) ஜெர்மனி ஸ்டாலின் கிரேடை எப்போது தாக்கியது?

**1942 — ஆகஸ்டு**

(ஆ) ஸ்டாலின் கிரேடின் முக்கிய உற்பத்திப் பொருள்கள் யாவை?

**ஆயுதங்கள், டிரக்குகள்**

(இ) ஸ்டாலின் கிரேடைத் தாக்குவதற்கு ஹிட்லர் தீட்டிய திட்டத்தின் பெயரென்ன?

**ஃபால்புளு**

(ஈ) ஸ்டாலின் கிரேடு போரின் முக்கியத்துவமென்ன?

**15 மில்லியன் மக்களும், 10 மில்லியன் வீரர்களும் பலியாயினார்**

2. தென் கிழக்கு ஆசியாவை ஜப்பான் ஆக்கிரமித்தால்

(அ) ஜப்பானிடம் வீழ்ந்த தென்கிழக்கு ஆகிய நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

**ஹாங்காங், சிங்கப்பூர், மலேசியா, பர்மா, இந்தோனேசியா**

(ஆ) பசிபிக் பகுதியில் நேச நாடுகள் சந்தித்த பின்னடைவுக்கான காரணங்ளைக் கணக்கிடுக

**போதிய அளவு தயாரிப்பின்மை**

(இ) மிட்வேபோரின் முக்கியத்துவம் யாது?

**மிட்வே போரில் அமெரிக்க கப்பற்படை ஜப்பானிய கப்பற்படையை தோற்கடித்தது. இப்போர் நேச நாடுகளுக்கு சாதகமானது**

(ஈ) பர்மாவில் வாழ்ந்து கொண்டிருந்த இந்தியர்களுக்கு என்ன நேர்ந்தது?

**பலர் இறந்தனர், சிலர் இந்தியா வந்தடைந்தனர்.**

3. பொதுச்சபையும் பாதுகாப்புக் கவுன்சிலும்

(அ) பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர் நாடுகளை பட்டியலிடுக

**அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா**

(ஆ) பேரழிவு என்றால் என்ன?

**2-ம் உலகப்போரில் 6 மில்லியன் யூதர்கள் கொல்லப்பட்டது**

(இ) ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையத்தின் தலைவர் யார்?

**FDR ன் விதவை மனைவி**

(ஈ) மறுப்பாணை அதிகாரம் (தடுப்பாணை) என்றால் என்ன?

**ஐ.நா.வின் நிரந்தர உறுப்பினர் நாடுகளுக்கு வழங்கப்பட்ட "எந்த ஒரு முடிவையும் தடுக்கும் உரிமை"**

அலகு — 4

1. பனிப்போர்

(அ) இரண்டாம் உலகப்போருக்குப்பின் உருவான இரு இராணுவப்பிரிவுகளைப் பற்றிக் கூறுக.

**அமெரிக்க ஐக்கிய நாடு - சோவியத் நாடு**

(ஆ) பனிப்போர் என்ற சொல்லாடலை உருவாக்கியவர் யார்?

**ஆங்கில எழுத்தாளர் ஜார்ஜ் ஆர்வெல்**

(இ) நேட்டோவின உருவாக்கத்திற்கு சோவியத் ரஷ்யாவின் பதிலடி யாது?

**ரஷ்யா வார்சா ஒப்பந்தத்தை உருவாக்கியது**

(ஈ) எவ்வகைப் போட்டியில் வார்சா உடன்படிக்கை கலைக்கப்பட்டது?

**1991-ல் சோவியத்தின் பிளவுக்கு பின்னர் வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது.**

2. கொரியாப் போர்

(அ) கொரியாப்போரின் போது வடகொரியாவின் அதிபர் யார்?

**இரண்டாம் கிம்**

(ஆ) வடகொரியா அதிபரின் தெற்குப்புற எதிரி யார்?

**சிங்மென் ரீ**

(இ) கொரியாப்போர் எத்தனை காலம் நீடித்தது?

**3 ஆண்டுகள்**

(ஈ) போரின் விளைவாக ஏற்பட்ட மனித உயரிழப்பு எவ்வளவு?

**அளவிட முடியாத மனித உயிரிழப்பு ஏற்பட்டது**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

3. அணிசேரா இயக்கம்

(அ) அணிசேரா இயக்கத்தின் முதல் மாநாடு எங்கே எப்போது நடைபெற்றது?

**பெல்கிரேடு — 1961**

(ஆ) முதல் மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியப் பங்கு பிரமுகர்கள் யாவர்?

**நேரு, நாசர், சுகர்ணோ, நுக்ருமா**

(இ) அணிசேரா இயக்கத்தின் குறிக்கோள்கள் என்ன?

**வல்லரசு அணியில் சேராமை; காலனி ஆதிக்கத்ததை எதிர்த்தல்**

(ஈ) அணிசேரா இயக்கத்தின் பெல்கிரேட் மாநாட்டில் கொண்டு வரப்பட்ட இரு அடிப்படைக் கொள்கைகளைக் கூறுக?

**அமைதியோடு இணைந்திருத்தல், அமைதியையும் பாதுகாப்பையும் முன்னிருத்தப் பாடுபடுதல், எந்த அணியோடும் இராணுவ கூட்டுறவு கொள்ளாமல் இருத்தல்.**

அலகு - 5

1. அலிகார் இயக்கம்

(அ) இவ்வியக்கத்தின் முக்கிய குறிக்கோள்கள் என்ன?

**முஸ்லீம்களுக்கு ஆங்கில கல்வி வழங்குவது**

(ஆ) இவ்வியக்கத்தின் ஆன்மாவாக் கருதப்படுபவர் யார்?

**சர் சையது அகமது கான்**

(இ) ஆங்கில நூல்கள் ஏன் உருது மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டன?

**மேலை நாட்டு அறிவியல் கற்க**

(ஈ) பல்கலைக் கழகமாக தரம் உயர்த்தப்பட்ட கல்லூரியின பெயரைக் குறிப்பிடுக

**முகமதிய ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி**

2. ராமலிங்க அடிகள்

(அ) ஜீவகாருண்யம் என்றால் என்ன?

**எல்லா உயிர்களிடம் அன்பு, இரக்கம் காட்டுதல்**

(ஆ) அருட்பா என்றால் என்ன?

**திருவருட்பா பாடல்களின் தொகுப்பு**

(இ) சமரச வேத சன்மார்க்க சத்ய சங்கத்தின் முக்கியப் பங்களிப்பை குறிப்பிடுக?

**சாதி எல்லைகளை தாண்டி அனைவருக்கும் இலவச உணவகம் அமைத்தல்**

(ஈ) தனது இலவச உணவகத்தை அவர் எங்கே அமைத்திருந்தார்?

**வடலூர்**

3. தியோபந்த் இயக்கம்

(அ) இவ்வியக்கத்தைத் திட்டமிட்டு நடத்தியவர்கள் யார்?

**பழமைவாத முஸ்லீம் உலேமாக்கள்**

(ஆ) இவ்வியக்கத்தின் இரண்டு முக்கியக் குறிக்கோள்கள் யாவை?

**குரான் மற்றும் ஷரியத்தின் உண்மையான போதனைகளை பரப்புரை செய்தல். இஸ்லாம் அல்லாத அயல் கூறுகளுக்கு எதிராக புனிதப் போர் செய்யும் உணர்வுகளை ஊக்குவித்தல்**

(இ) தியோபந்த் பள்ளியை நிறுவியவர் யார்?

**தியோபந்த் உலேமாக்கள் (முகமது குவாசிம் நானோதேவி. ரஷித் அகமத் கங்கோத்ரி)**

(ஈ) யாருக்கு எதிராக தியோபந்த் உலேமாக்கள் சமய ஆணையைப் பிறப்பித்தனர்?

**சையது அகமத்கான் அமைப்புகளுக்கு**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 6

1. வேலு நாச்சியார்

(அ) வேலு நாச்சியாரின் இராணுவத் தளபதி யார்?

**தாண்டவராயானார்**

(ஆ) அவர் தேர்ச்சிபெற்றிருந்த தற்காப்புக் கலைகள் எவை?

**வளரி, சிலம்பம் மற்றும் போர்கருவிகளை கையாளுதல்**

(இ) அவர் யாரை மணமுடித்தார்?

**முத்து வடுகநாதர்**

(ஈ) அவரது மகளின் பெயர் என்ன?

**வெள்ளச்சி நாச்சியார்**

2. தீரன் சின்னமலை

(அ) தீரன் சின்னமலை எப்போது பிறந்தார்?

**1756 ல் பிறந்தார்**

(ஆ) சின்னமலை என்ற பட்டப்பெயரை அவர் எவ்வாறு பெற்றார்?

**திப்பு சுல்தானின் திவானான முகமது அலி வரிவசூல் செய்த பணத்தை தீர்த்தகிரி (தீரன்) பறித்துக் கொண்டதால் (சிவமலைக்கும் சென்னிமலை இடையில்) தீரன் சின்னமலை என்று அழைக்கப்பட்டார்**

(இ) திப்பு சுல்தானின் திவானின் பெயர் யாது?

**முகமது அலி**

(ஈ) அவர் எங்கு, ஏன் தூக்கிலிடப்பட்டார்.

**தீரன் சின்னமலை ஆங்கிலேயர் ஆட்சியை ஏற்க மறுத்ததால் சங்ககிரி கோட்டை உச்சியில் தூக்கிலிடப்பட்டார்**

அலகு — 7

1. தக்காண கலவரங்கள்

(அ) தக்காணத்தில் கடன் வழங்கியோருக்கு எதிராக முதல் கலவரச் சம்பவம் எங்கு மற்றும் எப்போது நடந்ததாகப் பதிவாகியுள்ளது?

**1875-ல் மே மாதம் சூபா என்ற கிராமத்தில்**

(ஆ) பிரிட்டிஷ்ஷாரின் புதிய சட்டத்தின் கீழ் கடன் வழங்கியோருக்கு கொடுக்கப்பட்ட புதிய உரிமை என்ன?

**நிலத்தை எடுத்துக் கொண்டு ஏலம் விட்டு கடன் தொகையை எடுத்துக் கொள்ளலாம்**

(இ) அதனால் ஏற்பட்ட விளைவு என்ன?

**உழும் வர்க்கத்திடமிருந்து உழாத வர்க்கத்திடம் நிலம் கைமாறியது**

(ஈ) தக்காண கலவரங்கள் யாருக்கு எதிராக குறிவைத்து நடத்தப்பட்டன?

**குஜராத்தில் வட்டிக்கு பணம் வழங்குவோருக்கு எதிராக குறிவைத்து நடத்தப்பட்டன**

2. 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சி

(அ) 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சி ஏற்படக் காரணமாக அமைந்த நிகழ்வில் தனது அதிகாரியை தாக்கியவர் யார்?

**மங்கள் பாண்டே**

(ஆ) தில்லியில் ஷாஹின்ஷா இ-ஹிந்துஸ்தன் என்று அழைக்கபட்டவர் யார்?

**இரண்டாம் பகதூர் ஷா**

(இ) 1857 ஆம் ஆண்டின் கொடுமைகளை பற்றிய செய்தியை லண்டன் டைம்ஸ் நாளேட்டில் வெளியிட்ட பத்திரிக்கையாளர் யார்?

**வில்லியம் ஹோவாட் ரஸ்ஸல்**

(ஈ) அரசியின் பேரறிக்கையில் சமயம் தொடர்பான விஷயங்கள் பற்றி என்ன கூறப்பட்டது?

**பராம்பரிய மற்றும் மதம் தொடர்பான விஷயங்களில் ஆங்கில அரசு தலையிடாது.**

3. இந்திய தேசிய காங்கிரஸ்

(அ) தமது முறையீடுகள் தீர்க்கப்படுவதற்கு காங்கிரஸ் கட்சி கையாண்ட வழிமுறைகள் என்ன?

**பிரிட்டனிடம் மேல்முறையீடு, மனுக்கள் கொடுப்பது. அதிகாரப் பகிர்வு போன்ற வழிமுறைகள்**

(ஆ) லால்-பால்-பால் (Lal – Bal – Pal) ஆகிய மூவர் பற்றி அறிந்தது என்ன?

**லாலா லஜ்பத்ராய், பால கங்காதர திலகர், பிபின் சந்திரபால்**

(இ) இந்திய தேசிய காங்கிரஸின் முதலாவது அமர்வு எங்கு நடந்தது?

**பாம்பே (மும்பை)**

(ஈ) சுதேச இயக்கம் மீது ஆங்கிலேயர் எவ்வாறு பதில் நடவடிக்கை எடுத்தனர்?

**முக்கியத் தலைவர்கள் கைது -சிறை புரட்சியாளர்களுக்கு தூக்கு பத்திரிக்கை சுதந்திரம் முடக்கம்.**

அலகு — 8

1. காந்தி மற்றும் மக்கள் தேசியம்

(அ) காந்தியடிகள் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்திய சம்பவம் எது?

**தென்னாப்பிரிக்காவில் இரயில் பயணத்தின் போது முதல் வகுப்பு பெட்டியிலிருந்து பீட்டர்ஸ் மாரிட்ஸ் பர்க் ரயில் நிலையத்தில் வலுகட்டாயமாக வெளியேற்றப்பட்டது.**

(ஆ) காந்தியடிகளின் வாழ்க்கையில் மாற்றத்தை உருவாக்கிய படைப்புகள் யாவை?

**டால் ஸ்டாயின் கடவுளின் அரசாங்கம், உன்னில் உள்ளது. ஜான் ரஸ்கியின் அண்டு திஸ்ட் லாஸ்ட் தாரோவின் சட்ட மறுப்பு ஆகிய புத்தகங்கள்**

(இ) தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகத்தை காந்தியடிகள் எவ்வாறு ஒரு செயல் உத்தியாகப் பயன்படுத்தினார்

**நியாயமற்ற சட்டங்களுக்கு எதிராக அமைதிப் பேரணிகளை நடத்திய பரப்புரையாளர்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக தாங்களாகவே முன்வந்து கைதானார்கள்.**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

(ஈ) சம்பரான் சத்தியாகிரகம் பற்றி தாங்கள் அறிவது என்ன?

**சம்பரானில் தீன்காதியா என்ற சுரண்டல் முறையில் ஐரோப்பியர்களால் பாதிக்கப்பட்ட பண்ணை விவசாயிகளுக்கு தன் தலையீட்டால் வெற்றி தேடி தந்தார்**

2. காந்தியடிகளின் ஆக்கபூர்வ திட்டம்

அ) ஆக்கப்பூர்வ திட்டம் என்றால் என்ன?

**கதர் இயக்க மேம்பாடு, இந்து-முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு**

ஆ) காங்கிரசார் என்ன செய்ய வேண்டும் என்று காந்தியடிகள் அறிவுறுத்தினார்?

**காங்கரஸ் உறுப்பினர்கள் கதர் உடுத்துவதை அவர் கட்டாயமாக்கினார்**

இ) இந்து — முஸ்லீம் ஒற்றுமையை ஏற்படுத்த காந்தியடிகள் செய்தது என்ன?

**காந்தியடிகள் 21 நாட்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்**

ஈ) தீண்டாமையை ஒழிக்க காந்தியடிகளின் பங்களிப்பு என்ன?

**நாடு தழுவிய விழிப்புணர்வு பயணம், அரிஜனச் சேவை சங்கம் அமைத்து சமூக வேற்றுமைகள் களைதல்.**

3. சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய ராணுவம்

அ) சுபாஷ் சந்திர போஸ் ஜப்பானை எப்படி சென்றடைந்தார்?

**நீர் மூழ்கி கப்பல் மூலம்**

ஆ) இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் பிரிவுக்குத் தலைமை ஏற்றவர் யார்?

**கேப்டன் லட்சுமி செகல் (தமிழ்நாடு)**

இ) சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய ராணுவத்தை எவ்வாறு மறுசீரமைப்பு செய்தார்?

**காந்தி பிரிகேட்-நேரு பிரிகேட்-ராணி லட்சுமிபாய் பிரிகேட் என மூன்று பகுதிகளாக மறுசீரமைப்பு செய்தார்**

ஈ) சுபாஷ் சந்திர போஷ் வழங்கிய முழக்கம் என்ன?

**தில்லிக்கு புறப்படு (தில்லி சலோ)**

அலகு — 9

1. தமிழ்நாட்டில் தொடக்க கால தேசியவாத இயக்கம்

(அ) சென்னை வாசிகள் சங்கத்தின் நோக்கங்கள் யாவை?

**மக்களின் நிலை அவர்களின் தேவைகள் ஆகியவற்றின் மீது அரசின் கவனத்தை திருப்புதல்.**

(ஆ) தமிழ்நாட்டில் தேசியவாதப் பத்திரிக்கைகள் உருவாவதற்கு எது காரணமாய் அமைந்தது?

**ஒரு இந்தியர் நீதிபதியாக பணியமர்த்தப்பட்டதை ஐரோப்பிய பத்திரிக்கைகள் விமர்சனம் செய்தன. இந்தியர்களின் எண்ணங்களை வெளிபடுத்த தேசியவாத பத்திரிக்கை தேவைப்பட்டது.**

(இ) சென்னை மகாஜன சபையின் நோக்கங்கள் யாவை?

**குடிமைப்பணி தேர்வுகளை ஒரே நேரத்தில் இங்கிலாந்திலும், இந்தியாவிலும் நடத்துதல், இராணுவ நிர்வாக செலவுகளை குறைப்பது, வரிகளை குறைப்பது.**

(ஈ) தமிழ்நாட்டின் தொடக்ககால தேசியத் தலைவர்கள் யார்?

**P.S.சிவசாமி, V.கிருஷ்ணசாமி, T.R.வெங்கட்ராமனார்.**

2. தமிழ்நாட்டில் புரட்சிகரதேசியவாத இயக்கம்

அ) தமிழ்நாட்டை சேர்ந்த சில புரட்சிகர தேசியவாதிகளைப் பட்டியலிடுக?

**M.P.T.ஆச்சாரியா, T.S.S.ராஜன், V.V.சுப்பிரமணியனார்**

ஆ) சுப்பிரமணிய பாரதியார் பாண்டிச்சேரிக்கு சென்றது ஏன்?

**சிறை தண்டனையிலிருந்து தப்பிக்க பாண்டிச்சேரிக்கு சென்றார்.**

இ) சில புரட்சிவாதப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் குறிப்பிடுக?

**இந்தியா, விஜயா,சூர்யோதயம்**

ஈ) வாஞ்சிநாதன் செய்தது என்ன?

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் நிலையத்தில் சுட்டுக் கொன்றார்.**

3. பிராமணரல்லாதோர் இயக்கம்

அ) தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் ஏன் உருவாக்கப்பட்டது?

**பிராமணரல்லாதோர் தங்கள் நலன்களைப் பாதுகாக்க**

ஆ) பிராமணரல்லாதோர் அறிக்கை என்றால் என்ன?

**அரசுப் பணி மற்றும் பிரதிநிதித்துவ அமைப்புகளில் பிராமணரல்லாதோருக்கு இட ஒதுக்கீடு**

இ) ஈ.வெ.ரா ஏன் பிராமணல்லாதோர் இயக்கத்தில் இணைந்தார்?

**பிராமணரல்லாதோருக்கு சட்டசபையில் பிரதிநிதித்துவம் அளிக்க காங்கிரஸ் எதிர்த்ததால்**

ஈ) இந்தி எதிர்ப்பு போராட்டம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

**பள்ளிகளில் ராஜாஜி இந்தியை கட்டாயமாக்கினார். இதற்கு எதிராக ஈ.வெ.ரா பெரியார் மிகப்பெரிய பரப்புரையை மேற்கொண்டார். இதற்கு இந்தி எதிர்ப்பு போராட்டம் என்று பெயர்.**

அலகு — 10

1. பெரியார் ஈ.வெ.ரா

அ) பெரியார் எப்போது திராவிடர் கழகத்தை தோற்றுவித்தார்?

**1944ல்**

ஆ) பெரியார் நடத்திய செய்தித்தாள்கள், பத்திரிக்கைகள் ஆகியவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக?

**குடியரசு — புரட்சி — ரிவோல்ட் — பகுத்தறிவு — விடுதலை**

இ) பெரியார் ஏன் "வைக்கம் வீரர்" என அறியப்பட்டார்?

**கேரளாவில் வைக்கம் என்ற இடத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் கோவிலில் நுழைய தடை விதித்ததை எதிர்த்து அங்கு போராடி வெற்றி பெற்றதன் காரணத்தால்**

ஈ) பெரியாரின் மிக முக்கியப் பணியாக கருதப்படுவது எது?

**"பெண் ஏன் அடிமையானாள்" என்ற அவர் எழுதிய நூல்.**

2. தமிழகத்தில் தொழிலாளர் இயக்கம்

(அ) மதராசில் தொழில் சங்க இயக்கம் தோன்றியதற்குக் காரணமாயிருந்த சூழலை முதன்மைப்படுத்திக் காட்டவும்

**முதல் உலகப்போர் (1914 — 1918) முடிந்ததால் போர்கால தேவைகள் குறைந்தன. அதனால் அனைத்து தொழிற்சாலைகளிலும் ஆட்குறைப்பு செய்யப்பட்டதும், விலைவாசி ஏற்றமும், தொழிலாளர் இயக்கங்கள் தோன்றுவதற்கு உந்துசக்தியாக அமைந்தன.**

ஆ) சென்னை தொழிலாளர் சங்கத்துடன் தொடர்புடைய மிக முக்கியமான மூவரை அடையாளம் காண்க

**பி.பி.வாடியா, ம.சிங்காரவேலர், திரு.வி.கல்யாணசுந்தரம்.**

(இ) அகில இந்திய தொழில் சங்க காங்கிரஸின முதல் மாநாடு எங்கு நடைபெற்றது

**பம்பாய்**

(ஈ) முதன்முதலாக மதராசில் மே தின விழாவை நடத்தியது யார்? எந்த ஆண்டில் நடந்தது

**சிங்காரவேலர் — 1923ல்**

3. மறைமலை அடிகள்

அ) மறைமலை அடிகள் விளக்கவுரை எழுதிய சங்க நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக

**பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு**

ஆ) இளைஞராக இருந்தபோது மறைமலை அடிகள் பணியாற்றிய பத்திரிக்கையின் பெயரைக் குறிப்பிடுக?

**சித்தாந்த தீபிகா**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY SIGARATHAI KOKKI 2019-20

இ) இந்தித் திணிப்பை அவர் ஏன் எதிர்த்தார்?

**தமிழ்மொழி பாதிக்கப்படும் என நினைத்தார்**

ஈ) மறைமலை அடிகளின் வாழ்க்கையின் மீது செல்வாக்குச் செலுத்தியவர்களில் முக்கியமானவர்கள் யாவர்?

**அவருடைய ஆசிரியர்களான பி.சுந்தரனார், சோமசுந்தர நாயகர்**

## VI. சுருக்கமான விடையளி

அலகு — 1

1. சீனா-ஜப்பான் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?

* சீனா-ஜப்னானியப் போரில் (1894-1895) பெரிய நாடான சீனாவைச் சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது உலகையே வியக்க வைத்தது.
* இதன் மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்ப்பித்தது.

2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

இங்கிலாந்து — பிரான்ஸ் — ரஷ்யா

3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசிய வாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?

| | |
|---|---|
| இங்கிலாந்து | - ஜிங்கோயிசம் (Jingoism) |
| பிரான்ஸ் | - சௌவினிசம் (Chauvinism) |
| ஜெர்மனி | - குல்டூர் (Kultur) |

4. பதுங்கு குழிப் போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

* மார்ன் போரில் (1914 செப்டம்பர் தொடக்கத்தில்) பிரெஞ்சு படைகளை ஜெர்மானியரை வெற்றி கொண்டன எனினும் பிரெஞ்சு படை பதுங்கு குழி போர்முறையை பின்பற்றி ஜெர்மானிய படைகளை மார்ன் நதிக்கரையில் தடுத்து நிறுத்தியது.
* மார்ன் போரானது பதுங்குக்குழி போரின் தொடக்கமாகும்.
* போர் வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக்குழிகள் எதிரியின் துப்பாக்கி.
* குண்டுகளிலிருந்து தங்களைக் காத்துக்கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவின.

5. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரம் என்ன?

* கமால் பாட்சா துருக்கி நாட்டிற்கு விடுதலையை மட்டும் பெற்றுத்தரவில்லை.
* அவர் துருக்கியை நவீனமயமாக்கி அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்தும் மாற்றியமைத்தார்.
* சுல்தானியத்திற்கும் கிலாபாத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தார்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

6. ரஷ்யப் புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக் காட்டு.

* உலகில் பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டன.
* ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளை விடுதலைக்காக போராட ஊக்குவித்து அவர்களுக்கு முழுமையான ஆதரவையும் நல்கியது.

7. பன்னாட்டு சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.

* சங்கத்திற்கென்று இராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடை முறைப்படுத்த அதனால் இயலவில்லை.
* சர்வாதிகாரிகளால் தலைமை ஏற்கப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் சங்கத்தின் ஆணைகளுக்குக் கட்டுப்படவில்லை.

<u>அலகு — 2</u>

1. இந்தோ - சீனாவில் நடைபெற்ற வெள்ளை பயங்கரம் குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

* 1929-ல் வியட்நாம் வீரர்கள் ராணுவப் புரட்சி செய்தனர்.

* இதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்டுகளின் தலைமையில் மிகப்பெரும் விவசாயிகளின் புரட்சியும் நடைபெற்றது.
* இப்புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து வெள்ளை பயங்கரவாதம் (White Terror) அரங்கேறியது. புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

2. ஒட்டாவா பொருளாதார உச்சிமாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்.
   * இங்கிலாந்திற்கும் ஆங்கில பேரரசின் உறுப்பு நாடுகளுக்கும் 1932-ல் நடைபெற்ற ஒட்டாவா பொருளாதார உச்சிமாநாட்டில் இருதரப்பு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.
   * இம்மாநாட்டில் பங்கேற்ற நாடுகள் (இந்தியா உட்பட) ஏனைய நாட்டுப் பொருள்களைக் காட்டிலும் இங்கிலாந்து பொருள்களுக்கு முன்னுரிமை வழங்க ஒத்துக்கொண்டன.

3. மன்றோ கோட்பாட்டை விளக்கு.
   * அமெரிக்கா குடியரசுத் தலைவர் மன்றோ தனது புகழ்பெற்ற மன்றோ கோட்பாட்டை முன்வைத்தார்.
   * அதன்படி அமெரிக்காவின் எந்தபகுதியிலும் அது வடக்கோ, தெற்கோ, ஐரோப்பியர்கள் தலையிட்டால் அது அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு எதிரான போராகக் கருதப்படும் என அறிவித்தார்.

4. முசோலியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை?
   * 1922 அக்டோபர் மாதத்தில் ஒரு நீண்ட அமைச்சரவைச் சிக்கலின்போது முசோலினி பாசிஸ்டுகளின் மாபெரும் அணிவகுப்பு ஒன்றை ரோமாபுரியை நோக்கி நடத்தினார்.
   * முசோலினியின் வலிமையைக் கண்டு பயந்துபோன அரசர் முசோலினியை ஆட்சி அமைக்க வரவேற்றார்.

5. 1884-85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டின் சாரத்தைக் குறிப்பிடுக.
   * 1884-85 இல் நடைபெற்ற பெர்லின் காலனிய மாநாட்டில் காலனி ஆதிக்கச் சக்திகள் ஆப்பிரிக்காவைத் தங்கள் செல்வாக்கு மண்டலங்களாகப் பிரித்துக் கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

6. பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மையின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது?
   * பொருளாதாரப் பெருமந்தம் இந்திய வேளாண்மைக்கும் உள்நாட்டு உற்பத்தி தொழில்களுக்கும் மரண அடி கொடுத்தது.
   * வேளாண் உற்பத்தி பொருள்களின் விலை பாதியாகக் குறைந்தது. ஆனால் விவசாயி நிலத்திற்கு கொடுக்கவேண்டிய குத்தகைத் தொகையில் மாற்றம் ஏதுமில்லை.
   * இந்திய விவசாயிகளும் பொருள் உற்பத்தியாளர்களும் உயிர் பிழைப்பதற்காகத் தங்களிடமிருந்த தங்கம் வெள்ளி ஆகியவற்றை விற்கும் நிலை ஏற்பட்டது.

7. ஸ்மட்ஸ்-ஷெர்சாக் உடன்படிக்கைக்கான காரணங்களை விளக்குக.
   * நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க ஒரு கூட்டணி அரசு தேவை என ஸ்மட்ஸ் நம்பினார்.
   * ஆகவே 1934 இல் தென்னாப்பிரிக்கா கட்சியும் தேசியக் கட்சியும் இணைந்து ஐக்கிய தென்னாப்பிரிக்கா கட்சி உருவானது.

8. டாலர் ஏகாதிபத்தியம் — தெளிவுபட விளக்குக.
   * தொலை தூர நாடுகளில் பொருளாதார உதவி செய்வதன்மூலம் அவற்றின் மீது ஆதிக்கம் செலுத்தவும், தக்கவைத்துக் கொள்ளவும் அமெரிக்கா பின்பற்றிய கொள்கையை விளக்குவதற்கு பயன்படுத்திய சொற்றொடர் டாலர் ஏகாதிபத்தியம்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 3

1. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையுடன் முக்கியச் சரத்துக்களைக் குறிப்பிடுக?
   (i) ஜெர்மனி தனது மேற்கு, வடக்கு, கிழக்கு ஆகிய எல்லைகளில் பல பகுதிகளை விட்டுத்தரக் கட்டாயப்படுத்தப்பட்டது.
   (ii) ஜெர்மனி ஆயுதக்குறைப்புக்கு உள்ளாக்கப்பட்டு மிகக்குறைந்த அளவிலான படைகளை மட்டுமே வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. (காலாட்படை, கப்பற்படை, விமானப்படை)
   (iii) போரினால் நேச நாடுகளுக்கு ஏற்பட்ட ராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களின் உயிர் இழப்பிற்காக ஜெர்மனி இழப்பீடு வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

2. முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?

   இத்தாலியில் முசோலினி, ஜெர்மனி ஹிட்லர், ஸ்பெயினில் பிராங்கோ.

3. ஹிட்லர் ஜெர்மனி மக்களின் ஆதரவை எவ்வாறு பெற்றார்?

   ஜெர்மனி பெருமளவு அவமானப் படுத்தப்பட்டதாக நிலவிய கருத்தைப் பயன்படுத்தி, தனது வல்லமை மிக்க சொற்பொழிவாற்றும் திறமையாலும் உணர்ச்சிமிக்கப் பேச்சுக்களாலும் ஜெர்மனியை அதன் ராணுவப் புகழ்மிக்க முந்தைய காலத்திற்கு மீண்டும் அழைத்துச் செல்வதாக அடால்ப் ஹிட்லர் மக்களைத் தன்பக்கம் ஈர்த்தார்.

4. முத்துத் துறைமுக நிகழ்வை விவரி.

   * 1941 டிசம்பரில் ஹவாயிலுள்ள அமெரிக்கக் கப்பற்படைத் தளமான முத்துத் துறைமுகத்தின் மீது ஜப்பானிய விமானப்படைகள் முன்னறிவிப்பின்றி பெரும்தாக்குதலைத் தொடுத்தன.
   * இத்தாக்குதலில் பல போர் கப்பல்களும், போர் விமானங்களும் அழிக்கப்பட்டன. அமெரிக்க வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

5. பெவரிட்ஜ் அறிக்கை குறித்து நீ அறிந்தது என்ன?

   பிரிட்டன் 1942-ல் பெவரிட்ஜ் அறிக்கை (Beveridge Report) என்றழைக்கப்பட்ட அறிக்கையை வெளியிட்டது. அவ்வறிக்கையில், பொது நலனுக்குப் பெருந்தடைகளாக உள்ள வறுமை, நோய் ஆகியவற்றை வெற்றிகொள்ள, பொதுமக்களுக்கு அதிக வருமானத்தை அளிப்பது, உடல் நலப்பாதுகாப்பு, கல்வி, வீட்டுவசதி, வேலைவாய்ப்பு ஆகியவற்றை வழங்கும் பல திட்டங்கள் தொகுப்பாக இடம் பெற்றிருந்தன.

6. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக
   பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்கள் எனக் குறிக்கப்படுவன உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதி அமைப்பு(I.M.F).

7. பன்னாட்டு நிதியமைப்பின் (I.M.F) நோக்கங்கள் யாவை?
   உலக அளவில் நிதி சார்ந்த ஒத்துழைப்பைப் பேணுவது, நிதி நிலையை உறுதியானதாக வைத்திருத்தல், பன்னாட்டு வணிகத்திற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பது, வேலை வாய்ப்பினைப் பெருக்குவது, நீடித்தப் பொருளாதார வளர்ச்சி, உலகம் முழுவதிலும் வறுமையை ஒழிப்பது என்பனவாகும்.

அலகு — 4

1. சீனாவில் 1911 ஆம் ஆண்டில் நடத்த புரட்சிக்கு ஏதேனும் மூன்று காரணங்களை குறிப்பிடுக.

   மஞ்சு வம்சத்தின் சிதைவு 1908 ஆம் ஆண்டு பேரரசின் பாதுகாவலராயிருந்த பேரரசியார் தாவேகரின் மரணத்தோடுத் துவங்கியது. புதிய பேரரசர் இரண்டு வயதே நிரம்பியவர் என்ற நிலையில் மாகாண ஆளுநர்கள் சதந்திரமாகச் செயல்படலாயினர். உள்ளூர் இராணுவக் கிளர்ச்சி 1911 ஆம் ஆண்டு அக்டோபரில் ஏற்பட்டு அதன் பாதிப்பு பலமட்டங்களில் பரவியது.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

2. கோமிங்டாங்கும் ஷியாங் கே-ஷேக்கும் 1928 ஆம் ஆண்டு சீனாவில் எவ்வாறு நடுவன் அரசை ஏற்படுத்தினார்கள் என்பதை விளக்குக.

சன் யாட் சென் இறந்தபின், கோமிங்டாங்கின் தலைவராக ஷியாங்-கே-ஷேக்கும், பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்களான சூ-யென்-லாயும், மா-சே-துங்கும் விளங்கினர். ஷியாங்-கே-ஷேக் சீனாவை வெற்றிக்கொள்ளத் துவங்கினார். வெற்றிகரமாக 1927 இன் துவக்கத்தில் அவர் ஷிங்காய் நகரையும் நான்சிங் நகரையும் முற்றுகையிட்டிருந்தார். மேலும் வெற்றிகரமாக அவர் 1928 ஆம் ஆண்டு பீகிங்நகரைக் கைப்பற்றினார். மீண்டும் சீனாவில் ஒரு நடுவண் அரசு உருவானது.

3. மாவோவின் நீண்ட பயணம் பற்றிக் குறிப்பு வரைக.

மாவோவும் ஹனான் பகுதியை விட்டு அகன்று பாதுகாப்பான ஒரு பகுதிக்குச் செல்ல நினைத்தார். கிட்டத்தட்ட 1933ஆம் ஆண்டு வாக்கில் சீன பொதுவுடைமை கட்சியின் மீது முழுக்கட்டுபாடும் மாவோ வசம் வந்து சேர்ந்தது. ஒரு நீண்ட பயணத்தை முன்னெடுத்து 1,00,000 பொதுவுடைமை இராணுவத்தினர் 1934 இல் கிளம்பினார். இவ்வாறு கிளம்பிய 1,00,000 பேரில் வெறும் 20,000 பேர் மட்டுமே 6,000 மைல்கள் கடந்து ஷேனிப் பகுதியை சென்றடைந்தனர்.

4. பாக்தாத் உடன்படிக்கை பற்றி அறிந்ததை எழுதுக.

துருக்கி, ஈராக், பிரிட்டன், பாக்கிஸ்தான், ஈரான் ஆகிய நாடுகள் 1955 இல் ஏற்படுத்திய ஒப்பந்தமே பாக்தாத் ஒப்பந்தம் என்றழைக்கப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடு இவ்வுடன்படிக்கையில் 1958 இல் இணைந்ததோடு, இவ்வொப்பந்தம் மத்திய உடன்படிக்கை அமைப்பு (CENTO) என்று அறியப்பட்டது.

5. மார்ஷல் திட்டம் என்றால் என்ன?

மேற்கு ஐரோப்பிய நாடுகளை தன் செல்வாக்கினுள் வைத்துக்கொள்ள அமெரிக்க ஐக்கிய நாடு "மார்ஷல் திட்டத்தை" உருவாக்கியது. இத்திட்டம் இரண்டாம் உலகப்போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டு வருவதற்காக அமெரிக்க டாலர்களைப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்தது.

6. மூன்றாம் உலக நாடுகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.

* வளர்ச்சிப் பாதையிலிருந்து ஆப்பிரிக்க ஆசிய லத்தீன் அமெரிக்க முன்னாள் காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளையே மூன்றாம் உலக நாடுகள் என்று அழைத்தனர்.
* சோவியத் ஐக்கியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் உலகமயமாக்கல், பொருளாதார போட்டி போன்ற புதிய சூழலால் அச்சொல்லாடல் அதன் முக்கியத்துவத்தை இழந்தது.

7. கியூபாவின் ஏவுகணைச் சிக்கல் எவ்வாறு செயலிழக்கச் செய்யப்பட்டது?

சோவியத்நாடு கியூபாவில் அணுசக்தியோடு இணைக்கப்பட்ட ஏவுகணைகளை ரகசியமாக நிறுவப்போவதாய் கென்னடி தலைமையிலான அமெரிக்க அரசிற்கு உளவுத்துறை தகவல் கொடுத்தது. அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் கியூபாவைச் சுற்றிவளைத்தன. இறுதியாக சோவியத்நாட்டின் குடியரசுத் தலைவர் திரும்பப்பெற உறுதியளித்ததால் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SUGARTHAI NOKKI 2019-20

அலகு — 5

1. மகரிஷி தேவேந்திரநாத் தாகூர் முன்வைத்த நம்பிக்கையின் நான்கு கூறுகளைக் குறிப்பிடுக.
   * தொடக்கத்தில் எதுவுமில்லை. எல்லாம் வல்ல ஒரு கடவுள் மட்டுமே உள்ளார். அவரே இவ்வுலகத்தைப் படைத்தார்.
   * அவர் ஒருவரே உண்மையின், எல்லையற்ற ஞானத்தின், நற்பண்பின், சக்தியின் கடவுளாவார். அவரே நிலையானவர், எங்கும் நிறைந்திருப்பவர் அவருக்க இணையாரும் இல்லை.
   * நம்முடைய வீடுபேறு இப்பிறவியிலும் அடுத்த பிறவியிலும் அவரை நம்புபவரையும் அவரை வணங்குவதையும் சார்ந்தது.
   * அவரை நம்புவது என்பது அவரை நேசிப்பதிலும் அவர் விருப்பத்தைச் செயல்படுத்துவதிலும் அடங்கியுள்ளது.

2. சமூகச் சீர்திருத்தங்களுக்கு மகாதேவ் ரானடேயின் பங்களிப்பைக் குறிப்பிடுக.
   * மகாதேவ் கோவிந்த ராணடே சாதி மறுப்பு, சமபந்தி, சாதி மறுப்புத்திருமணம், விதவை மறுமணம், பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் போன்ற நடவடிக்கைகளுக்காக தன்னை அர்பணித்துக் கொண்டார்.
   * இவர் விதவை மறுமணச் சங்கம் (1861), புனே சர்வஜனிக்சபா (1870) தக்காணக்கல்விக்கழகம் (1884) ஆகிய அமைப்புகளை நிறுவினார்.

3. ஒடுக்கப்பட்டோரின் நலன்களுக்காகப் போராடிய அய்யன் காளியின் பாத்திரத்தை மதிப்பீடு செய்க.
   * ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு மட்டும் மறுக்கப்பட்ட உயர்சாதியினர் மட்டுமே அணியும் ஆடைகளை இவர் அணிந்தார்.
   * உயர்சாதியினர் பயன்படுத்தியதும் ஒடுக்கப்பட்ட சாதியினருக்கு மறுக்கப்பட்டிருந்ததுமான பொதுச்சாலைகளில் சவால் விடும் வகையில் காளைகள் பூட்டப்பட்ட வண்டியில் அவர் பயணம் செய்தார்.
4. இராமலிங்க சுவாமிகளின் சீர்திருத்தங்கள் குறித்து சிறு குறிப்பு வரைக.
   * அவர்தம் அன்பையும் இரக்கத்தையும் செடிகொடிகள் உட்பட அனைத்து உயிர்களிடமும் காட்டினார். இதை அவர் ஜீவகாருண்யம் என்றார்.
   * சாதி எல்லைகளைத் தாண்டி அனைத்து மக்களுக்குமான இலவச உணவகத்தை வடலூரில் ஏற்படுத்தினார்.
5. சுவாமி விவேகானந்தரின் செயல்பாட்டாளர் சித்தாந்தத்தின் தாக்கம் என்ன?
   * விவேகாந்தரின் செயலாக்கமிக்க கருத்துகள் மேற்கத்திய கல்வி பயின்ற வங்க இளைஞர்களிடையே அரசியல் மாற்றங்களுக்கான நாட்டத்தை ஏற்படுத்தியது.
   * வங்கப் பிரிவினையைத் தொடர்ந்து நடைபெற்ற சுதேசி இயக்கத்தின் போது இளைஞர்களில் பலர் விவேகானந்தரால் ஊக்கம் பெற்றனர்.
6. சீர்திருத்த இயக்கங்களுக்கும் சமய இயக்கங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
   * சீர்திருத்த இயக்கங்கள் சமூகத்தில் அப்போது இருந்த அடிப்படை அமைப்பையே மாற்றுவதற்கு கடுமையான முயற்சிகளை எடுத்தன. எ.டு. பிரம்ம சமாஜம்
   * சமய இயக்கங்கள் பழங்காலக் கலாச்சாரத்தையும் பழக்க வழக்கங்களையும் மீட்டெடுத்து சமுதாயத்தை பழங்கால பெருமைமிக்க வாழ்க்கை முறைக்கு அழைத்துச் சென்றன. எ.டு. ஆரிய சமாஜம்

7. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத்தீமைகள் யாவை?

   சமூகத்தில் நிலவி வந்த உடன்கட்டை ஏறுதல் (சதி), குழந்தைத் திருமணம், பலதாரமணம், பெண்ணடிமை போன்ற சமூகத்தீமைகள் பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்டன.

8. ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்களுக்காக ஜோதிபா பூலே ஆற்றிய பணிகளைக் கோடிட்டுக் காட்டுக.
   * ஜோதிபா பூலே 1952-ஆம் ஆண்டு ஒடுக்கப்பட்டோருக்கான முதல் பள்ளியை பூனேயில் தொடங்கினார்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

* குழந்தை திருமணத்தை எதிர்த்தார், விதவை மறுமணத்தை ஆதரித்தார், பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு விடுதிகளையும் விதவைகளுக்கென்று காப்பகங்களையும் உருவாக்கினார்.

9. அயோத்தி தாசர் இலங்கை சென்றபோது நடந்த நிகழ்வு என்ன?

இலங்கை சென்ற அவர் அங்கே பௌத்தத்தை தழுவினார். அதே ஆண்டில் பௌத்த மதத்தின் வழியே பகுத்தறிவின் அடிப்படையிலான சமயத்தத்துவத்தை கட்டமைப்பதற்காக சாக்கிய பௌத்த சங்கம் என்னும் அமைப்பைச் சென்னையில் நிறுவினார்.

<u>அலகு — 6</u>

1. பாளையக் காரர்களின் கடமைகள் யாவை?
   * பாளையக் காரர்கள் வரிவசூலிப்பதிலும் நிலப்பகுதிகளை நிர்வகிப்பதிலும் வழக்குகளை விசாரிப்பதிலும் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதிலும் தன்னிச்சையாக செயல்பட்டனர்.
   * அவர்களது காவல்காக்கும் கடமை படிக்காவல் என்றும் அரசுக்காவல் என்றும் அழைக்கப்பட்டது.
2. கிழக்கு மற்றும் மேற்கில் அமையப் பெற்ற பாளையங்களைக் கண்டறிந்து எழுது.
   * கிழக்கில் அமையப் பெற்ற பாளையங்கள்: சாத்தூர், நாகலாபுரம், எட்டையபுரம் மற்றும் பாஞ்சாலங்குறிச்சி.
   * மேற்கில் அமையப்பெற்ற பாளையங்கள்: ஊத்துமலை, தலைவன் கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி மற்றும் சேத்தூர்.
3. ஹெரான் ஏன் நிரந்தரப் பணி நீக்கம் செய்யப்பட்டார்?
   * பூலித்தேவரை அடக்க கர்னல் ஹெரான் பணிக்கப்பட்டார்
   * மேற்குப் பகுதியிலிருந்த பாளையக் காரர்களிடம் பூலித்தேவர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார்.
   * பீரங்கிகளின் தேவையும், துணைக்கலப்பொருட்கள் மற்றும் படைவீரர்களின் ஊதியம் உள்ளிட்ட காரணங்களினால் ஹெரான் தனது திட்டத்தைக் கைவிட்டு மதுரைக்குத் திரும்பினார். கம்பெனி நிர்வாகம் அவரைத் திரும்ப அழைத்ததோடு நிரந்தரப் பணிநீக்கம் செய்தும் உத்தரவிட்டது.
4. களக்காடு போரின் முக்கியத்துவம் என்ன?
   * ஆற்காட்டு நவாப் கூடுதல் படைகளை மாபூஸ்கானுக்கு அனுப்பி திருநெல்வேலிக்குச் செல்லும் படையை பலப்படுத்தினார்.
   * மாபூஸ்கான் களக்காடு பகுதியில் தனது படைகளை நிலை நிறுத்தும் முன்பாக திருவிதாங்கூரின் 2000 வீரர்கள் பூலித்தேவரின் படைகளோடு இணைந்தனர்.
   * இதனால் களக்காட்டில் நடைபெற்ற போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.
5. கம்பெனியாருக்கும் கட்டபொம்மனுக்கும் இடையே சர்ச்சை ஏற்படக்காரணமாக விளங்கியது எது?
   * அனைத்துப் பாளையங்களிலிருந்தும் வரிகளை வசூலிக்க கம்பெனி அதன் ஆட்சியாளர்களை நியமித்தது.
   * ஆட்சியாளர்கள் பாளையக்காரர்களை அவமானப் படுத்தியதோடு வரிகளை வசூலிக்கப் படைகளைப் பயன்படுத்தினர்.
   * இதுவே கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் பெரும்பகை ஏற்பட அடித்தளமானது.
6. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் (1801) முக்கிய கூறுகளை தருக.
   * பிரிட்டிஷாருக்கு எதிரான மண்டல, சாதி, சமய, இன வேறுபாடுகளைக் கடந்து நிற்பதற்காக முதன் முதலில் விடுவிக்கப்பட்ட அறைகூவலே 1801 ஆம் ஆண்டின் பேரறிக்கை ஆகும்.
   * இப்பேரறிக்கை திருச்சியில் அமையப் பெற்ற நவாபின் கோட்டையின் முன்சுவரிலும், ஸ்ரீரங்கம் கோவிலின் சுற்றுச் சுவரிலும் ஒட்டப்பட்டது.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY SAGARATHAI NOKKI 2019-20

7. 1801 ஆம் ஆண்டு கையொப்பம் இடப்பட்ட ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை விளக்கு.

தமிழகத்தில் பாளையக்காரர்களின் கலகம் அடக்கப்பட்டதன் விளைவாக 1801 ஜூலை 31 இல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின் விதிகளின்படி பிரிட்டிஷார் நேரடியாக தமிழகத்தின் மீது தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதோடு பாளையக்காரர் முறையும் முடிவுக்கு வந்தது.

அலகு-7

1. ஆங்கிலேயே இந்தியாவில் விவசாயிகளின் கிளர்ச்சி எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?
   * மறுசீரமைத்தலுக்ககான கிளர்ச்சிகள்
   * சமய இயக்கங்கள்
   * சமூகக் கொள்கை
   * மக்களின் கிளர்ச்சி
2. 1857 ஆம் ஆண்டின் கான்பூர் படுகொலை பற்றி குறிப்பு வரைக.
   * கான்பூரில் சுற்றி வளைக்கப்பட்ட கம்பெனி படைகளுக்கும் இராணுவ வீரர்களும் நீட்டிக்கப்பட்ட சுற்றிவளைப்புக்கு தயாராக இல்லாததால் நானாசாகிப் தலைமையிலான கிளர்ச்சிப் படைகளின் கீழ் சரணடைந்தனர்.
   * அவர்கள் பயணம் செய்த படகுகள் தீயிடப்பட்டு எரிக்கப்பட்டு அதனை அடுத்து கான்பூர் தளபதி மேஜர் ஜெனரல் ஹக் வீலர் உள்பட அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தனர்.
3. வாரிசு இழப்புக் கொள்கையின் அடிப்படையில் பிரிட்டிஷ் அரசில் இணைத்துக் கொள்ளப்பட்ட பகுதிகளைப் பட்டியலிடவும்.

   சதாரா, சம்பல்பூர், பஞ்சாபின் சில பகுதிகள், ஜான்சி மற்றும் நாக்பூர்.
4. வளங்கள் சுரண்டப்படுவது (செல்வச் சுரண்டல்) பற்றி தங்களின் கருத்து என்ன?
   * இந்தியாவுக்கு எந்தவித ஆதாயமுமின்றி இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு தொடர்ந்து வளங்களைப் பரிமாற்றம் செய்யும் விதமாக காலணி ஆட்சியின் கீழ் பொருளாதாரம் அமைந்தது. இதுவே வளங்களின் சுரண்டலாக அறியப்பட்டது.
5. ஆக்கப்பூர்வ சுதேசி இயக்கம் பற்றிய கொள்கையை விவரி.
   * ஆக்கப்பூர்வ திட்டங்கள் அனைத்தும் பெரும்பாலும் சுய உதவியையே வலியுறுத்தின.
   * மக்களை கூயமாக வலுவாக்க வேண்டிய அவசியம் குறித்து அது வலியுறுத்தியது. அதன் மூலம் அரசியல் ஆர்ப்பாட்டம் நடைபெறுவதற்கு முன் ஒரு மதிப்பு வாய்ந்த குடிமகனை உருவாக்க வேண்டும் என நம்பியது.
6. தன்னாட்சி (ஹோம்ரூல்) இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.
   * அரசியலமைப்பு வழிகளைப் பயன்படுத்தி பிரிட்டிஷ் பேரரசிற்குள் தன்னாட்சியை அடைவது.
   * இலக்குகளை அடைய வன்முறையல்லாத அரசியல் சாகனவழிமுறைகளைக் கையாள்வது.
7. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்
   * லக்னோ ஒப்பந்தத்தின் (1916) போது காங்கிரஸ் கட்சியும் முஸ்லீம் லீக்கும் இந்தியாவில் விரைவில் தன்னாட்சி வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டன.
   * இதற்கு பதிலாக முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகளை வழங்கும் திட்டத்தை காங்கிரஸ் தலைமை ஏற்றுக் கொண்டது.

அலகு — 8

1. ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி விவரிக்கவும்.
   * ரௌலட் சட்டத்திற்கு எதிராக அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக்கில் 1919 ஏப்ரல் 13-ஆம் நாள் ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
   * இந்தக் கூட்டம் பற்றி அறிந்தவுடன் அந்த இடத்தை பீரங்கி வண்டி மற்றும் ஆயுதம் ஏந்திய வீரர்களுடன் ஜெனரல் டயர் சுற்றி வளைத்தார்.
   * எந்தவித முன்னெச்சரிக்கையும் இன்றி கண்மூடித்தனமாக சுடத் தொடங்கினார்கள்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

* இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 379 பேர் கொல்லப்பட்டனர். ஓராயிரத்திற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

2. கிலாபாத் இயக்கம் பற்றி குறிப்பு வரைக.
   * முதல் உலகப் போரில் துருக்கி தோல்வியடைந்தது. இசுலாமிய மதத் தலைவர் என உலகம் முழுவதும் போற்றப்பட்ட துருக்கியன் கலிபா கடுமையாக நடத்தப்பட்டார்.
   * அவருக்கு ஆதரவாக தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே கிலாபாத் இயக்கம் என்று அழைக்கப்பட்டது.
   * மௌலானா முகமது அலி மற்றும் மௌலானா சௌகத் அலி என்னும் இரு சகோதரர்கள் தலைமையில் இவ்வியக்கம் நடந்தது.
3. ஒத்துழையாமை இயக்கத்தை ஏன் காந்தியடிகள் திரும்பப் பெற்றார்?
   * 1922 பிப்ரவரி 5-ஆம் நாள் உத்திரப்பிரதேசத்தில் உள்ள சௌரி சௌரா என்ற கிராமத்தில் தேசியவாதிகள் நடத்திய பேரணி காவல் துறையினரின் தூண்டுதலில் வன்முறையாக மாறியது.
   * ஆத்திரம் கொண்ட கூட்டத்தினர் காவல் நிலையத்தை தீயிட்டுக் கொளுத்தினர். இதில் 22 காவலர்கள் உயிரிழந்தனர். இதைக் கேட்டதும் உடனடியாக காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை திரும்பப் பெற்றார்.
4. சுயராஜ்ஜியம் வேண்டியோர், மற்றும் மாற்றத்தை விரும்பாதவர்கள் இடையே மோதல் ஏன் இருந்தது?
   * சட்டப்பேரவையில் பங்கேற்று பணியாற்றுவதன் மூலம் மட்டுமே தேச நலன் மேம்படும் என்றும் இரட்டை ஆட்சியில் பங்கேற்பதன் மூலம்தான் காலனி ஆதிக்க அரசை பாதிப்படைய வைக்க முடியும் என்றும் சுயராஜ்ஜியக் கட்சியினர் வாதிட்டனர்.
   * ஆனால் மாற்றத்தை விரும்பாதவர்கள் அரசுன் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர விரும்பினார்கள்.
5. சைமன்குழு புறக்கணிப்பட்டது ஏன்?
   * சர் ஜான் சைமன் தலைமையிலான இந்தக் குழுவில் ஏழு உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்தனர்.
   * இதில் இந்தியர் ஒருவர்கூட உறுப்பினராக இல்லாத காரணத்தால் இந்தியர்கள் அவமானமும் ஆத்திரமும் அடைந்தனர்.
   * இதனால் காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் உள்ளிட்ட அனைத்து இந்தியப் பிரிவுகளும் சைமன் குழுவினைப் புறக்கணித்தன.

6. முழுமையான சுயராஜ்ஜியம் என்றால் என்ன?
   * டொமினியன் எனப்படும் தன்னாட்சிப் பகுதி தகுதி குறித்து திருப்தி அடையாத காங்கிரசார் சிலர் முழுமையான சுதந்திரம் வேண்டி கோரிக்கை வைத்தனர்.
   * 1929 இல் டிசம்பர் மாதம் லாகூரில் ஜவகர்லால் நேரு தலைமையில் காங்கிரஸ் அமர்வு நடந்தது. அதில் முழுமையான சுதந்திரம் என்பது இலக்காக அறிவிக்கப்பட்டது.

7. பகத்சிங் பற்றி குறிப்பு வரைக.
   * லாலா லஜ்பதி ராயின் உயிரிழப்புக்குக் காரணமான தடியடியை நடத்திய ஆங்கிலேய காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் படுகொலை செய்யப்பட்டார். இவ்வாறு பகத்சிங் பழிதீர்த்துக்கொண்டார்.
   * 1929 இல் மத்திய சட்டப் பேரவையில் புகைக் குண்டு ஒன்றை பகத்சிங்கும் **B.K.**தத்தும் வீசினார்கள்.
   * பகத்சிங்கும் அவரது தோழன் ராஜகுருவும் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.
8. பூனா ஒப்பந்தத்தின் கூறுகள் யாவை?
   * பூனா ஒப்பந்தம் காந்தியடிகள் மற்றும் அம்பேத்கார் இவர்களுக்கிடையே கையெழுத்தானது.
   * அதன்படி தனித்தொகுதிகள் பற்றிய கொள்கைகள் கைவிடப்பட்டன. மாறாக ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் கூட்டுத் தொகுதிகள் பற்றிய யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 9

1. மிதவாத தேசியவாதிகளின் பங்களிப்பைப் பட்டியலிடுக.
   * ஆங்கிலேயர்கள் இந்தியாவை எவ்வாறு சுரண்டினார்கள் என்பதை அம்பலப்படுத்தினர்.
   * இங்கிலாந்தில் ஜனநாயகக் கொள்கைகளைப் பின்பற்றும் ஆங்கிலேயர் காலனிகளில் பிரதிநித்துவம் அற்ற அரசை எவ்வாறு திணித்து நாடகமாடுகின்றனர் என்பதையும் வெட்ட வெளிச்சமாக்கினர்.
2. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.
   * மக்கள் செல்வாக்கு பெற்றிருந்த வ.உ.சிதம்பரம் மற்றும் சுப்ரமணியசிவா என்ற இருதலைவர்களும் கைது செய்யப்பட்ட செய்தி பரவியதால் திருநெல்வேலியில் கலகம் வெடித்தது.
   * காவலர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் நான்குபேர் கொல்லப்பட்டனர்.
   * செங்கோட்டையைச் சேர்ந்த வாஞ்சிநாதன் 1911 ஜூன் 17 இல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபர்ட் W.D. ஆஷ் என்பவரை மணியாச்சி இரயில் சந்திப்பில் சுட்டுக்கொன்று நான்கு நபர்கள் கொல்லப்பட்டதற்கு பழிதீர்த்தார்.
3. இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்ட்டின் பங்களிப்பு யாது?
   * அன்னிபெசன்ட் அம்மையார் 1916-ல் சென்னையில் தன்னாட்சி இயக்கத்தைத் தொடங்கி (Home Rule Movement) அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் எம் கோரிக்கையை முன்னெடுத்துச் சென்றார்.
   * தன்னுடைய திட்டத்தை மக்களிடையே கொண்டு செல்வதற்காக நியூ இந்தியா (New India) மற்றும் காமன்வீல் (Common Weal) என்னும் இரு செய்தித்தாள்களைத் தொடங்கினார்.
4. நீதிக் கட்சியின் அமைச்சரவையால் அறிமும் செய்யப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
   * உள்ளாட்சித் துறைகளிலும் கல்வி நிலையங்களிலும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு செய்யப்பட்டது.
   * பணியாளர் தேர்வுக்குழு நிறுவப்பெற்றது.
   * தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. ஏழைமக்கள் வீடுகட்டிக் கொள்வதற்கு புறம்போக்கு நிலங்கள் பட்டா செய்து வழங்கப்பட்டன.
   * கல்வி உதவித்தொகை வழங்குதல், மதிய உணவுத் திட்டம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
5. ஆக்கப்பூர்வ செயல்பாடுகளில் ஈ.வெ.ரா வின் பங்களிப்பு குறித்து சுருக்கமாக எழுதுக.
   * கதரின் பயன்பாட்டை மேம்படுத்தி அதன் விற்பனையை அதிகரிக்கத் தீவிரமாக செயல்பட்டார்.
   * கள்ளுண்பதற்கு தனது எதிர்ப்பைக் காட்டும் வகையில் தனக்குச் சொந்தமான தோப்பிலிருந்த தென்னை மரங்கள் அனைத்தையும் வெட்டி வீழ்த்தினார்.
   * திருவாங்கூர் ஆட்சியிலிருந்த வைக்கம் என்னும் ஊரில் நடைபெற்ற கோவில் நுழைவுக்கான சத்தியா கிரகத்திலும் முக்கிய பங்கு வகித்தார்.
6. சேரன்மாதேவி குருகுலம் குறித்த கருத்து வேறுபாடு என்ன?
   * இப்பள்ளியில் சாதியின் அடிப்படையில் மாணவர்கள் பாகுபடுத்தப்பட்டனர்.
   * பிராமின் மாணவர்களுக்கும் பிராமனர் அல்லாத மாணவர்களுக்கும் தனித்தனியே உணவு பரிமாறப்பட்டது. உணவிலும் வேறுபாடுகள் இருநதன.
   * ஈ.வெ.ரா பெரியார் இப்பழக்கத்தை கடுமையாக விமரிசித்தார்.
7. இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஏன் பிரபலமானது?
   * 19999 ஆம் ஆண்டில் பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப் பாடமாக்கப்பட்டது. தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்க ஆரிய இந்தியர்களால் சுமத்தப்பட்ட ஏற்பாடாக கருதப்பட்டது.
   * இதற்கு எதிராக ஈ.வெ.ரா. பெரியார் மிகப்பெரிய பரப்புரைளை மேற்கொண்டார்.
   * பெரியார் உட்பட 1200 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

8. தமிழ்நாட்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளை கோடிட்டுக் காட்டுக.
   * காமராஜர் தலைமறைவாகி வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்காக மக்களைத் திரட்டும் பணியை மேற்கொண்டார்.
   * துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்த போது ராஜாஜியும், சத்தியமூர்த்தியும் கைது செய்யப்பட்டனர்.
   * அஞ்சல் அலுவலககங்களைத் தீக்கிரையாக்குவது, தந்திக் கம்பங்களின் கம்பிகளை வெட்டிவிடுவது, இரயில்போக்குவரத்திற்கு ஊறு விளைவிப்பது போன்ற வன்முறை நிகழ்வுகளும் அரங்கேறின.

அலகு — 10

1. தமிழ் மறுமலர்ச்சி குறித்து சிறுகுறிப்பு வரைக.
   * காலனியத்தின் பண்பாட்டு ஆதிக்கமும் மனித நேயத்தின் எழுச்சியும் இந்தியத் துணைக்கண்டத்தின் சமூகப் பண்பாட்டு வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது.
   * அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவி மொழிகளின்மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் தமிழ் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின.

2. தென்னிந்திய மொழிகளுக்காக கால்டுவெல்லின் பங்களிப்பினை நன்கு புலப்படுத்துக.
   கால்டுவெல், "திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம்" எனத் தலைப்பிட்ட நூலை எழுதினார். அதில் திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும், அப்படியான ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் நிறுவினார். மேலும் தமிழின் தொன்மையையும் நிலை நாட்டினார்.

3. தங்களுடைய எழுத்துகளின் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்துயிர்ப்புக்கு பங்களிப்பு செய்த ஆளுமைகளைப் பட்டியலிடவும்.
   சுப்பிரமணிய பாரதி, பாரதிதாசன், திரு.வி.கலியாணசுந்தரம், மறைமலை அடிகள், மற்றும் வையாபுரி அவர்கள்.

4. நீதிக் கட்சியால் நிறைவேற்றப்பட்ட இந்துசமய அறநிலைய சட்டத்தின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.
   நீதிக்கட்சி 1926இல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது. அதன்படி எந்த ஒரு தனிநபரும் சாதி வேறுபாடின்றி கோவில்களில் நிர்வாக குழுக்களில் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

5. சேரன்மாதேவி குருகுல நிகழ்ச்சி குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
   * சேரன்மாதேவி குருகுலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் வ.வே. சுப்பிரமணியம் என்னும் காங்கிரஸ் தலைவரால் நடத்தப்பட்டது.
   * இங்கு மாணவர்கள் உணவு உண்ணும் அறையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு நிலவுவதைக் கேள்வியுற்று பெரியார் மனவருத்தம் அடைந்தார்.
   * இதனைப் பெரியார் கண்டித்து எதிர்த்தார்.

6. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தால் வெளியிடப்பட்ட செய்தித்தாள்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
   தென்னிந்திய நல உரிமைச சங்கம் தமிழில் திராவிடன், ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா என்னும் செய்தித்தாள்களை வெளியிட்டது.

7. பெரியாரை ஒரு பெண்ணியவாதியாக மதிப்பிடுக.
   * பெரியார் குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார்.
   * பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கும் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என வலியுறுத்தினார்.
   * பெண்ணியம் குறித்து பெண் ஏன் அடிமையானாள் என்னும் நூலை எழுதினார்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SUGARATHAI NOKKI 2019-20

8. 1920-இல் நடத்தப்பட்ட அகில இந்திய தொழில் சங்க காங்கிரஸின் நடவடிக்கைகளை விளக்கு.
தொழிலாளர்களின் பிரச்சனைகளில் காவல்துறை தலையிடுவதிலிருந்து பாதுகாப்பு, வேலையில்லாதவர்களுக்கு ஒருபதிவேட்டைப் பராமரித்தல், உணவுப்பண்டங்களின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடு காயமடைந்தோர்க்கு ஈட்டுத்தொகை மற்றும் உடல்நலக்காப்பீடு ஆகியவை.

## VII. முக்கியமான பத்தி வினாக்கள்

அலகு — 1

1. முதல் உலகப்போருக்கான முக்கிய காரணங்களை விவாதி.
2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களைக் கோடிட்டுக் காட்டுக.

அலகு — 2

1. ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.
2. உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் (1919-39) இந்தியாவில் காலனிய நீக்கச் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெற்றன என்பதனைக் குறித்து வரிசையாக விவரிக்க முயற்சி செய்யவும்.

அலகு — 3

1. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
2. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு, செயல்பாடுகளை ஆய்வு செய்க.

அலகு — 4

1. சீனாவை ஒரு பொதுவுடைமை நாடாக்க மா-சே-துங்கின் பங்களிப்பை அளவிடுக.
2. அரேபியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே மூண்ட 1967 மற்றும் 1973 ஆம் ஆண்டு போர்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

அலகு — 5

1. 19-ஆம் நூற்றாண்டில் சீர்திருத்த இயக்கங்கள் நடைபெறுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகளை விவாதிக்கவும்.
2. பெண்களின் மேம்பாட்டிற்கு 19-ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

அலகு — 6

1. கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீர போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
2. வேலூரில் 1806இல் வெடித்த புரட்சியின் கூறுகளை விளக்குக.

அலகு — 7

1. 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்கள் மற்றம் பின் விளைவுகள் குறித்து விரிவாக ஆராயவும்.
2. 1905 ஆம் ஆண்டு நிகழ்ந்த வங்கப்பிரிவினை யின் போது வங்காள மக்கள் எவ்விதம் நடந்துகொண்டனர்?

அலகு — 8

1. காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்.
2. காந்திய இயக்கத்தின் ஒரு சிறந்த உதாரணமான சட்ட மறுப்பு இயக்கம் குறித்து விரிவாக ஆராயவும்.

அலகு - 9

1. தமிழ் நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்.
2. தமிழ்நாட்டில் பிராமினரல்லாதோர் இயக்கம் தோன்றி வளர்ந்ததை ஆய்வு செய்க.

அலகு — 10

1. தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம் வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதவும்.
2. நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூக நீதிக்கான அதன் பங்களிப்பை சுட்டிக்க காட்டவும்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

## புவியியல்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க

அலகு-1

1. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல் <u>3214 கி.மீ</u>
2. இந்தியாவின் தென்கோடி முனை <u>கன்னியாகுமரி</u>
3. இமயமலையின் கிழக்கு – மேற்கு பரவல் <u>2500 கி.மீ</u>
4. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு <u>கோசி</u>
5. தக்காண பீடபூமியின் பரப்பளவு <u>7 லட்சம்</u> சதுர கி.மீ ஆகும்.
6. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி <u>தீபகற்பம்</u> என அழைக்கப்படுகிறது.
7. பாக் நீர்ச்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா <u>ஸ்ரீலங்கா</u> ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது.
8. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் <u>ஆனைமுடி</u>
9. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி <u>பங்கர்</u>
10. பழவேற்காடு ஏரி <u>தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசம்</u> மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது.

அலகு – 2

1. வானிலையியல் ஒரு <u>வானிலை</u> அறிவியலாகும்.
2. நாம் பருத்தி ஆடைகளை <u>கோடைக்</u> காலத்தில் அணிகிறோம்
3. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி <u>பஞ்சாப்</u>
4. கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு <u>மாஞ்சாரல்</u> காற்றுகள் உதவுகின்றன.
5. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு <u>சம மழைக்கோடுகள்</u> ஆகும்
6. இந்தியாவின் காலநிலை <u>அயன மண்டல பருவக்காற்றுக் காலநிலை</u> ஆக பெயரிடப்பட்டுள்ளது.
7. பருவக்காற்று காடுகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன <u>இலையுதிர்க் காடுகள்</u>
8. இமய மலையில் 2400 மீ உயரத்திற்கு மேல் காணப்படும் காடுகள் <u>ஆல்பைன் காடுகள்</u>
9. சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம் <u>ஆந்திர பிரதேசம்</u>
10. யுனேஸ்கோவின் (UNESCO) உயிர்க்கோளப் பாதுகாப்பு பெட்டகத்தின் ஒரு அங்கமாக இல்லாதது <u>கட்ச்</u>

DIRECTORATE OF SCHOOL EDUCATION PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு – 3

1. <u>செம்மண்</u> மண்ணில் இரும்பு ஆக்ஸைடு அதிகமாக காணப்படுகிறது.
2. எந்த நிறுவனம் இந்தியாவில் உள்ள மண் வகைகளை 8 பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது? <u>இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம்</u>
3. ஆறுகளின் மூலம் உருவாகும் மண் <u>வண்டல் மண்</u>
4. இந்தியாவின் உயரமான புவிஈர்ப்பு அணை <u>பக்ராநங்கல் அணை</u>
5. <u>பருத்தி</u> என்பது ஒரு வாணிபப் பயிர்
6. கரிசல் மண் <u>பருத்தி மண்</u> எனவும் அழைக்கப்படுகிறது.
7. உலகிலேயே மிக நீளமான அணை <u>ஹிராகுட் அணை</u>
8. இந்தியாவில் அதிகம் நெல் விளையும் மாநிலம் <u>மேற்கு வங்காளம்</u>
9. இந்தியாவில் தங்க இழைப் பயிர் என அழைக்கப்படுவது <u>சணல்</u>
10. காபி அதிகம் உற்பத்தி செய்யும் மாநிலம் <u>கர்நாடகா</u>

அலகு – 4

1. மாங்கனீசு இவற்றில் பயன்படுத்தப்படுகிறது <u>எஃகு தயாரிப்பு</u>
2. ஆந்த்ரசைட் நிலக்கரி <u>80% – 95%</u> கார்பன் அளவை கொண்டுள்ளது
3. பெட்ரோலியத்தில் உள்ள முக்கிய கனிமங்கள் ஹைட்ரஜன் மற்றும் <u>கார்பன்</u>
4. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் நகரம் <u>கோயம்புத்தூர்</u>
5. இந்தியாவில் முதல் சணல் ஆலை நிறுவப்பட்ட இடம் <u>கொல்கத்தா</u>

6. இந்தியாவில் முதல் அணுமின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம் **மகாராஷ்டிரம்**
7. மிக அதிகமாக கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம் **சூரியன்**
8. புகழ் பெற்ற சிந்திரி உரத் தொழிலகம் அமைந்துள்ள மாநிலம் **ஜார்கண்ட்**
9. சோட்டா நாகபுரி பீடபூமி பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு கருவாக இருப்பது **கனிமப்படிவுகள்**
10. இந்திய கடற்கரை பகுதி இரும்பு எஃகு தொழிலகங்களுள் ஒன்று அமைந்துள்ள இடம் **விசாகப்பட்டினம்**

அலகு — 5

1. மக்கள் தொகையின் பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவியல் பூர்வமான படிப்பு **மக்களியல்**
2. 2011 ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம் **கேரளா**
3. மனித வள மேம்பாடு **மனித வள மேம்பாட்டு குறியீடு** மூலம் கணக்கிடப்படுகிறது.
4. **சாலை** போக்குவரத்து நேரடியாக உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கிறது.
5. இந்தியாவில் தங்க நாற்கரச் சாலையின் நீளம் **5846 கி.மீ.**
6. இந்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்தின் நீளமானது **14500 கி.மீ.**
7. தேசிய தொலையுணர்வு மையம் அமைந்துள்ள இடம் **ஹைதராபாத்**
8. எளிதில் செல்லமுடியாத பகுதிகளுக்கு பயன்படும் போக்குவரத்து **வான்வழிப்போக்குவரத்து**
9. கீழ்க்கண்டவற்றில் எவை வானுலங்கு ஊர்தியுடன் (ஹெலிகாப்டர்) தொடர்புடையது? **பவன்ஹான்ஸ்**
10. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள் **பெட்ரோலியம்**

அலகு — 6

1. தமிழ்நாட்டின் அட்சப் பரவல் **8‘ 4 வ** முதல் **13 ‘35 வ** வரை உள்ளது.
2. தமிழ்நாட்டின் தீர்க்க பரவல் **76‘ 18 கி** முதல் **80‘ 20** கி வரை உள்ளது.
3. தமிழ்நாட்டில் உள்ள மிக உயரமான சிகரம் **தொட்டபெட்டா**
4. கீழ்க்கண்டவற்றில் தமிழ்நாட்டின் மேற்கு தொடர்ச்சி மலையில் அமையாத கணவாய் எது? **போர்காட்**
5. கீழ்க்கண்டவற்றில் அரபிக் கடலில் கலக்கும் ஆறு எது? **பெரியார்**
6. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் மாங்குரோவ் காடுகள் காணப்படும் மாவட்டம் எது? **கடலூர்**
7. இந்திய வன அறிக்கை 2017இன் படி தமிழ்நாட்டின் வனப்பரப்பளவு **20.21%**
8. பின்னடையும் பருவக்காற்று **வங்கக் கடல்** கடலிலிருந்து ஈரப்பதத்தை எடுத்துக் கொள்கிறது
9. கீழ்க்கண்டவற்றுள் மண் அரிப்பினால் அதிக அளவு பாதிக்கப்பட்ட மாவட்டம் **தேனி**
10. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் **தர்மபுரி**

அலகு — 7

1. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா **காவிரி டெல்டா**
2. தமிழ்நாட்டு மக்களின் இரண்டாவது முக்கிய உணவுப் பயிர் **சிறுதானியங்கள்**
3. 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் எழுத்தறிவு சதவீதம் **80.09**
4. தமிழ்நாட்டின் மிகப் பெரிய நீர்மின்சக்தி திட்டம் **மேட்டூர்**
5. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை **3 மற்றும் 15**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

அலகு — 6

1. நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கிடையே காணப்படும் பீடபூமி **கோயம்புத்தூர் பீடபூமி** ஆகும்.
2. கிழக்கு தொடர்ச்சி மலையின் தென்பகுதியில் உள்ள உயரமான சிகரம் **சோலைக்கரடு**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

3. ஆற்றுத் தீவான ஸ்ரீரங்கம் **கொள்ளிடம்** மற்றும் **காவிரி** ஆறுகளுக்கு இடையே அமைந்துள்ளது.
4. தேயிலை மற்றும் காபி செடிகள் பயிரிடுவதற்கு ஏற்ற மண் **சரளை மண்** ஆகும்.
5. **வரையாடு** தமிழ்நாட்டின் மாநில விலங்கு மற்றும் இதில் காணப்படும் இடம் நீலகிரி ஆகும்.

அலகு — 7

1. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண்மை துறையின் பங்கு 21 சதவீதத்தை வகிக்கிறது.
2. சாத்தனூர் அணை **தென்பெண்ணை** ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
3. இந்தியாவில் பொது-தனியார் கூட்டு நடவடிக்கையின் கீழுள்ள மொத்த சாலை திட்டங்களில், 20 சதவீதத்திற்கும் அதிகமாக பங்களிக்கும் தமிழ்நாடு **இரண்டாவது** இடத்தைப் பெற்றுள்ளது.
4. மும்பை மற்றும் டில்லியை அடுத்த இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் **சென்னை** ஆகும்.
5. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மதிப்புகளுக்கு இடையிலுள்ள வேறுபாடு **வர்த்தக சமநிலை** என அழைக்கப்படுகிறது.

DIRECTORATE OF SCHOOL EDUCATION PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

## III. பொருத்துக

அலகு — 1

| | | |
|---|---|---|
| 1. சாங்போ | - | பிரம்மபுத்திரா |
| 2. யமுனை | - | கங்கை ஆற்றின் துணை ஆறு |
| 3. புதிய வண்டல்படிவுகள் | - | காதர் |
| 4. காட்வின் ஆஸ்டின் (K2) | - | இந்தியாவின் உயர்ந்த சிகரம் |
| 5. சோழ மண்டலக் கடற்கரை | - | தென்கிழக்கு கடற்கரைச் சமவெளி |

அலகு — 2

| | | |
|---|---|---|
| 1. யானை பாதுகாப்புத் திட்டம் | - | யானைகள் பாதுகாப்பு |
| 2. உயிர்பன்மைச் சிறப்பு பகுதிகள் | - | இமயமலைகள் |
| 3. வடகிழக்குப் பருவக்காற்று | - | அக்டோபர் - டிசம்பர் |
| 4. அயன மண்டல முட்புதர் காடுகள் | - | பாலை மற்றும் அரைப்பாலைவனத் தாவரங்கள் |
| 5. கடலோரக் காடுகள் | - | கடற்கரைக் காடுகள் |

அலகு — 3

| | | |
|---|---|---|
| 1. இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் | - | உத்திரபிரதேசம் மற்றும் பீகார் |
| 2. காபி | - | கர்நாடகா |
| 3. டெகிரி அணை | - | இந்தியாவின் உயரமான அணை |
| 4. ஹிராகுட் அணை | - | மகாநதி |
| 5. தோட்டக்கலை | - | தங்கப்புரட்சி |

அலகு — 4

| | | |
|---|---|---|
| 1. பாக்சைட் | - | வானூர்தி |
| 2. ஜிப்சம் | - | சிமெண்ட் |
| 3. கருப்பு தங்கம் | - | நிலக்கரி |
| 4. இரும்பு தாது | - | மேக்னடைட் |
| 5. மைக்கா | - | மின்சாதனப் பொருட்கள் |

II

| | | |
|---|---|---|
| 1. இந்தியாவின் டெட்ராய்ட் | - | சென்னை |
| 2. அனல் மின்நிலையம் | - | 1975 |
| 3. காற்றாலை பண்ணை | - | குஜராத் |
| 4. ஓத சக்தி | - | திருவனந்தபுரம் |
| 5. சூரிய சக்தி | - | ஆந்திரப்பிரதேசம் |

அலகு — 5

| | | |
|---|---|---|
| 1. எல்லைப்புறச்சாலை | - | 1960 |
| 2. INSAT (இன்சாட்) | - | செயற்கைக்கோள் தகவல் தொடர்பு |
| 3. மேசகான் கப்பல்கட்டும் தளம் | - | மும்பை |
| 4. புறநகரப்பரவல் | - | நகர மயமாக்கலின் தாக்கம் |
| 5. கொங்கண் இரயில்வே | - | 1998 |

அலகு — 6

| | | |
|---|---|---|
| 1. குளிர்காலம் | - | டிசம்பர் -- பிப்ரவரி |
| 2. கோடைக்காலம் | - | மார்ச் -- மே |
| 3. தென்மேற்கு பருவக்காற்று | - | ஜூன் -- செப்டம்பர் |
| 4. வடகிழக்கு பருவக்காற்று | - | அக்டோபர் -- நவம்பர் |
| 5. மாஞ்சாரல் | - | முன் பருவ மழை |

அலகு — 7

| | | |
|---|---|---|
| 1. பாக்சைட் | - | சேர்வராயன் மலை |
| 2. ஜிப்சம் | - | திருச்சிராப்பள்ளி |
| 3. இரும்பு | - | சேலம் |
| 4. சுண்ணாம்புக்கல் | - | கோயம்புத்தூர் |

## IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

அலகு — 2

1. கூற்று: (A) பருவக் காற்றுகள் எளிதில் புரிந்து கொள்ள இயலாத வானிலை நிகழ்வாகும்.
காரணம்: (R) வானிலை வல்லுநர்கள் பருவக்காற்றின் தோற்றத்தைப் பற்றி பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர்
**அ) (A)மற்றும் (R) இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் சரி**

2. கூற்று: இமயமலையானது ஒரு காலநிலை அரணாகச் செயல்படுகிறது
காரணம் : இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்காற்றை தடுத்து இந்தியத் துணைக்கண்டத்தை மிதவெப்பமாக வைத்திருக்கிறது.
**அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி கூற்றுக்கான காரணம் சரி**

அலகு -3

1. கூற்று: பழங்கள் காய் வகைகள் மற்றும் பூக்கள் பயிரிடலில் ஈடுபடுவது தோட்டக்கலைத் துறையாகும்.
காரணம்: உலகளவில் இந்தியா மா, வாழை மற்றும் சிட்ரஸ் பழவகை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.
**ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல**

2. கூற்று : வண்மல் மண் ஆறுகளின் மூலம் அரிக்கப்பட்டு படியவைக்கப்பட்ட முக்கிய பொருட்களால் ஆன ஒன்று.
காரணம் : நெல் மற்றும் கோதுமை வண்டல் மண்ணில் நன்கு வளரும்
**அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம்**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 6

1. கூற்று : தமிழ்நாடு தென்மேற்கு பருவக்காற்று காலங்களில் அதிக மழையைப் பெறுவதில்லை

காரணம் : இது மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது

**அ) கூற்று காரணம் இரண்டும் சரி காரணம் கூற்றை விளக்குகிறது**

2. கூற்று : செம்மண்ணில் அதிக அளவு இரும்பு ஆக்சைடுகள் உள்ளன.

காரணம்: இது சுவருதலால் உருவாகிறது

**இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு**

அலகு — 7

1. கூற்று : கோயம்புத்தூர் திருப்பூர் மற்றும் ஈரோடு மண்டலம் தமிழ்நாட்டின் ஜவுளி பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகிறது

காரணம் : இவைகள் நெசவாலைகள் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை அளிக்கின்றன

**அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி காரணம் கூற்று காரணத்திற்கான சரியான விளக்கம் ஆகும்**

2. கூற்று : நீலகிரி தமிழ்நாட்டின் குறைந்த மக்கள்தொகை கொண்ட மாவட்டம்

காரணம் : இது தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளது

**ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

## V. பொருந்தாத விடையைத் தேர்வு செய்க

அலகு — 2

1. ஓதக்காடுகள் இதனைச் சுற்றி காணப்படுகிறது.

(அ) <u>பாலைவனம்</u> (ஆ) கங்கை பிரம்மபுத்ரா டெல்டா
(இ) கோதாவரி டெல்டா (ஈ) மகாநதி டெல்டா

2. இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகள்

அ) அட்ச பரவல் (ஆ) உயரம் (இ) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம் (ஈ) <u>மண்</u>

அலகு — 3

1. அ) கோதுமை ஆ) நெல் இ) திணை வகைகள் ஈ) <u>காபி</u>
2. அ) காதர் ஆ) பாங்கர் இ) வண்டல் மண் ஈ) <u>**கரிசல் மண்**</u>
3. அ) வெள்ளப் பெருக்கு கால்வாய் ஆ) வற்றாத கால்வாய்
இ) <u>ஏரிப்பாசனம்</u> (ஈ) கால்வாய்

## VI. காரணம் கூறுக

அலகு — 1

1. இமயமலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன.

   புவிமேலோட்டு பேரியக்க விசையின் காரணமாக புவிமேலோடு மடிக்கப்பட்டு மடிப்பு மலைகளாக உருவாகின

2. வட இந்தியா ஆறுகள் வற்றாத ஆறுகள்.

   இவை பனி மலைகளில் உருவாவதாலும், கோடையில் பனி உருகுவதாலும் இவ்வாறுகள் ஆண்டு முழுதும் ஓடிக்கொண்டிருக்கின்றன.

3. சோட்டா நாகபுரி பீடபூமி கனிம வளம் நிறைந்தது.

   இப்பீடபூமி இரும்புத்தாது மற்றும் நிலக்கரி போன்ற கனிமப்படிவுகளை அதிகம் கொண்டிருக்கிறது.

4. இந்தியப் பெரும் பாலைவனம் மருஸ்தலி என்று அழைக்கப்படுகிறது.

   இப்பாலைவனத்தில் மருஸ்தலி மணல் குன்றுகள் நிறைந்துள்ளன. இவை வேளாண்மை மற்றும் மக்கள் வாழ சாதகமற்று இருப்பதால் மருஸ்தலி (இறந்த நிலம்) எனப்படுகிறது.

5. வடக்கு கிழக்கு மாநிலங்கள் “ ஏழு சகோதரிகள்” என அழைக்கப்படுகின்றன?

   இம்மாநிலங்களின் நில அமைப்பு, கலாச்சாரம் போன்றவற்றில் ஒன்றுபட்டு காணப்படுவதால் இவை ஏழு சகோதரிகள் என அழைக்கப்படுகின்றன.

6. கோதாவரி ஆறு விருத்தகங்கா என அழைக்கப்படுகிறது

   கோதாவரி ஆறு தீபகற்ப இந்தியாவில் பாயும் மிக நீளமான ஆறு ஆகும்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 2

1. மேற்கு கடற்கரை சமவெளி குறுகலானது.

   மேற்கு கடற்கரை சமவெளியில் பாயும் ஆறுகள் டெல்டாக்களை உருவாக்குவதில்லை. எனவே இது குறுகலானது.

2. இந்தியா அயன மண்டல பருவக்காற்று காலநிலையை பெற்றுள்ளது.

   இந்தியா அயன மண்டல பகுதியில் அமைந்துள்ளது.

3. மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிரானவை.

   உயரே செல்ல செல்ல வளிமண்டல வெப்பம் 1000 மீக்கு 6.5°C குறைவதால் மலைப்பகுதிகள் சமவெளிகளை விட குளிராக இருக்கின்றன.

அலகு — 3

1. வேளாண்மை இந்தியாவின் முதுகெலும்பு.

   நாட்டின் 50% க்கும் மேலான மக்களுக்கு வேலைவாய்ப்பை தருவதால் இது இந்தியாவின் முதுகெலும்பாகும்.

2. மழை நீர் சேமிப்பு அவசியம்.

   நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தவும் விவசாயம், குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும் மழை நீர் சேமிப்பு அவசியம்.

3. சிறிய வேளாண் பண்ணைகள் இந்தியாவில் அதிகம்

   இந்தியாவில் 67% நில உரிமையாளர்கள் குறு விவசாயிகள் உள்ளதால் சிறிய வேளாண் பண்ணைகள் அதிகம்.

அலகு — 6

1. கிழக்கு தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

   இவை பல இடங்களில் வங்காள கடலில் கலக்கும் ஆறுகளால் பிரிக்கப்பட்டுள்ளதால் தொடர்ச்சியற்று காணப்படுகிறது.

2. தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் தமிழ்நாடு மிக குறைந்த மழையைப் பெறுகிறது

   மழை மறைவுப் பிரதேசத்தில் தமிழ்நாடு அமைந்துள்ளதால், தென்மேற்கு பருவக்காற்று காலத்தில் தமிழ்நாடு மிக குறைந்த மழையைப் பெறுகிறது.

3. வண்டல் மண் என்பது ஒரு வளமான மண்.

   சுண்ணாம்பு சத்து, பொட்டாசியம். மெக்னீசியம், நைட்ரஜன், பாஸ்பாரிக் அமிலம் போன்ற தாதுக்கள் வண்டல் மண்ணில் உள்ளதால் அது ஒரு வளமான மண் ஆகும்.

4. கடலூர் ஒரு பல்வழி பேரழிவு மண்டலம்.

   வெள்ளம், புயல் மற்றும் சுனாமி ஆகிய பேரழிவுகளால் கடலூர் பாதிக்கப்படுவதால் அது ஒரு பல்வழி பேரழிவு மண்டலமாகும்

அலகு — 7

1. விவசாயிகள் இராசயன வேளாண்மையிலிருந்து கரிம (இயற்கை) வேளாண்மைக்கு மாறுகிறார்கள் ஏன்?
   இயற்கை வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கத்தோடு மத்திய அரசானது தேசிய தேசிய இயற்கை கரிம வேளாண்மைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
2. கிராமங்களைவிட பெருநகரங்களில் மக்கள் தொகை நெருக்கம் அதிகம் ஏன்?
   வேலை வாய்ப்பு, சுகாதாரம், சிறந்த கல்வி போக்குவரத்து போன்ற வசதிகள் பெருநகரங்களில் கிடைக்கின்றன.
3. தமிழ்நாட்டின் நெசவாலை தலைநகர் என கரூர் அழைக்கப்படுவது ஏன்?
   ஏராளமான நெசவாலைகள் கரூரில் குவிந்து இருப்பதால் கரூர் நெசவாலை தலைநகர் என்றழைக்கப்படுகிறது.
4. கோயில்களில் பெரும்பாலும் கூட்ட நெரிசலால் விபத்துக்கள் ஏற்படுகின்றன ஏன்?
   கோயில்களில் திருவிழாக்காலங்களில் அதிக அளவு பக்தர்கள் ஒன்று சேர்வதால் கூட்ட நெரிசலால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARAM THANDOKKI 2019-20

## VII. வேறுபடுத்துக

அலகு — 1

**1. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்.**

| | இமயமலை ஆறுகள் | தீபகற்ப ஆறுகள் |
|---|---|---|
| 1. | இமயமலையில் உற்பத்தியாகின்றன | மேற்கு தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகின்றன |
| 2. | வற்றாத ஆறுகள் | வற்றும் ஆறுகள் |

**2. மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகள்.**

| | மேற்கு தொடர்ச்சி மலைகள் | கிழக்கு தொடர்ச்சி மலைகள் |
|---|---|---|
| 1. | அரேபிய கடலுக்கு இணையாக செல்கிறது | வங்காள விரிகுடா கடலுக்கு இணையாக செல்கிறது |
| 2. | தொடர்ச்சியானவை | தொடர்ச்சியற்றவை |

3. **இமாத்திரி மற்றும் இமாத்திரி.**

| | **இமாத்திரி** | **இமாச்சல** |
|---|---|---|
| 1. | பெரிய இமயமலைகள் | சிறிய இமயமலைகள் |
| 2. | 6000மீ உயரம் கொண்டவை | 3700மீ முதல் 4500மீ வரை உயரம் கொண்டவை |

4. **மேற்கு கடற்கரை சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரை சமவெளி.**

| | **மேற்கு கடற்கரை சமவெளி** | **கிழக்கு கடற்கரை சமவெளி** |
|---|---|---|
| 1. | மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும், அரேபிய கடலுக்கும் இடையில் உள்ளது | கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கும், வங்காள விரிகுடா கடலுக்கும் இடையில் உள்ளது |
| 2. | மேற்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது | கிழக்கு கடற்கரைக்கு இணையாக உள்ளது |

அலகு — 2

1. **வானிலை மற்றும் காலநிலை.**

| | **வானிலை** | **காலநிலை** |
|---|---|---|
| 1. | ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையை குறிப்பது | ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30-35 ஆண்டுகள் சராசரி வானிலையை குறிப்பது |
| 2. | படிப்பு-வானிலையியல் | படிப்பு-காலநிலையியல் |

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOOL 2019-20

2. **அயன மண்டல பசுமைமாறா காடுகள் மற்றும் இலையுதிர்க் காடுகள்.**

| | **அயன மண்டல பசுமைமாறா காடுகள்** | **இலையுதிர்க் காடுகள்** |
|---|---|---|
| 1. | ஆண்டு மழை 200 செ.மீ மேல் | ஆண்டு மழை 100-200 செ.மீ வரை |
| 2. | ரப்பர், எபனி, மகோகனி மரங்கள் | சந்தன மரங்கள், ரோஸ் மரங்கள் |

3. **வடகிழக்கு பருவக்காற்று மற்றும் தென்மேற்கு பருவக்காற்று.**

| | **வடகிழக்கு பருவக்காற்று** | **தென்மேற்கு பருவக்காற்று** |
|---|---|---|
| 1. | அக்டோபர் - டிசம்பர் | ஜூன் — செப்டம்பர் |
| 2. | இந்தியாவிற்கு 25% மழைப்பொழிவு தருகிறது | இந்தியாவிற்கு 75% மழைப்பொழிவு தருகிறது |

அலகு — 3

1. **ராபி பருவம் மற்றும் காரிஃப் பருவம்.**

| | **ராபி பருவம்** | **காரிஃப் பருவம்** |
|---|---|---|
| 1. | அக்டோபர் - மார்ச் | ஜூன் — செப்டம்பர் |

| | | |
|---|---|---|
| 2. | கோதுமை, பருப்பு, பார்லி பயிரிடப்படுகின்றன | நெல், பருத்தி, சோளம் பயிரிடப்படுகின்றன |

2. **வெள்ளபெருக்கு கால்வாய் மற்றும் வற்றாத கால்வாய்.**

| | வெள்ளபெருக்கு கால்வாய் | வற்றாத கால்வாய் |
|---|---|---|
| 1. | ஆற்றிலிருந்து நேரடியாக நீர் எடுத்துச்செல்லும் கால்வாய்கள் | வற்றாத நதிகளில் அணைகட்டி நீர் எடுத்துச்செல்லும் கால்வாய்கள் |
| 2. | வெள்ள காலத்தில் நீரை திசை திருப்பலாம் | நீர் பாசனத்திற்கு ஏற்றது |

3. **கடல் மீன் பிடிப்பு மற்றும் உள்நாட்டு மீன் பிடிப்பு.**

| | கடல் மீன் பிடிப்பு | உள்நாட்டு மீன் பிடிப்பு |
|---|---|---|
| 1. | கடற்கரை, ஆழ்கடல் மீன்பிடிப்பு | ஆறு,ஏரி, குளம், மீன் பிடிப்பு |
| 2. | கேரளா முதலிடம் | ஆந்திரா முதலிடம் |

4. **வண்டல் மண் மற்றும் கரிசல் மண்.**

| | வண்டல் மண் | கரிசல் மண் |
|---|---|---|
| 1. | வண்டல், மண் மண்டி, களிமண் போன்ற கலவைகளுடன் காணப்படுகிறது | ஈரமாக இருக்கும்போது சேறாக இருக்கும் |
| 2. | நெல், கோதுமை, கரும்பு முதலியன முக்கிய பயிர்கள் | பருத்தி, புகையிலை, தினை வகைகள் முதலியன முக்கிய பயிர்கள் |

அலகு — 4

1. **புதுப்பிக்க இயலும் வளங்கள் மற்றும் புதுப்பிக்க இயலாத வளங்கள்.**

| | புதுப்பிக்க இயலும் வளங்கள் | புதுப்பிக்க இயலாத வளங்கள் |
|---|---|---|
| 1. | பயன்பாட்டிற்குப் பிறகு இயற்கை முறையில் மீட்டுருவாக்கம் செய்துக் கொள்ள இயலும் | பயன்பாட்டிற்குப் பிறகு இயற்கை முறையில் மீண்டும் மீட்டுருவாக்கம் செய்துக் கொள்ள இயலாது |
| 2. | சூரியன், காற்று, அலை சக்தி, ஓத சக்தி | நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு |

2. **உலோகக் கனிமங்கள் மற்றும் அலோக கனிமங்கள்.**

| | உலோகக் கனிமங்கள் | அலோக கனிமங்கள் |
|---|---|---|
| 1. | ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உலோகங்களைக் கொண்டிருக்கும் | உலோக தன்மை இல்லை |
| 2. | இரும்பு, தங்கம் | நிலக்கரி, பெட்ரோல் |

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

3. **வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்.**

| | **வேளாண் சார்ந்த தொழிலகங்கள்** | **கனிமம் சார்ந்த தொழிலகங்கள்** |
|---|---|---|
| 1. | வேளாண் பொருட்கள் மூலப்பொருள் | கனிம பொருட்களை மூலப்பொருள் |
| 2. | பருத்தி, சணல், சர்க்கரை ஆலைகள் | இரும்பு, எஃகு ஆலைகள் |

4. **சணல் ஆலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள்.**

| | **சணல் ஆலைகள்** | **சர்க்கரை ஆலைகள்** |
|---|---|---|
| 1. | உலகில் சணல் உற்பத்தியில் இந்தியா முதலிடம் | உலகில் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா இரண்டாம் இடம் |
| 2. | நாட்டில் சணல் உற்பத்தியில் மேற்கு வங்காளம் முதல் இடம் | நாட்டில் சர்க்கரை உற்பத்தியில் உத்திர பிரதேசம் முதல் இடம் |

5. **மரபுசாரி எரிசக்தி மற்றும் மரபு சாரா எரிசக்தி.**

| | **மரபுசாரி எரிசக்தி** | **மரபு சாரா எரிசக்தி** |
|---|---|---|
| 1. | புதுபிக்க இயலாது | புதுபிக்க இயலும் |
| 2. | அனல், அணு மின்சக்தி | சூரியன், காற்று, நீர், ஓதசக்தி |

அலகு — 5

1. **மக்களடர்த்தி மற்றும் மக்கள் தொகை வளர்ச்சி.**

| | **மக்களடர்த்தி** | **மக்கள் தொகை வளர்ச்சி** |
|---|---|---|
| 1. | ஒரு சதுர கி.மீ பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை | ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒருநாட்டின் மக்கள் தொகை எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றம் |
| 2. | பீகார் — அதிக மக்களடர்த்தி உள்ள மாநிலம் | பிறப்பு விகிதம், இறப்பு விகிதம் மற்றும் இடம் பெயர்வுகளால் பாதிக்கப்படுகிறது |

2. **தனிநபர் தகவல் தொடர்பு மற்றும் பொது தகவல் தொடர்பு.**

| | **தனிநபர் தகவல் தொடர்பு** | **பொது தகவல் தொடர்பு** |
|---|---|---|
| 1. | இரு தனி நபர்களுக்கு இடையேயான தகவல் பரிமாற்றம் | ஒரே நேரத்தில் பல லட்சம் மக்கள் தகவல்களை பெறுவது |
| 2. | அஞ்சல், மின் அஞ்சல், கைப்பேசி | வானொலி, தொலைகாட்சி, வலைதளம் |

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

3. **அச்சு ஊடகம் மற்றும் மின்னணு ஊடகம்.**

| | அச்சு ஊடகம் | மின்னணு ஊடகம் |
|---|---|---|
| 1. | செய்தித்தாள், வார, மாத இதழ் | தொலைக்காட்சி, இணையம், கைப்பேசி |
| 2. | எல்லா நேரத்திலும் தகவல் பெறலாம் | எல்லா நேரத்திலும் தகவல் பெற முடியாது |

4. **சாலை வழிப் போக்குவரத்து மற்றும் இரயில் வழிப் போக்குவரத்து.**

| | சாலை வழிப் போக்குவரத்து | இரயில் வழிப் போக்குவரத்து |
|---|---|---|
| 1. | உலகின் இரண்டாவது நீண்ட சாலை வலைப்பின்னல் | இந்திய ரயில்வே உலக அளவில் இரண்டாவது பெரியது |
| 2. | மலிவானது | மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் தேசிய ஒறுமைப்பாட்டை வளர்க்கிறது |

5. **நீர்வழிப்போக்குவரத்து மற்றும் வான் வழிப் போக்குவரத்து.**

| | நீர்வழிப்போக்குவரத்து | வான் வழிப் போக்குவரத்து |
|---|---|---|
| 1. | மெதுவானது | விரைவானது |
| 2. | உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மற்றும் கடல் வழிப்போக்குவரத்து | உள்நாட்டு வான்வழி போக்குவரத்து மற்றும் சர்வதேச வான்வழி போக்குவரத்து |

6. **உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்.**

| | உள்நாட்டு வணிகம் | பன்னாட்டு வணிகம் |
|---|---|---|
| 1. | ஒரு நாட்டிற்குள் நடைபெறுவது | ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளுக்கு இடையே நடைபெறுவது |
| 2. | உள்ளூர் வணிகம் என்றும் அழைக்கப்படுகிறது. | அயல்நாட்டு வணிகம் என்றும் அழைக்கப்படுகிறது. |

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 6

1. **மேற்கு தொடர்ச்சி மலைகள் (தமிழகத்தில்) மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள் (தமிழகத்தில்).**

| | மேற்கு தொடர்ச்சி மலைகள் (தமிழகத்தில்) | கிழக்கு தொடர்ச்சி மலைகள் (தமிழகத்தில்) |
|---|---|---|
| 1. | தொடர்ச்சியானவை | தொடர்ச்சியற்றவை |
| 2. | மலைகள் - நீலகிரி, ஆனைமலை, பழனிமலை, அகத்தியமலை | மலைகள் - ஜவ்வாது, சேர்வராயன், கல்வராயன், கொல்லிமலை |

**2. தென்மேற்கு பருவக்காற்று (தமிழகத்தில்) மற்றும் வடகிழக்கு பருவக்காற்று (தமிழகத்தில்).**

| | **தென்மேற்கு பருவக்காற்று (தமிழகத்தில்)** | **வடகிழக்கு பருவக்காற்று (தமிழகத்தில்)** |
|---|---|---|
| 1. | ஜூன் முதல் செப்டம்பர் வரை | அக்டோபர் முதல் டிசம்பர் வரை |
| 2. | தமிழ்நாடு மிக குறைந்த மழையை பெறுகிறது | தமிழ்நாடு அதிக மழையை பெறுகிறது |

**3. பசுமை மாறக்காடுகள்(தமிழகத்தில்) மற்றும் வெப்பமண்டல இலையுதிர்க் காடுகள் (தமிழகத்தில்).**

| | **பசுமை மாறக்காடுகள்(தமிழகத்தில்)** | **வெப்பமண்டல இலையுதிர்க் காடுகள் (தமிழகத்தில்)** |
|---|---|---|
| 1. | ஆண்டு மழை 200 செ.மீ மேல் | ஆண்டு மழை 100 முதல் 200 செ.மீ வரை |
| 2. | ரப்பர், எபோனி, மகோகனி மரங்கள் | சந்தன மரம், ரோஸ் மரம் |

அலகு — 7

**1. கடல் மீன் பிடித்தல் மற்றும் உள்நாட்டு மீன் பிடித்தல்.**

| | **கடல் மீன் பிடித்தல்** | **உள்நாட்டு மீன் பிடித்தல்** |
|---|---|---|
| 1. | கடல் மற்றும் பேராழிகளில் மீன் பிடித்தல் | ஏரிகள், ஆறுகள், குளங்கள், கழிமுகங்களில் மீன் பிடித்தல் |
| 2. | பெரிய மற்றும் இயந்திர படகுகள் மூலம் மீன் பிடித்தல் | கட்டுமரம், டீசல் படகுகள் மூலம் மீன் பிடித்தல் |

**2. உணவுப் பயிர்கள் மற்றும் வாணிபப் பயிர்கள்.**

| | **உணவுப் பயிர்கள்** | **வாணிபப் பயிர்கள்** |
|---|---|---|
| 1. | உணவிக்காக பயிரிடப்படுவது | வாணிபத்திற்காக பயிரிடப்படுவது |
| 2. | முக்கிய உணவுப் பயிர் நெல், திணை, தானியங்கள் | முக்கிய வாணிபப் பயிர்கள் — பருத்தி, சணல் |

**3. மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர்.**

| | **மேற்பரப்பு நீர்** | **நிலத்தடி நீர்** |
|---|---|---|
| 1. | ஆற்றுப்படுகை, நீர்த்தேக்கம், ஏரிகளில் உள்ள நீர் | ஆழ்துளைக் கிணறு, திறந்த கிணறுகளில் உள்ள நீர் |
| 2. | 95% உபயோகப் படுத்தப்படுகிறது. | 80% உபயோகப் படுத்தப்படுகிறது. |

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NO.1 2019-20

## VIII. சுருக்கமான விடையளி

1. இந்திய திட்ட நேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.
   * இந்தியாவின் கிழக்கிலுள்ள அருணாச்சல பிரதேசத்தில் மேற்கிலுள்ள குஜராத்தைக் காட்டிலும் இரண்டு மணி நேரம் முன்னதாகவே சூரியன் உதயமாகிறது. இந்த நேர வேறுபாட்டை தவிர்ப்பதற்காக, இந்திய திட்ட நேரம் எடுத்துக் கொள்ளப்படுகிறது.
2. தக்கான பீடபூமி — குறிப்பு வரைக.
   * இது தோராயமாக முக்கோண வடிவம் கொண்டது. வடமேற்கு திசையில் விந்திய, சாத்பூரா மலைத் தொடர்களையும் வடக்கில் மகாதேவ், மைக்காலா குன்றுகளையும் வடகிழக்கில் இராஜ்மகால் குன்றுகளையும், மேற்கில் மேற்கு தொடர்ச்சி மலைகளையும், கிழக்கில் கிழக்கு தொடர்ச்சி மலைகளையும் எல்லைகளாகக் கொண்டது.
3. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி கூறுக.
   * நர்மதை
   * தபதி
4. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.
   * இந்தியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இலட்சத்தீவு முருயைப் பாறைகளால் ஆனது. இத்தீவுகள் சுமார் 32 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டதாகும். இதன் நிர்வாகத் தலைநகரம் காவராத்தி ஆகும். இலட்சத் தீவு, மினிக்காய் மற்றும் அமினித் தீவு கூட்டங்கள் உள்ளன.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

<u>அலகு-2</u>

1. வானிலையியல் வரையறு.
   வானிலையியல் பல்வேறு கூறுகளைப் பற்றி, குறிப்பாக வானிலை முன்னறிவிப்பு பற்றி ஒரு அறிவியல் பிரிவு.
2. இயல்பு வெப்ப வீழ்ச்சி என்றால் என்ன?
   புவிப்பரப்பிலிருந்து உயரே செல்ல செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் $6.5^{\circ}$ஊ என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது. இதற்கு இயல்பு வெப்ப வீழச்சி என்ற பெயர்.
3. ஜெட் காற்றோட்டங்கள் என்றால் என்ன?
   கீழை ஜெட் காற்றோட்டங்கள் தென்மேற்கு மற்றும் பின்னடையும் பருவக்காற்று காலங்களில் வெப்பமண்டல தாழ்வழுத்தங்களை உருவாக்குகின்றன.
4. பருவக் காற்று குறித்து ஒரு சிறு குறிப்பு எழுதுக.
   பருவக்காற்று என்ற சொல் பருவங்களுக்கேற்ப மாறி வீசம் காற்றுகளை குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்டது. இக்காற்று கோடைக்காலத்தில் தென்மேற்கு திசையிலிருந்து வடகிழக்கு நோக்கியும், குளிர்காலத்தில் வடகிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு நோக்கியும் வீசுகிறது.
5. இந்தியாவின் நான்கு பருவக் காலங்களைக் குறிப்பிடுக.
   1. குளிர்காலம்: ஜனவரி முதல் பிப்ரவரி வரை
   2. கோடைக்காலம்: மார்ச் முதல் மே வரை
   3. தென்மேற்கு பருவக்காற்று அல்லது மழைக்காலம்: ஜுன் முதல் செப்டம்பர் வரை
   4. வடகிழக்கு பருவக்காற்று அல்லது காலம்: அக்டோபர் முதல் டிசம்பர் வரை
6. பருவமழை வெடிப்பு என்றால் என்ன?
   தென் மேற்குப் பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென் இந்தியாவில்) பருவமழை வெடிப்பு எனப்படுகிறது.
7. அதிக மழைப்பெறும் பகுதிகளைக் குறிப்பிடுக.
   மேற்கு கடற்கரை, அசாம், மேகாலயாவின் தென்பகுதி, திரிபுரா, நாகலாந்து, அருணாச்சல பிரதேசம் போன்ற பகுதிகள் 200 செ.மீட்டருக்கும் அதிகமாக மழைப்பொழிவையும் பெறுகின்றது.

8. இந்தியாவில் சதுப்புநிலக் காடுகள் காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.

கங்கை —பிரம்மபுத்திரா டெல்டா பகுதிகளில் உலகில் மிகப் பெரிய சதுப்பு நிலக் காடுகள் உள்ளன. மகாநதி, கோதாவரி மற்றும் கிருஷ்ணா நதிகளின் டெல்டா பகுதிகளிலும் இவ்வகை ஓதக்காடுகள் காணப்படுகின்றன. இவை மாங்குரோவ் காடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

9. அயன மண்டல பசுமை மாறாக் காடுகளிலுள்ள மரங்களை எழுதுக.

இரப்பர், எபனி, மகோகனி, மூங்கில், போன்ற மரங்கள் இங்குக் காணப்படுகின்றன.

10. இந்தியாவில் உள்ள உயிர்கோள காப்பகங்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

| வ. எண் | உயிர்கோள காப்பகங்கள் | மாநிலம் |
|---|---|---|
| 1 | அகத்தியமலை | கேரளா |
| 2 | மன்னார் வளைகுடா | தமிழ்நாடு |
| 3 | கஞ்சன்ஜங்கா | சிக்கிம் |
| 4 | நீலகிரி | தமிழ்நாடு |
| 5 | சுந்தரவனம் | மேற்கு வங்கம் |

11. புலிகள் பாதுகாப்புத் திட்டம் என்றால் என்ன?

புலிகள் பாதுகாப்பு திட்டம் 1973-ல் தொடங்கப்பட்டது. புலிகளை பாதுகாக்கவும் அதன் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்தோடும் புலிகள் பாதுகாப்பகங்கள் தொடங்கப்பட்டன.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SUGARATHI NOKKI 2019-20

<u>அலகு — 3</u>

1. மண் - வரையறு.

மண் என்பது கனிமங்களின் கூட்டுப் பொருட்கள், மக்கிய தாவரங்கள், விலங்கினப் பொருட்கள், காற்று மற்றும் நீர் ஆகியவற்றை உள்ளடக்கியது.

2. இந்தியாவில் காணப்படும் மண் வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.

வண்டல் மண், கரிசல் மண், செம்மண், சரளை மண, காடு மற்றும் மலை மண், வறண்ட பாலை மண், உப்பு மற்றும் கார மண், களிமண் மற்றும் சதுப்பு மண்.

3. கரிசல் மண்ணின் ஏதேனும் இரண்டு பண்புகளை எழுதுக.

ஈரமாக இருக்கும் போது சேறாகவும், ஈரப்பதத்தை நீண்ட நேரம் தக்க வைத்துக் கொள்ளும் தன்மையும் உடையது.

4. பல்நோக்குத் திட்டம் என்றால் என்ன?

ஆற்றின் குறுக்கே பல்வேறு நோக்கங்களுக்காக அணைகளைக் கட்டுவதால் இவை பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டம் என்று அழைக்கப்படுகிறது. நீர்பாசனம், நீர்மின் உற்பத்தி, குடிநீர் மற்றும் தொழிற்சாலைக்கு நீர் வழங்குதல், வெள்ளத்தடுப்பு, மீன்வள மேம்பாடு, நீர் வழிப் போக்குவரத்து போன்றவை இதன் நோக்கங்களாகும்.

5. வேளாண்மை வரையறு.

வேளாண்மை என்பது குறிப்பிடப்பட்ட பயிர்களை உற்பத்தி செய்தும் மற்றும் கால்நடைகளை வளர்த்தும் மக்களுக்கு உணவையும் கால்நடைகளுக்கு தீவனத்தையும், நார் மற்றும் தேவையான இதர பொருட்களை வழங்குவதாகும்.

6. இந்தியாவின் வேளாண்மை முறைகளை குறிப்பிடுக.

* தன்னிறைவு வேளாண்மை
* இடப்பெயர்வு வேளாண்மை
* தீவிர வேளாண்மை
* வறண்ட நில வேளாண்மை
* கலப்பு வேளாண்மை
* படிக்கட்டு முறை வேளாண்மை

7. இந்தியாவின் வேளாண்மை பருவங்களை குறிப்பிடுக.

காரீஃப் பருவம், ராபி பருவம், சையத் பருவம்.

8. இந்தியாவின் தோட்டப் பயிர்களை குறிப்பிடுக.

தேயிலை, காபி, இரப்பர் மற்றும் வாசனை பொருட்கள் ஆகியவை இந்தியாவின் முக்கியத் தோட்டப் பயிர்களாகும்.

9. கால்நடைகள் என்றால் என்ன?

கால்நடைகள் இந்தியாவின் விவசாயத்தோடு ஒருங்கிணைந்த கூறுகள் ஆகும். மாடுகள், வெள்ளாடுகள், எருமைகள், செம்மறியாடுகள், பன்றிகள் ஆகியவை முக்கியமான கால்நடைகள் ஆகும்.

10. இந்தியாவின் மீன்வளர்ப்பு பிரிவுகளைப் பற்றி ஒரு சுருக்கமான குறிப்பு தருக.

* இந்தியாவில் மீன் வளர்ப்பு இருவகைப்படும். அவை கடல் மீன் பிடித்தல் மற்றும் உள்நாட்டு மீன் பிடித்தல்.
* கேரளா, கடல் மீன் உற்பத்தியில் முதன்மையாக உள்ளது.
* ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள், குளங்கள் போன்ற நீர் நிலைகளில் நடைபெறுவது உள்நாட்டு மீன் பிடித்தல் ஆகும்.
* இந்தியாவில் ஆந்திர பிரதேசம் உள்நாட்டு மீன் உற்பத்தியில் முதன்மையாக திகழ்கிறது.

## அலகு — 4

1. வளத்தை வரையறுத்து அதன் வகைகளை குறிப்பிடுக.

இயற்கையிலிருந்து பெறப்பட்டு உயிரினங்களால் பயன்படுத்தும் அனைத்து வளங்களும் இயற்கை வளம் என்று அழைக்கப்படுகிறது.

* புதுப்பிக்கக் கூடிய வளங்கள்
* புதுப்பிக்க இயலா வளங்கள்.

2. இந்தியாவில் இரும்பு தாது உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் மாநிலங்களைக் குறிப்பிடுக.

சுமார் 79 சதவீதம் ஹேமடைட் இரும்புத்தாது படிவுகள், அசாம், பீகார், சத்தீஸ்கர், ஜார்கண்ட், ஒடிசா மற்றும் உத்திரப் பிரதேசம் மாநிலங்களில் உள்ளது.

3. கனிமங்கள் மற்றும் அதன் வகைகள் யாவை?

ஒரு குறிப்பிட்ட வேதியியல் மற்றும் இயற்பியல் பண்புகளைக் கொண்ட உயிருள்ள மற்றும் உயிரற்ற இயற்கை மூலங்கள் கனிமங்கள் ஆகும். கனிமங்கள் இரண்டு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவை உலோகக் கனிமங்கள், அலோகக் கனிமங்கள்.

4. மெக்னீசியத்தின் பயன்களை குறிப்பிடுக.

ஒரு டன் இரும்பு எக்கு உற்பத்தி செய்வதற்கு 10 கிலோ மாங்கனீசு தேவைப்படுகிறது. வெளுக்கும் தூள், பூச்சிக்கொல்லிகள், வண்ணப்பூச்சிகள், மின்கலன்கள் போன்றவைத் தயாரிப்பதற்கு மாங்கனீசு பயன்படுகிறது.

5. இயற்கை எரிவாயு என்றால் என்ன?

இது ஆயரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அழிந்து புதையுண்ட தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் அதிக வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக மக்குவதன் மூலம் உண்டாகக்கூடிய ஒரு வாயு.

6. நிலக்கரியின் வகைகளை அதன் கரிம அளவுகளுடன் குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| ஆந்தரசைட் | - | 80 முதல் 90 சதவீதம் |
| பிட்டுமினஸ் | - | 60 முதல் 80 சதவீதம் |
| பழுப்பு நிலக்கரி | - | 40 முதல் 60 சதவீதம் |
| மரக்கரி | - | 40 சதவீதத்திற்கும் குறைவு. |

7. இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக.

ஆந்திரப் பிரதேசம், பீகார், அசாம், உத்திரப் பிரதேசம், சத்தீஸ்கர் மற்றும் ஒடிசா சணல் பொருள் உற்பத்தி பொருட்களின் மாநிலங்களாகும்.

8. இந்தியாவின் முக்கிய எண்ணெய் உற்பத்தி பகுதிகளைக் குறிப்பிடுக.

மும்பை ஹை, குஜராத் கடற்கரை, பிரம்மபுத்ரா பள்ளதாக்கு, அசாம்.

## அலகு — 5

1. மனிதவள மேம்பாடு என்றால் என்ன?

டாக்டர் மெகபூப்-உல்-ஹக் என்ற பொருளாதார நிபுணரின் கூற்றுப்படி, மனிதவள மேம்பாடு என்பது கல்வி, உடல்நலம், வருமானம், அதிகாரம் போன்றவைகளில் மக்களுக்கான வாய்ப்புகள் அதிகப்படுத்தும் ஒரு செயல் முறையாகும்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION PUDUCHERRY
SUGARATHA NOKKI 2019-20

2. இடம்பெயர்வு என்றால் என்ன? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

இடம்பெயர்வு என்பது ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மக்கள் இடம்பெயர்ந்து செல்வதாகும். இது உள்நாட்டு இடம்பெயர்வு மற்றும் சர்வதேச இடம்பெயர்வு என இருவகைப்படும்.

3. இரயில் போக்குவரத்தின் நன்மைகள் ஏதேனும் நான்கனை எழுதுக.

இந்திய இரயில்வே அமைப்பு நாட்டினுடைய உள்நாட்டு போக்குவரத்திற்கான முக்கிய உயிர் நாடியாக அமைந்துள்ளது. மிக அதிக அளவிலான பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் தேவையை பூர்த்தி செய்வதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பை இரயில்வே அளித்துவருகிறது.

4. நம் நாட்டின் குழாய் போக்குவரத்து அமைப்பு பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

குழாய் போக்குவரத்து அமைப்பதற்கு ஆரம்பகால செலவுகள் அதிகம். ஆனால் பின்னர் இதனை பராமரிப்பதற்கான செலவு மிகவும் குறைவு. இவற்றை கடினமான நிலப்பகுதிகளிலும், நீருக்கு அடியிலும் அமைக்க இயலும். மேல் அசாமில் உள்ள எண்ணெய் வயலில் இருந்து கான்பூர் வரையிலும், குஜராத்தில் உள்ள சலாயா பகுதியிலுருந்து, பஞ்சாபிலுள்ள ஜலந்தர் வரையிலும், குஜராத்தில் உள்ள ஷாஜிராவிலிருந்து உத்திரப்பிரதேசத்தில் உள்ள ஜெகதீஷ்பூர் வரை செல்லும் குழாய் போக்குவரத்துகள் இந்தியாவின் முக்கிய குழாய் போக்குவரத்து அமைப்புகளாகும்.

5. இந்திய முக்கிய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துகளைக் குறிப்பிடுக.

இந்தியாவின் முக்கிய நீரிவழிப் போக்குவரத்துகள்.

1. தேசிய நீர்வழிப் போக்குவரத்து எண்: 1

   இது ஹாலதியா மற்றும் அலகாபாத் இடையே உள்ளது.

2. தேசிய நீர்வழிப் போக்குவரத்து எண்: 2

   இது பிரம்மபுத்திரா ஆற்றில் துபிரி மற்றும் காடியாவிற்கு இடையே உள்ளது.

3. தேசிய நீர்வழிப் போக்குவரத்து எண்: 3

   இது கேரள மாநிலத்தின் கொல்லம் மற்றும் கோட்டபுரம் இடையே உள்ளது.

6. தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

தகவல்கள், எண்ணங்கள் மற்றும் கருத்துக்களின் பரிமாற்றத்தையே தகவல் தொடர்பு என்கிறோம். தகவல் தொடர்பு துறையில் தொழில்நுட்பம் வியக்கத்தக்க வகையில் உள்ளது. தகவல் தொடர்புகள் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

1. தனிமனித தகவல் தொடர்பு
2. பொதுத்தகவல் தொடர்பு

தனிமனித தகவல் தொடர்பு:

தனி நபர்களுக்கிடையேயான தகவல் பரிமாற்றம் தனிமனித தகவல் தொடர்பு என அழைக்கப்படுகிறது. இது அஞ்சல் சேவை, தந்தி, தொலைபேசி, கைப்பேசி, குருந்தகவல் பிரதிகள், இணையதளம் மற்றும் மின் அஞ்சல் போன்றவைகளை உள்ளடக்கியது.

பொதுத்தகவல் தொடர்பு:

பொது தகவல் தொடர்பு என்பது ஒரே நேரத்தில் லட்சக்கணக்கான மக்கள் தகவல்களை பெறுவதாகும். பொது தகவல் தொடர்பு அமைப்பானது அச்சு ஊடகங்கள் மற்றும் மின்னனு ஊடகங்கள் என்னும் இரண்டு முறைகளில் மக்களுக்கு தகவல்களை வழங்கியது.

7. பன்னாட்டு வணிகம் — வரலாறு.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம் பன்னாட்டு வணிகம் அல்லது அயல்நாட்டு வணிகம் என அழைக்கபடுகிறது.

8. சாலைப் போக்குவரத்தின் சாதக அம்சங்களை குறிப்பிடுக.

சாலை வழி குறுகிய மற்றும் நீண்ட தூரத்திற்கு பயணிகள் மற்றும் சரக்குகளை கொண்டு செல்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. சாலைப் போக்குவரத்து அமைப்பு மூலம் பண்ணைகளை, தொழிற்சாலைகள் மற்றும் சந்தைகள் ஆகியவற்றிக்கிடையில் எளிதில் தொடர்பை ஏற்படுத்துகிறது.

<u>அலகு — 6</u>

1. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக?

கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே கேரளாவும், வடக்கே ஆந்திரப்பிரதேசமும், வடமேற்கே கர்நாடகாவும், தெற்கே இந்தியப் பெருங்கடலும் தமிழ்நாட்டின் எல்லையாக அமைந்துள்ளன.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SUGARATHA INGRID 2019-20

2. கிழக்கு தொடர்ச்சி மலை மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளின் சில பகுதிகள் அல்லது முழு பகுதியும் அமைந்துள்ள தமிழ்நாட்டின் மாவட்டங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.

கிழக்கு தொடர்ச்சி மலைகள் — வேலூர், தருமபுரி, ஈரோடு, சேலம், நாமக்கல், விழுப்புரம்.
மேற்கு தொடர்ச்சி மலைகள் — கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி.

3. “தேரி” — என்றால் என்ன?

இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் கடற்கரையோரங்களில் உருவாக்கப்பட்ட மணல் குன்றுகள் “தேரி” என்று அழைக்கப்படுகிறது.

4. கடற்கரைச்சமவெளி எவ்வாறு உருவாகிறது?

கடற்கரை சமவெளி கிழக்கு நோக்கிப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் ஆறுகளால் உருவாக்கப்பட்டுள்ளது.

5. தமிழ்நாட்டின் முக்கிய தீவுகளைக் குறிப்பிடுக.

பாம்பன், முயல் தீவு, குருசடை, நல்லதண்ணிதீவு, புள்ளி வாசல், ஸ்ரீரங்கம், உப்புதண்ணித் தீவு, தீவுத்திடல், காட்டுப்பள்ளித் தீவு, குவிப்பில் தீவு மற்றும் விவேகானந்தர் நினைவுப் பாறை ஆகியன தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தீவுகள் ஆகும்.

6. தாமிரபரணி ஆற்றின் துணை ஆறுகளின் பெயர்களை எழுதுக.

காரையாறு, சேர்வாறு, மணி முத்தாறு, கடனாநதி, பச்சையாறு, சிற்றாறு மற்றும் இராமநதி ஆகியன இதன் முக்கிய துணை ஆறுகளாகும்.

7. பேரிடர் அபாய நேர்வு — வரையறு.

* ஐக்கிய நாடுகள் சபையின் அபாய நேர்வு குறைப்பு அமைப்பின் (UNDRR), கூற்றுப்படி அபாய குறைப்பு (Disaster Risk Reduction) என்பது பேரிடருக்கான காரணங்கள் முறையாக கண்டறிந்து பேரிடரின்போது அதன் தாக்கங்களைக் குறைப்பதாகும்.

* இது இடர் உண்டாகும் இடங்களைத் தவிர்த்தல், மக்களின் உயிர் மற்றும் உடைமைகளின் பாதிப்பினைக் குறைப்பது, நில மேலாண்மை, சூழ்நிலை மேலாண்மை, எதிர் விளைவுகள் குறித்தத் தயார்நிலை மற்றும் எச்சரிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியது.

8. புயலின்போது வானிலை மையம் மீனவர்களை எவ்வாறு எச்சரிக்கிறது?

மீனவர்கள் கூடுதலான மின் சாதனங்களுடன் (பேட்டரிகள்) ஒரு வானொலிப் பெட்டியை வைத்திருத்தல் வேண்டும். இக்காலங்களில் கடலுக்குச் செல்வதை தவிர்த்து, படகுகளைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

<u>அலகு — 7</u>

1. தமிழ்நாட்டின் வேளாண் பருவங்களின் காலங்களை எழுதுக.

| பருவம் | விதைக்கும் காலம் | அறுவடை காலம் | முக்கிய பயிர்கள் |
|---|---|---|---|
| சொர்ணவாரி (சித்திரைப் பட்டம்) | ஏப்ரல் — மே | ஆகஸ்டு - செப்டம்பர் | பருத்தி மற்றும் திணை வகைகள் |
| சம்பா (ஆடிப்பட்டம்) | ஜுலை — ஆகஸ்டு | ஜனவரி — பிப்ரவரி | நெல் மற்றும் கரும்பு |
| நவரை | நவம்பர் - டிசம்பர் | பிப்ரவரி — மார்ச் | பழங்கள், காய்கறிகள், வெள்ளரி, தர்பூசணி |

2. “கோயம்புத்தூர்” ஏன் தமிழ்நாட்டின் ‘மான்செஸடர்’ என அழைக்கப்படுகிறது.

இங்கிலாந்து நாட்டில் மான்செஸ்டர் என்ற நகரத்தில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகின்றன. அவ்வாறே தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் பகுதியில் பருத்தி நெசவாலைகள் செறிந்து காணப்படுகின்றன. அதனால் “கோயம்புத்தூர்” தமிழ்நாட்டின் ‘மான்செஸடர்’ என அழைக்கப்படுகிறது.

3. தமிழ்நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை எழுதுக.

மேட்டூர் அணை, பவாணி சாகர் அணை, அமராவதி அணை, கிருஷ்ணகிரி அணை, சாத்தனூர் அணை, முல்லைப் பெரியாறு அணை, வைகை அணை, மணிமுத்தாறு அணை, பாபநாசம் அணை.

4. பறக்கும் தொடருந்துத் திட்டம் (MRTS) என்றால் என்ன?

சென்னையில் புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பறக்கும் தொடருந்துத் திட்டம் ஆகியவை நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. தற்போது மெட்ரோ ரயில்வே அமைப்பு 2017ம் ஆண்டு முதல் பாதாள ரயில் இயக்கத்துடன் பறக்கும் தொடருந்துத் திட்டத்தை விரிவாக்கம் செய்துள்ளது.

5. தமிழ்நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களைப் பட்டியலிடுக.

விமான நிலையங்கள் - சென்னை, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி.
துறைமுகங்கள் — எண்ணூர், சென்னை, நாகப்பட்டினம், தூத்துக்குடி.

## IX. முக்கியமான பத்தி வினாக்கள்

அலகு-1

1. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.
2. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.

அலகு-2

1. இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்
2. இந்தியாவில் உள்ள உயிர்க்கோள பெட்டகங்கள் மற்றும் அவைகளின் அமைவிடங்களை எழுதுக.

அலகு-3

1. ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.
2. நெல் மற்றும் கோதுமை பயிரிடுவதற்கு ஏற்ற புவியியல் சூழல்கள் பற்றி விவரி.

அலகு-4

1. ஹூக்ளி ஆற்றுப் பகுதியில் சணல் தொழிலகங்கள் செறிந்து காணப்படுவதற்கான காரணிகள் விளக்குக.
2. இந்தியாவின் இரும்பு எஃகு தொழிலகங்கள் பற்றி ஒரு தொகுப்பு எழுதுக.

அலகு-5

1. நகரமயமாதல் என்றால் என்ன? அதன் தாக்கங்களை விளக்குக.
2. இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.

அலகு-6

1. தமிழ்நாட்டில் உள்ள மண் வகைகளின் பரவல் மற்றும் அவற்றின் பண்புகளை விளக்குக.
2. நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட இடங்களைக் குறிப்பிட்டு நிலச்சரிவின்போதும், முன்னரும், நிலச்சரிவுக்குப் பின்னரும் மேற்கொள்ள வேண்டியவற்றைக் குறிப்பிடுக.

அலகு-7

1. தமிழ்நாடின் கனிம பரவலை விவரி.
2. தமிழ்நாட்டில் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதிகள் மற்றும் அதற்கான காரணங்களை எழுதுக.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

## குடிமையியல்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க

அலகு 1

1. கீழ்க்காணும் வரிசையில் முகவுரை பற்றிய சரியான தொடர் எது? **இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு**
2. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது? **ஒருமுறை**
3. இந்திய அரசியலைமைப்பு, தனது குடிமக்களுக்கு எந்த வகை குடியுரிமையை வழங்குகிறது? **ஒற்றை குடியுரிமை**
4. ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்? **இயல்புரிமை**
5. மாறுபட்ட ஒற்றைக் கண்டுபிடி **சொத்துரிமை**
6. கீழ்க்காண்பவற்றில் ஒன்று அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை **பெற்றோர்களின் பூர்விக சொத்துக்கள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்**
7. இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால். அவர்கள் **இந்திய உச்ச நீதிமன்றம்** ஐ அணுகி தங்களது அடிப்படை உரிமைகளைப் பெறலாம்.
8. பின்வருவனவற்றுள் எந்த உரிமை Dr. B.R. அம்பேத்கர் அவர்களால் “இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா” என விவரிக்கப்பட்டது?
   **அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை**
9. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்தி வைக்கப்பட முடியும்?
   **தேசிய அவசரநிலையின் போது குடியரசுத் தலைவரின் ஆணையினால்**
10. நமது அடிப்படை கடமைகளை **ரஷ்யா அரசியலமைப்பு** இடமிருந்து பெற்றோம்,
11. வழிகாட்டும் நெறிமுறைகளை எம்முறையில் வகைப்படுத்தப் படுகின்றன? **சமதர்ம, காந்திய மற்றும் தாராளக் கொள்கைகள்**
12. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசர நிலையை அறிவிக்க முடியும்? **சட்டப்பிரிவு 360.**
13. இந்திய அரசியலமைப்பின் எந்த பிரிவில் அரசியலமைப்பு திருத்தும் நடைமுறை குறித்து தரப்பட்டுள்ளது? **சட்டப்பிரிவு 368.**
14. எந்தக் குழுக்கள் / கமிஷன்கள் மத்திய — மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?
   **1 & 2**

அலகு — 2

1. **குடியரசுத் தலைவர்** மத்திய அரசின் அரசியலமைப்புத் தலைவர் ஆவார்.
2. நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் உண்மையான நிர்வாக அதிகாரம் பெற்றவர் யார்? **பிரதமர்**
3. ஒரு மசோதாவை நீதிமசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர் **லோக் சபாவின் சபாநாயகர்**
4. அமைச்சர்கள் குழு ஒட்டுமொத்தமாக இதற்குப் பொறுப்புடையவர்களாவர் **மக்களவை**.
5. சட்டமியற்றும் நடவடிக்கைகளில் இந்திய நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் **லோக் சபாவின் சபாநாயகர்**
6. லோக்சபா தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது **25 வயது**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY

7. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர் / பெற்ற அமைப்பு நாடாளுமன்றம்
8. கீழ்க்காணும் எந்த விதியின் அடிப்படையில் குடியரசுத்தலைவர் நிதி நெருக்கடி நிலையினை அறிவிக்கிறார்? சட்டப்பிரிவு 360
9. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளை நியமிப்பவர் குடியரசுத்தலைவர்
10. பின்வரும் எந்த அடிப்படையில் மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்களை தீர்க்கும் அதிகாரத்தை உச்சநீதிமன்றம் பெற்றுள்ளது? தனக்கேயுரிய நீதிவரையறை
11. நீ இந்தியக் குடியரசுத் தலைவராக தேர்ந்தேடுக்கப்படும் பட்சத்தில் கீழ்க்கண்ட எந்த முடிவினை எடுப்பாய்? ஆ) இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட மசோதாவை மறுபரிசீலனைக்குட்படுத்த கேட்டுக் கொள்வது.

அலகு — 3

1. மாநில ஆளுநரை நியமிப்பவர் குடியரசுத்தலைவர்.
2. மாநில சபாநாயகர் ஒரு மேற்கண்ட எதுவுமில்லை.
3. கீழ்க்காணும் எந்த ஒன்று ஆளுநரின் அதிகாரமில்லை தூதரகம்.
4. ஆங்கிலோ — இந்தியன் வகுப்பினரிலிருந்து ஒரு பிரதிநிதியை சட்டமன்றத்திற்கு யார் நியமிக்கிறார்? ஆளுநர்.
5. ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை? உயர்நீதிமன்ற நீதிபதிகள்
6. மாநில முதலமைச்சரை நியமிப்பவர் ஆளுநர்
7. அமைச்சரவையின் தலைவர் முதலமைச்சர்
8. சட்ட மேலவை என்பது நிரந்தர அவை ஆகும்
9. மேலவை உறுப்பினராவதற்கு குறைந்த பட்ச வயது 30 வயது
10. மேலவை உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிறரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
11. கீழ்க்காணும் மாநிலங்களில் எந்த ஒன்று ஈரவை சட்டமன்றத்தைப் பெற்றிருக்கவில்லை. தமிழ்நாடு
12. இந்தியாவில் முதன்முதலில் உயர் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்ட இடங்கள் கல்கத்தா, பம்பாய், சென்னை
13. கீழ்க்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர்நீதிமன்றத்தைப் பெற்றுள்ளன? பஞ்சாப் மற்றும் ஹரியானா

அலகு — 4

1. இந்தியாவின் அயலுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் எந்த அமைச்சர் முக்கிய பங்கு வகிக்கிறார்? வெளிவிவகாரங்கள் அமைச்சர்
2. எந்த இரு நாடுகளுக்கிடையே பஞ்சசீல ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது? இந்தியா மற்றும் சீனா
3. இந்திய வெளியுறவுக் கொள்கையை ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு எது? சட்டப்பிரிவு 51
4. இன ஒதுக்கல் கொள்கை என்பது ஒரு இனப் பாகுபாட்டுக் கொள்கை
5. 1954இல் இந்தியா மற்றும் சீனாவால் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தம் இது தொடர்பானது ஐந்து கொள்கைகளுடன் இணைந்திருத்தல்
6. நமது வெளியுறவுக் கொள்கையுடன் தொடர்பு இல்லாதது எது? காலனித்துவம்
7. கீழ்க்கண்டவைகளில் அணிசேரா இயக்கத்தில் நிறுவன உறுப்பினர் அல்லாத நாடு எது? பாகிஸ்தான்
8. பொருந்தாத ஒன்றினைக் கண்டுபிடி ராஜதந்திரம்
9. அணிசேராமை என்பதன் பொருள் தன்னிச்சையாகப் பிரச்சினைகளுக்கு முடிவு எடுக்கும் சுதந்திரம்
10. ராணுவம் சாராத பிரச்சனைகள் என்பது இவை அனைத்தும்

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI KOLAN 2019-20

அலகு — 5

1. மக்மகான் எல்லைக்கோடு எந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள எல்லை ஆகும். **இந்தியா -சீனா**
2. இந்தியா பின்வருவனவற்றுள் எந்த அமைப்பில் உறுப்பினராக இல்லை? **ஏசியான் (ASEAN)**
3. ஓபெக் (OPEC) என்பது **எண்ணெய் ஏற்றுமதி நிறுவனங்களின்**
4. இந்தியா தனது மிக நீண்ட நில எல்லையை எந்த நாட்டோடு பகிர்ந்து கொள்கிறது? **வங்காளதேசம்**
5. பின்வருவனவற்றைப் பொருத்தி கீழே கொடுக்கப்பட்ட குறியீடுளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

| | | | |
|---|---|---|---|
| i) | சல்மா அணை | — | 1. வங்காளதேசம் |
| ii) | பராக்கா ஒப்பந்தம் | — | 2. நேபாளம் |
| iii) | சுக்கா நீர்மின் சக்தி திட்டம் | — | 3. ஆப்கானிஸ்தான் |
| iv) | சாரதா கூட்டு மின்சக்தி திட்டம் | — | 4. பூடான் |

(அ) **3,1,4,2**

6. எத்தனை நாடுகள் இந்தியாவுடன் தன் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன? **7**
7. எந்த இரண்டு தீவு நாடுகள் இந்தியாவின் அண்டை நாடுகள் ஆகும்? **இலங்கை மற்றும் மாலத்தீவு**
8. எந்த இந்திய மாநிலம் மூன்று நாடுகளால் சூழப்பட்டுள்ளது? **சிக்கிம்**
9. எத்தனை மாநிலங்கள் நேபாளத்துடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன? **ஐந்து**
10. புதிதாக சுதந்திரமடைந்த பாகிஸ்தானுக்கான எல்லைகளை வகுத்தவர் **சர் சிரில் ராட்க்ளிஃப்**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக

அலகு — 1

1. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை **அமெரிக்க ஐக்கிய நாடுகள்** தோன்றியது.
2. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக **சச்சிதானந்த சின்ஹா** தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு **நவம்பர் 26,**1949
4. **ஐந்து** பேராணைகள் சட்டப்பிரிவு 32-ல் குறிப்பிடப்படுகின்றன.
5. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் **51**A கீழ் வழங்கப்பட்டுள்ளன.

அலகு — 2

1. **நிதி** மசோதா குடியரசுத்தலைவரின் ஒப்புதல் இன்றி நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த முடியாது.
2. **பிரதம அமைச்சர்** நாட்டின் உண்மையான தலைவராகவும், நாட்டின் முக்கியச் செய்தி தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.
3. **துணைக்குடியரசுத் தலைவர்** அலுவல வழியில் மாநிலங்களவையின் தலைவர் ஆவார்.
4. பொதுவாக, குடியரசுத்தலைவர் **ஆங்கிலோ இந்தியா** இனத்திலிருந்து இரண்டு உறுப்பினர்களை மக்களவைக்கு நியமிக்கிறார்.
5. நாடாளுமன்ற இரு அவைகளிலும் உரையாற்றவும், கூட்டத்தொடரில் பங்கு கொள்ளவும் உரிமை பெற்றவர் **அட்டார்னி ஜெனரல்**
6. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது **65**
7. **உச்ச நீதிமன்றம்** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ஆகும்.
8. தற்சமயம், உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி உட்பட நீதிபதிகளின் எண்ணிக்கை **28**

அலகு — 3

1. ஆளுநர் தனது இராஜினாமா கடிதத்தை குடியரசுத்தலைவர் இடம் கொடுக்கிறார்.
2. சட்டமன்ற உறுப்பினர்கள் (MLAs) மக்களால் தேர்ந்தேடுக்கப்படுகின்றனர்.
3. பாத்திமா பீவி தமிழகத்தின் முதல் பெண் ஆளுநர் ஆவார்.
4. ஆளுநர் மாநிலங்களில் உள்ள பல்கலைக் கழகங்களின் வேந்தராக செயல்படுகிறார்
5. ஏழாவது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 1956 இரண்டு அல்லது மேற்பட்ட மாநிலங்களுக்கு பொதுவான உயர் நீதிமன்றத்தை அமைக்க நாடாளுமன்றத்திற்கு அங்கீகாரம் அளித்தது.
6. அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் குடியரசுத்தலைவர் ஆல் மட்டுமே பணிநீக்கம் செய்ய முடியும்.

அலகு — 4

1. இந்தியா தனது முதல் அணு சோதனையை நடத்திய இடம் பொக்ரான்
2. தற்போது நமது வெளியுறவுக் கொள்கையானது உள்நாட்டு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான உள் முதலீட்டை அதிகரித்தல், வணிகம், தொழில்நுட்பம் ஆகியவற்றை உருவாக்குவதற்கான வழிமுறையாகச் செயல்படுகிறது.
3. இராஜ தந்திரம் என்பது ஓர் அரசின் வெளியுறவுக் கொள்கையை செயல்படுத்துவதற்கான கருவி ஆகும்
4. இரு வல்லரசுகளின் பனிப்போரினை எதிர்கொள்ள இந்தியா பின்பற்றிய கொள்கை அணி சேரா கொள்கை
5. நமது மரபு மற்றும் தேசிய நெறிமுறைகள் படை வலிமை குறைப்பு நடைமுறைப்படுத்துவதாகும்.

அலகு — 5

1. பூட்டான் இமயமலையில் உள்ள ஒரு சிறிய அரசு ஆகும்,
2. இந்தியா. தென்கிழக்காசியாவிற்குள் செல்வதற்கான ஒரு நுழைவு வாயிலாக மியான்மார் இருக்கிறது.
3. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான இடைப்படு நாடு நேபாளம் ஆகும்.
4. இந்தியாவிற்குச் சொந்தமான டீன் பிகா என்ற பகுதி மேற்கு வங்காளம்-வங்காளதேச எல்லையில் அமைந்துள்ளது.
5. இடிமின்னல் நிலம் என்று அறியப்படும் நாடு பூடான் ஆகும்.
6. பாக் ஜலசந்தி ஆல் இந்தியாவும் இலங்கையும் பிரிக்கப்படுகின்றன.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

## III. பொருத்துக

அலகு — 1

| | | | |
|---|---|---|---|
| 1. | குடியுரிமைச் சட்டம் | - | 1955 |
| 2. | முகவுரை | - | ஜவஹர்லால் நேரு |
| 3. | சிறிய அரசியலமைப்பு | - | 42 வது அரசியலமைப்புச்சட்டத்திருத்தம் |
| 4. | செம்மொழி | - | தமிழ் |
| 5. | தேசிய அவசரநிலை | - | 1962 |

அலகு — 2

| | | | |
|---|---|---|---|
| 1. | சட்டப்பிரிவு 53 | - | குடியரசுத்தலைவரின் நிர்வாக அதிகாரங்கள் |
| 2. | சட்டப்பிரிவு 63 | - | துணைக்குடியரசுத் தலைவரின் அலுவலகம் |
| 3. | சட்டப்பிரிவு 356 | - | மாநில நெருக்கடிநிலை |
| 4. | சட்டப்பிரிவு 76 | - | இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் அலுவலகம் |
| 5. | சட்டப்பிரிவு 352 | - | உள்நாட்டு நெருக்கடிநிலை |

அலகு — 3

| | | |
|---|---|---|
| 1. ஆளுநர் | - | மாநில அரசின் தலைவர் |
| 2. முதலமைச்சர் | - | அரசாங்கத்தின் தலைவர் |
| 3. அமைச்சரவை | - | சட்டமன்றத்திற்குப் பொறுப்பானவர்கள் |
| 4. மேலவை உறுப்பினர் | - | மானியங்களுக்கு வாக்களிக்க முடியாது |
| 5. ஆயுதப் படையினர் | - | தீர்ப்பாயங்கள் |

அலகு-4

| | | |
|---|---|---|
| 1. இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ளது | - | மாலத்தீவு |
| 2. தென்கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பின் பாலம் | - | மியான்மர் |
| 3. பஞ்சசீலம் | - | 1954 |
| 4. ஆப்பிரிக்க - ஆசிய மாநாடு | - | 1955 |
| 5. உலக அமைதி | - | வெளியுறவுக் கொள்கை |

அலகு — 5

| | | |
|---|---|---|
| 1. பிராண்டிக்ஸ் | - | விசாகப்பட்டினத்தின் ஆடை நகரம் |
| 2. தகவல் தொடர்பு இணக்கத்தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் (COMCASA) | - | அமெரிக்க நாடுகள் |
| 3. ஷிங்கன்சென் | - | ஜப்பான் |
| 4. பிரிக்ஸ் (BRICS) | - | ஷாங்காய் |
| 5. ஓபெக் (OPEC) | - | வியன்னா |

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

## IV. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்

அலகு -2

1. i) மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 250
   ii) இலக்கியம், அறிவியல், கலை, சமூக சேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு மற்றும் அனுபவம் பெற்ற 12 நபர்களை மாநிலங்களவைக்கு குடியரசுத் தலைவர் நியமிக்கிறார்.
   iii) மாநிலங்களவை உறுப்பினராவதற்கு 30 வயதுக்குக் குறைவாக இருத்தல் கூடாது.
   iv) மாநிலங்களவை உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
   <u>ஈ) i, ii & iii சரியானவை</u>

2. i) உச்சநீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 62
   ii) மத்திய அரசின மூன்றாவது அங்கம் நீதித்துறை ஆகும்.
   iii) அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்களுக்கு உட்பட்டது.
   iv) உச்சநீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.
   <u>அ) ii & iv சரியானவை</u>

3. கூற்று : (A) மாநிலங்களவை ஒரு நிரந்தர அவையாகும், இதனைக் கலைக்க முடியாது.
   காரணம் : (R) மாநிலங்களவையில் 1/3 பங்கு உறுப்பினர்கள் ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் ஓய்வு பெறுவர். அக்காலியிடங்களுக்கு புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
   இ) <u>கூற்று, காரணம் இரண்டும் சரி மற்றும் காரணம் கூற்றுக்கு சரியான விளக்கமாகும்.</u>

அலகு — 3

1. i) இந்தியாவில் சில மாநிலங்கள் மட்டும் சட்ட மேலவையைப் பெற்றுள்ளன.
   ii) மேலவையின் சில உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.
   iii) மேலவையின் சில உறுப்பினர்கள் மக்களால் நேரடியாகப் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

   **ஆ) i & ii சரி**

2. கூற்று : (A) மாநில சட்டமன்றத்திற்கு சட்ட அதிகார வரம்பு உண்டு
   காரணம் : (R) குடியரசுத் தலைவரின் ஒப்புதலுடன் மட்டுமே மாநிலப் பட்டியலிலுள்ள சில மசோதாக்களைச் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்யலாம்.

   **இ) A மற்றும் R சரி மேலும் R A வுக்கான சரியான விளக்கமாகும்.**

அலகு — 4

1. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்
   i) பஞ்சசீலம்
   ii) பொக்ரானில் அணுவெடிப்புச் சோதனை
   iii) 20 ஆண்டுகள் ஒப்பந்தம்
   iv) முதல் அணுவெடிப்புச் சோதனை

   <u>அ) i) iii) iv) , ii)</u>

2. பின்வருவனவற்றில் அணிசேரா இயக்கத்துடன் தொடர்பு இல்லாதது எது?
   i) அணிசேரா இயக்கம் என்ற சொல் வி.கிருஷ்ணமேனன் என்பவரால் உருவாக்கப்பட்டது.
   ii) இதன் நோக்கம் இராணுவக் கூட்டமைப்பில் சேர்ந்து வெளிவிவகாரங்களில் தேசிய சுதந்திரத்தைப் பராமரித்தல் ஆகும்
   iii) தற்போது இது 120 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.
   iv) இது பொருளாதார இயக்கமாக மாற்றமடைந்துள்ளது.

   <u>இ) ii மட்டும்</u>

3. **கீழ்க்காணும் ஒவ்வொரு கூற்றுக்கும் எதிராக சரியா / தவறா என எழுதுக**
   அ) பனிப்போரின் போது சர்வதேச விவகாரங்களில் இந்தியா மூன்றாவது அணியை உருவாக்க முயற்சித்தது. ( **சரி** )
   அ) இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை நிறைவேற்றும் பொறுப்பு இந்திய உள்துறை அமைச்சகத்தைச் சார்ந்தது (**தவறு** )
   இ) இந்தியாவின் அணுசக்தி சோதனை பூமிக்கடியிலான அணு சோதனை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டது. ( **சரி** )

4. கூற்று: 1971இல் இந்தோ — சோவியத் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா சோவியத் யூனியனுடன் இணைந்தது.
   காரணம்: இது 1962இன் பேரழிவுகரமான சீனப் போருக்குப் பின் தொடங்கியது.

   **<u>இ) கூற்று சரி காரணம் தவறு</u>**

5. கூற்று: இந்தியா உலகின் பெரும்பான்மையான நாடுகளுடன் தூதரக உறவுகளைக் கொண்டுள்ளது.

   காரணம்: உலகின் இரண்டாவது அதிக அளவிலான மக்கள் தொகையைக் கொண்ட நாடு இந்தியா ஆகும்

   **<u>ஆ) கூற்று சரி மற்றும் காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல</u>**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

6. இந்தியா சுதந்திரத்திற்குப் பின்னர் ராணுவ முகாம்களில் இணைவதைத் தவிர்ப்பது அவசியமாக இருந்தது. ஏனெனில், இந்தியா இதனை / இவைகளை மீட்க வேண்டி இருந்தது.

ஈ) மேற்கூரிய அனைத்தும்

அலகு — 5

1. இந்தியா மற்றும் மியான்மரின் கலடன் போக்குவரத்துத் திட்டம் பின்வரும் போக்குவரத்து முறைகளில் எந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது?

1. சாலை 2. ரயில் வழி 3. கப்பல் 4. உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

ஆ) 1, 3 மற்றும் 4

2. கூற்று: இந்தியாவும் பிரான்சும் சர்வதேச சூரியசக்திக் கூட்டணியைத் (International Solar Alliance) தொடங்கியுள்ளன.
காரணம்: இது கடகரேகை மற்றும் மகரரேகை ஆகியவற்றுக்கு இடையேயான நாடுகளைச் சூரிய ஆற்றலுக்கான ஒத்துழைப்பில் ஒன்றிணைப்பதற்காகும்.

அ) கூற்று சரி காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமாகும்

3. பின்வரும் கூற்றுகளில் எது / எவை உண்மையானவை?

1. இந்திய பண்பாட்டு உறவுகளுக்கான குழு, டாக்கா பல்கலைக்கழகத்தில் தாகூர் இருக்கை ஏற்படுத்த வழிவகை செய்துள்ளது.
2. மேற்கத்திய நாடுகளுக்கான இந்தியாவின் நுழைவு வாயில் மியான்மர் ஆகும்.
3. நேபாளம், பூடான் ஆகியவை நிலப்பகுதிகளால் சூழப்பட்ட நாடுகளாகும்
4. இந்தியாவின் நாளந்தா பல்கலைக்கழகத்திட்டத்தின் ஒரு பங்குதாரர் நாடு இலங்கையாகும்.

இ) 1, 3 மற்றும் 4

4. கூற்று: இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் ஒபெக் (OPEC) ஆர்வம் காட்டியுள்ளது.
காரணம்: தேவையான எண்ணெய் வளங்கள் இல்லாததால் இந்தியா விவசாயம் மற்றும் தொழில்துறை உற்பத்தியில் கவனம் செலுத்துகிறது.

இ) கூற்று காரணம் இரண்டும் சரி

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
S.DASARATHA NOKKI 2019-20

## V. சுருக்கமான விடையளி

### 1. இந்திய அரசியலமைப்பு

1. அரசியலமைப்பு என்றால் என்ன?
ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும்.

2. குடியுரிமை என்பதன் பொருள் தருக.

சிட்டிசன் என்னும் சொல் சிவிஸ் என்னும் லத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் ஒரு நகர அரசில் வசிப்பவர் என்பதாகும்.

3. எத்தனை வகையான அடிப்படை உரிமைகள் இந்திய அரசியலமைப்பால் பட்டியலிடப்படுகின்றன?
ஆறு வகையான அடிப்படை உரிமைகள்

i. சமத்துவ உரிமை
ii. சுதந்திர உரிமை
iii. சுரண்டலுக்கு எதிரான உரிமை
iv. சமயச் சார்பு உரிமை
v. கல்வி கலாச்சார உரிமை
vi. அரசியலமைப்புக்கு உட்பட்டு தீர்வு காணும் உரிமை

4. நீதிப் பேராணை என்றால் என்ன?
   * நீதிமன்ற முத்திரையுடன் நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணையே நீதிப்பேராணை எனப்படும்.
   * இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.

5. இந்தியாவின் செம்மொழிகள் எவை?
   தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஒடியா, சமஸ்கிருதம்.

6. தேசிய அவசர நிலை என்றால் என்ன?

   போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதம் ஏந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் குடியரசுத்தலைவர் சட்டப்பிரிவு 352-ன் கீழ் அவசர நிலையை அறிவிக்கலாம்.

7. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.
   i. சட்டமன்ற உறவுகள்
   ii. நிர்வாக உறவுகள்
   iii. நிதி உறவுகள்

## 2. மத்திய அரசு

1. இந்தியக் குடியரசுத் தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?
   * குடியரசுத் தலைவர் ஒற்றை மாற்று வாக்குமூலம் விகிதாச்சார பிரதிநிதித்துவத்தின்படி வாக்காளர் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
   * வாக்காளர் குழுமம் என்பது மாநிலங்களவை மற்றும் மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்கள், தேசியத்தலைநகர் டெல்லி மற்றும் புதுச்சேரியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கியதாகும்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIVARATHANOKKI 2019-20

2. மத்திய அரசின் பல்வேறுபட்ட அமைச்சர்களின் வகைகள் யாவை?

   மத்திய அமைச்சர்கள் மூன்று தரநிலைகளில் வகைபடுத்தப்பட்டுள்ளனர்
   i. கேபினட் (அல்லது) ஆட்சிக்குழு அமைச்சர்கள்
   ii. இராசாங்க அமைச்சர்கள்
   iii. இணை அமைச்சர்கள்

3. உச்ச நீதிமன்ற நீதிபதியாவதற்கான தகுதிகள் யாவை?
   * அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும் அல்லது
     அவர் ஐந்தாண்டுகள் உயர்நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்திருத்தல் வேண்டும்.
   * அவர் பத்து ஆண்டுகள் உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.
   * குடியரசுத் தலைவர் பார்வையில் சிறப்புமிக்க சட்ட வல்லுநராய் இருத்தல் வேண்டும்.

4. மக்களவையின் சபாநாயகர் பற்றி குறிப்பு வரைக.
   * மக்களவையை தலைமையேற்று நடத்துபவர் சபாநாயகர். அவர் மக்களவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

* நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு தலைமை வகிப்பார்.
* அவர் ஒரு மசோதாவை நிதி மசோதாவா அல்லது சாதாரண மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றுள்ளார்.

5. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞரின் சிறப்பு அதிகாரங்கள் இரண்டினைப் பட்டியலிடுக.
   * இவர் குடியரசுத் தலைவரால் குறிப்பிடப்பட்ட சட்ட விவகாரங்கள் மீது இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவார்.
   * நாடாளுமன்ற இரு அவைகளின் செயல்முறைகளிலும் பேசுவதற்கும் பங்கு கொள்ளுவதற்கும் இவருக்கு உரிமை உண்டு.

## 3. மாநில அரசு

1. மாநில ஆளுநரின் முக்கியத்துவம் என்ன?
   * மாநில நிர்வாகத்தின் அரசியலமைப்புத் தலைவர் ஆளுநர் ஆவார்.
   * மாநில ஆளுநரின் பெயரில் மாநில நிர்வாகம் செயல்படுகிறது.
2. ஆளுநராக நியமிக்கப்படுவதற்கான தகுதிகள் என்ன?
   * அவர் இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
   * 35 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
   * அவர் இலாபம் தரும் எந்த தொழிலிலும் ஈடுபடக்கூடாது.
3. உயர்நீதிமன்றத்தின் தனக்கே உரிய நீதி வரையறை அதிகாரங்கள் யாவை?
   * முக்கியத்துவம் வாய்ந்த வழக்குகள், உயில், திருமணம் சார்ந்த வழக்குகள் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் ஆகியவற்றை மட்டும் நேரடியாக விசாரிக்கும் அதிகாரங்களைப் பெற்றுள்ளன.
   * சென்னை, பம்பாய், கல்கத்தா நீதிமன்றங்கள் தங்களுக்கான நீதி வரையறை அதிகாரங்களுடன் மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரங்களையும் பெற்றுள்ளன.
4. உயர்நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்கள் பற்றி நீ புரிந்துகொண்டதென்ன?
   * உயர்நீதி மன்றங்கள் தங்களிடம் வரும் மேல் முறையீட்டு வழக்குகளையும் கீழ் நீதி மன்றங்களிலிருந்து வரும் மேல் முறையீட்டு வழக்குகளையும் (உரிமையியல், குற்றவியல்) விசாரிக்கின்றன.
   * நாட்டின் ராணுவ தீர்ப்பாயங்களின் கீழ்வரும் ஆயுதம் சார்ந்த வழக்குகளை விசாரிக்கும் இவைகளுக்கு அதிகாரம் இல்லை.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SUGARATHANOKKI 2019-20

அலகு - 4

1. வெளியுறவுக் கொள்கை என்றால் என்ன?
   * வெளியுறவுக் கொள்ளை என்பது ஒரு நாடு வெளியுறவு விவகாரங்களின் மூலம் தேசியநலனைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகளைப் பேணவும் வடிவமைக்கப்பட்ட கொள்கை ஆகும்.

2. இந்தியாவின் அணுசக்தி கொள்கையை விவரி?
   * முதலில் பயன்படுத்துவதில்லை
   * குறைந்தபட்ச நம்பகமான தற்காப்புத்திறன். அணு ஆயுதத்தை போர்த் தாக்குதலுக்குப் பயன்படுத்துவது இல்லை என்பதோடு அணு ஆயுதமற்ற எந்த ஒரு நாட்டிற்கு எதிராகவும் பயன்படுத்துவதில்லை என இந்தியா தீர்மானித்துள்ளது.

3. இந்தியா வெளியுறவு கொள்கையின் நேருவின் பங்களிப்பை எடுத்து கூறுக.
   * நாடு சுதந்திரம் அடைந்தது முதல் 1950 மற்றும் 1960 களில் இந்தியாவின் வெளியுறவு கொள்கைகள், நாட்டின் முதல் பிரதமரான ஜவர்ஹர்லால் நேரு வழிகாட்டுதலின்படி முக்கிய குறிக்கோள்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

4. வேறுபடுத்துக: உள்நாட்டு கொள்கை மற்றும் வெளிநாட்டு கொள்கை.

உள்நாட்டு கொள்கை:

* உள்நாட்டு கொள்கை என்பது ஒரு நாடு தனது நாட்டிற்குள்ளான விவகாரங்கள் தொடர்பாகக் கொண்டுள்ள கொள்கையாகும்.
* இது உள் விவகாரங்கள், நமூக நலம், சுகாதாரம், கல்வி ஆகியவற்றை மையமாகக் கொண்ட சட்டங்களை உள்ளடக்கியது.

வெளிநாட்டு கொள்கை:

* வெளியுறவு கொள்கை என்பது ஒரு நாடு பிற நாடுகளுடன் கொண்டுள்ள விவகாரங்கள் தொடர்பானதாகும்.
* இது வணிகம், அரசு தந்திரம், பாதுகாப்பு சூழல் ஆகியவைகளை கொண்டது வெளியுறவு கொள்கை.

5. பஞ்சசீல கொள்கைகளில் எவையேனும் நான்கினை பட்டியலிடுக.

* பரஸ்பர ஆக்கிரமிப்பின்மை.
* பரஸ்பர உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருத்தல்.
* பரஸ்பர நலனுக்காக சமத்துவம் மற்றும் ஒத்துழைத்தல்.
* அமைதியாக சேர்ந்திருத்தல்.

6. இந்தியா அணிசேராக் கொள்கையை தேர்ந்தெடுத்ததற்கான காரணம் என்ன?

* நாட்டின் முதல் பிரதமரான நேரு, அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா ஆகிய வல்லரசு நாடுகள் ஆப்பிரிக்கா, ஆசியாவில் புதிதாகத் தோன்றிய நாடுகளில் தங்களது செல்வாக்கை செலுத்துவதை எதிர்த்தார்.
* எனவே பனிப்போர் நிலவும் இரு துருவ உலகமான அமெரிக்கா மற்றும் சோவியத் ரஷ்யா வல்லரசுகளுடன் சேராமல் அணிசேரா இயக்கம் என்ற வழியைத் தேர்ந்தெடுத்ததோடு சர்வதேச விவகாரங்களில் மூன்றாவது அணியை உருவாக்க முயன்றார்.

7. இந்தியாவின் பாதுகாப்பு குறித்த அக்கறை எந்தெந்த வழிகளிலெல்லாம் பிரதிபலிக்கிறது?

* உலக பாதுகாப்பு குறித்த அக்கறை, இந்தியாவின் ராணுவ நவீனமயமாக்கல், கடல்சார் பாதுகாப்பு மற்றும் அணுசக்திக் கொள்கைகளில் பிரதிபலிக்கின்றன.

8. சார்க் உறுப்பு நாடுகளைளப் பட்டியலலிடுக.

சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகள்:

* ஆப்கானிஸ்தான்
* இந்தியா
* இலங்கை
* வங்காள தேசம்
* நேபாளம்
* பூட்டான்
* மாலத்தீவு
* பாகிஸ்தான்

9. அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்கள் யாவர்?

* இந்தியாவின் ஜவஹர்லால் நேரு, யூகோஸ்லாவியாவின் டிட்டோ, எகிப்தின் நாசர், இந்தோனேசியாவின் சுகர்னோ மற்றும் கானாவின் குவாமே நிக்ரூமா ஆகியோர் அணிசேரா இயக்கத்தின் நிறுவனத் தலைவர்களாவர்.

10. வெளியுறவுக் கொள்கையின் முக்கிய அம்சங்களை குறிப்பிடுக.

* உடன்படிக்கைகள், நிர்வாக ஒப்பந்தங்கள், தூதுவர்களை நியமித்தல், வெளிநாட்டு உதவி, சர்வதேச வணிகம் மற்றும் ஆயுத படைகள் ஆகியவைகள் ஆகும்.

அலகு - 5

1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களை எழுதுக.

* பாகிஸ்தான்
* ஆப்கானிஸ்தான்
* சீனா

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAIKOKAL 2019-20

* நேபாளம்
* பூடான்
* வங்காள தேசம்
* மியான்மார்
* இலங்கை
* மாலத்தீவு

2. போர்த்திறம் சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் (SPA) பற்றிய சிறுகுறிப்பு வரைக.

இந்தியா, ஆப்கானிஸ்தான் உறவு போர்திறன் சார்ந்த பங்களிப்பு ஒப்பந்தம் (Strategic Partnership Agreement) மூலம் வலிமை பெற்றுள்ளது. இந்த ஒப்பந்தம் ஆப்கானிஸ்தானின் உள்கட்டமைப்பை மறுசீரமைக்கவும், நிறுவனங்கள், வேளாண்மை, நீர், கல்வி, சுகாதாரம் மற்றும் வரியில்லாமல் இந்திய சந்தையை எளிதாக அடைதல் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை நல்கவும் வழிகோலுகிறது.

3. பிரிக்ஸ் (BRICS) உறுப்பு நாடுகளின் பெயர்களை எளழுதுக.
* பிரேசில்
* ரஷ்யா
* இந்தியா
* சீனா
* தென் ஆப்பிரிக்கா

4. கலடன் பன்முக மாதிரி போக்குவரத்து திட்டம் பற்றி நீவிர் அறிவது என்ன?

* இந்தியா தென் கிழக்காசியாவிற்குள் செல்வதற்கான நுழைவு வாயிலாக மியான்மார் இருக்கிறது. கொல்கத்தாவை மியான்மாரில் உள்ள சிட்வேயுடன் இணைப்பதற்காக சாலை — நதி — துறைமுகம் — சரக்குப் போக்குவரத்து திட்டமான கலடன் பன்முக மாதிரி போக்குவரத்து திட்டத்தினை இந்தியா உருவாக்கி வருகிறது.

5. சபஹார் ஒப்பந்தத்தின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

* சபஹார் ஒப்பந்தம் எனப்படும் முக்கூட்டு ஒப்பந்தம் இந்தியா, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே ஏற்படுத்துப்பட்டுள்ளது. இதன்படி சபஹார் துறைமுகத்தைப் பயன்படுத்தி மூன்று நாடுகளிலும் போக்குவரத்து வழிதடங்கள் ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.
* இத்துறைமுகம் பாகிஸ்தானைத் தவிர்த்து ஆப்கானிஸ்தான் மற்றும் ஆசியா ஆகிய சந்தைகளை இந்தியா அணுக ஒரு நுழைவு வாயிலாக இருக்கும்.

6. இந்தியாவின் உறுப்பினராக உள்ள ஏதேனும் ஐந்து உலகளாவிய குழுக்களை பட்டியலிடுக.
* ஐ.பி.எஸ்.எ (IBSA)
* பி.சி.ஐ.எம் (BCIM)
* மீகாங்-கங்கா ஒத்துழைப்பு எம்.ஜி.சி (MGC)
* வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் ஜி.சி.சி (GCC)
* ஷாங்காய் ஒத்துழைப்பு நிறுவனம் (SCO)

7. ஜப்பான் இந்தியா உற்பத்தி நிறுவனத்தின் (JIM) பங்கு என்ன?

உற்பத்தி துறையில் உற்பத்தி மற்றும் திறன் இந்தியா (Make in India, Skill India) திட்டங்களில் பங்களிக்கவும் ஜப்பானிய உற்பத்தித் திறன்களை வழங்கி இந்தியாவின் உற்பத்தித் தொழில்முறை தரத்தை மேம்படுத்தவும் 30,000 இந்திய மக்களுக்குப் பயிற்சி வழங்க ஜப்பான் —இந்தியா உற்பத்தி நிறுவனம் (Japan - India Institute of Manufacturing) அறிவித்துள்ளது.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SISARATHAI NOKKI 2019-20

## முக்கியமான விரிவான வினாக்கள்

அலகு-1

1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
2. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.

அலகு-2

1. இந்தியக் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை விவரி.
2. இந்திய பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?

அலகு-3

1. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
2. ஆளுநரின் பல்வேறு அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.

அலகு-4

1. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
2. வெளி உறவுக் கொள்கையை நிர்ணயிக்கும் அடிப்படை காரணிகள் பற்றி விவாதிக்கவும்.

அலகு-5

1. பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகள் அமைப்பின் (OPEC) திட்டம் குறித்தும் அவ்வமைப்பு எவ்வாறு பிறநாடுகளுக்கு உதவி செய்கின்றது என்பது குறித்தும் குறிப்பிடுக.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

## பொருளியல்

## I. சரியான விடையைத் தேர்வு செய்க

அலகு — 1

1. GNP யின் சன்ம் GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்
2. நாட்டு வருமானம் அளவிடுவது பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
3. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது வேளாண்மை
4. மதிப்பு கூட்டு முறை முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும் போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம்.
5. GDPயில் எந்த துறை மூலம் அதிகமான வேலைவாய்ப்பு ஏற்படுகிறது? பணிகள் துறை
6. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018-2019ல் 92.26 இலட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.
7. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா 2 வது அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.
8. இந்தியாவில் பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் 65 ஆண்டுகள் ஆகும்.
9. கீழ்க்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை
10. இந்திய பொருளாதாரம் என்பது வளர்ந்து வரும் பொருளாதாரம்

அலகு — 2

1. உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்? **தலைமை இயக்குநர்**
2. WTO வில் தற்போதுள்ள உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 164
3. இந்தியாவில் காலனியாதிக்க வருகை போர்ச்சுகீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
4. வர்த்தக நோக்கத்திற்காக முதலில் இந்தியாவுக்கு வந்தவர்கள் போர்ச்சுக்கீசியர்
5. போர்ச்சுக்கீசியர்கள் இந்தியாவில் எப்போது குடியேறினார்கள்? 1498
6. காட் — இன் முதல் சுற்று நடைபெற்ற இடம் ஜெனீவா
7. இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?1994
8. 1632இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மான்" வழங்கியவர் யார்?கோல்கொண்டா சுல்தான்
9. வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை (FIP) அறிவித்த ஆண்டு **சூலை — ஆகஸ்ட் 1991**
10. இந்திய அரசாங்கம் 1991இல் **புதிய பொருளாதார கொள்கை** ஐ அறிமுகப்படுத்தியது

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI KKR 2019-20

அலகு — 3

1. உணவு கிடைப்பது என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பது, உள்நாட்டு உற்பத்தியில் இருப்பில் மாற்றங்கள் மற்றும் இறக்குமதி பற்றிய ஒரு செயல்பாடாகும்.
2. தாங்கியிருப்பு என்பது உணவுப் பங்கு தானியங்கள் அதாவது கோதுமை மற்றும் அரிசியை FCI மூலம் அரசாங்கம் கொள்முதல் செய்கிறது
3. எது சரியானது?

   i) HYV அதிக விளைச்சல் தரும் வகைகள்
   ii) MSP குறைந்த பட்ச ஆதரவு விலை
   iii) PDS — பொது விநியோக முறை
   iv) FCI — இந்திய உணவுக் கழகம்

   ஈ) மேற்கூறிய அனைத்தும் சரி

4. நீட்டிக்கப்பட்ட உதவி பொதுச் சட்டம் 480ஐ கொண்டு வந்த நாடு அமெரிக்கா .
5. பசுமை புரட்சி இந்தியாவில் தோன்றியதால் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.
6. உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு
7. ஊட்டச்சத்து என்பது உடல் நலம் மற்றும் வளர்ச்சிக்குத் தேவையான உணவை வழங்கும் அல்லது பெறும் செயல்முறையாகும்.

8. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் 1980 இல் தொடங்கப்பட்டது.
9. **ஆரோக்கியம்**நிலை என்பது மக்கள் தொகை மற்றும் மனிதவளர்ச்சியின் ஒட்டு மொத்த நல்வாழ்வின் குறியீடுகளில் ஒன்று
10. தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டங்கள் **108 ஆம்புலன்ஸ்** சேவையை இலவசமதக அறிமுகப்படுத்தியுள்ளது.

அலகு - 4

1. இந்தியாவிலுள்ள மூன்று நிலைகளான அரசுகள் மைய,மாநில மற்றும் உள்ளாட்சி
2. இந்தியாவில் உள்ள வரிகள் இரண்டும் (அ) மற்றும் (ஆ)
3. வளர்ச்சிக் கொள்கையில் அரசாங்கத்தின் பங்கு எது?
   (ஈ) மேற்கூறிய அனைத்தும்
4. இந்தியாவில் தனி நபர்களின் மேல் விதிக்கப்படுகின்ற பொதுவான மற்றும் மிக முக்கியமான வரி? வருமான வரி
5. ஒரு நாடு ஒரே மாதிரியான வரி என்பதை எந்த வரி உறுதிப்படுத்துகிறது?
   பண்டங்கள் மற்றும் பணிகள் வரி
6. இந்தியாவில் வருமான வரிச்சட்டம் முதல் முதலில் 1860 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
7. சொத்து உரிமையிலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்கு சொத்து வரி விதிக்கப்படுகிறது
8. கருப்பு பணத்திற்கான காரணங்கள் என கண்டறியப்பட்ட அடையாளம் எவை?
   (ஈ) **மேற்கூறிய அனைத்தும்**
9. வரி ஏய்ப்பு என்பது சட்டவிரோதமானது ------------- மூலம் வரி ஏய்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.
   (ஈ) **மேற்கூறிய அனைத்தும்**
10. கட்டணங்கள் என்பது
   (ஈ) (அ) மற்றும் (ஆ)

அலகு - 5

1. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது **சென்னை**
2. குழாய்கள் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுவது **கோயம்புத்தூர்**
3. தூத்துக்குடி **தமிழ்நாட்டின் நுழைவாயில்** என அழைக்கப்படுகிறது.
4. **தொழில்** - என்பது ஒரு நாட்டின் வளர்ச்சியில் முக்கிய அம்சமாகும்
5. திருப்பூர் **பின்னலாடை தயாரித்தல்** தொழிலுக்குப் பெயர் பெற்றது
6. ஆம்பூர் மற்றும் வாணியம்பாடியுடன் சென்னை தோல் பொருள் ஏற்றுமதிக்கான மையம் உள்ளது.
7. Information Technology (IT) என்ற சொல்லுக்கு தகவல் தொழில் நுட்பம் **தகவல் தொழில்நுட்பம்**
8. ஓசூர் இல் ஒரு வெற்றிகரமான தொழில்துறை தொகுப்பு முற்றிலும் தமிழ்நாட்டால் உருவாக்கப்பட்டது.
9. SIPCOT உருவாக்கப்பட்ட ஆண்டு 1971
10. கீழ்க்கண்டவற்றுள் தமிழ்நாடு தொழில்துறை வளர்ச்சி முகமை எவை?
   (ஈ) **All of these**

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக

அலகு — 1

1. இந்தியாவில் மிகப்பெரிய துறை பணிகள் துறையாகும்.
2. GDP நாட்டின் பொருளாதார நலத்தின் ஒரு குறியீடாகும்.
3. இரண்டாம் துறையை வேறுவிதமான தொழில் துறை என அழைக்கலாம்.
4. இந்தியா பொருளாதாரத்தின் வளர்ச்சி இயந்திரம் பணிகள் துறையாகும்
5. இந்தியா உலகத்தில் 6வது மிகப்பெரிய பொருளாதார நாடு ஆகும்

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SUGARNTHAI NOKKI 2019-20

6. இந்தியா 5வது மிக வேகமாக வளரும் நாடாகும்
7. GDP யின் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற நவீன மயமாக்கத்துடன் கூடிய விரைவான தொழில் மயமாக்கல் என்று தொழில்துறை கொள்கை கூறுகிறது.

அலகு — 2

1. டச்சுக்காரர்கள் பாண்டிச்சேரியை 1693 இல் கைப்பற்றினார்
2. ஒரு நல்ல பொருளாதாரம் மூலதன சந்தையின் விரைவான வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது.
3. கிழக்கிந்திய கம்பெனி சென்னையில் பலமான தொழிற்சாலைகள் கட்டியமைத்ததை செயின்ட் ஜார்ஜ் கோட்டை என அழைக்கப்படுகிறது.
4. உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தம் ஜனவரி 1, 1995 இருந்து அமுலுக்கு வந்தது.
5. பேராசிரியர் தியோடர் லெவிட் ஆல் உலகமயமாக்கல் என்ற பதம் கண்டுபிடிக்கப்பட்டது.
6. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் புதுச்சேரியில் இரண்டாவது தொழிற்சாலையை நிறுவியது.

அலகு — 3

1. அமெரிக்காவிலிருந்து ஃபோர்டு அறக்கட்டளை அமைப்பு இந்தியாவில் HYVஐ அறிமுகப்படுத்தியது.
2. எடைகுறைவு ஊட்டச்சத்து குறைபாட்டின் முக்கியமான குறியீடாகும்.
3. 2013 ஆம் ஆண்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது.
4. பொதுவான மக்களுக்கு பொறுப்பான விலையில் தரமான பொருட்களை வழங்குவதில் நுகர்வோர் கூட்டுறவு முக்கிய பங்கு வகிக்கிறது.
5. வாங்கும் சக்தி என்பது ஒரு அலகு பணம் வாங்கக் கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளின் அளவின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் நாணயத்தின் மதிப்பாகும்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 4

1. வரி மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்காக அரசாங்கத்தால் விதிக்கப்படுகிறது.
2. வரி என்ற வார்த்தை **வரிவிதிப்பு** சொல்லிலிருந்து பெறப்பட்டது
3. நேர்முக வரியில் வரியின் சுமையை மற்றவர்களுக்கு மாற்ற முடியாது.
4. நிறுவன பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும் நிறுவனங்களுக்கு வரி விதிக்கப்படுகிறது
5. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி 1 ஜீலை 2017 முதல் நடைமுறைக்கு வந்தது.
6. வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் கருப்பு பணம் என்று அழைக்கப்படுகிறது.

அலகு — 5

1. **தொழில் நடவடிக்கைகள்** மனிதனின் நவீனப் பொருளாதார நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமானதாகும்
2. தொழில்துறை தொகுப்புகள் என்பது பொதுவான சந்தை மற்றும் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்களின் தொகுப்புகளாகும்
3. நூற்றுக்கணக்கான தோல் மற்றும் தோல் பதனிடும் வசதிகள் தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டத்தைச் சுற்றி அமைந்துள்ளன.
4. சிவகாசி "லிட்டில் ஜப்பான்" என்று பற்றுடன் அழைக்கப்படுகிறது
5. சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கைகள் ஏப்ரல் 2000ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
6. தொழில் முனைவோர் என்பவர் புத்தாக்க சிந்தனைகள் மற்றும் வணிக செயல்முறைகளின் புத்தாக்கம்புனைவர் ஆவார்.

## III. பொருத்துக

அலகு - 1

| | | |
|---|---|---|
| 1. மின்சாரம் / எரிவாயு மற்றும் நீர் | - | தொழில்துறை |
| 2. விலைக் கொள்கை | - | வேளாண்மை |
| 3. GST | - | பண்ட மற்றும் பணிகள் மீதான வரி |
| 4. தனிநபர் வருமானம் | - | நாட்டு வருமானம் / மக்கள் தொகை |
| 5. C+I+G+(X - M) | - | மொத்த நாட்டு உற்பத்தி |

அலகு — 2

| | | |
|---|---|---|
| 1. இந்தியாவில் பன்னாட்டு நிறுவனம் | - | இன்ஃபோசிஸ் |
| 2. பன்னாட்டு நிதி நிறுவனம் (MNC) | – | உற்பத்தி செலவு குறைத்தல் |
| 3. சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு (GATT) | - | 1947 |
| 4. 8வது உருகுவே சுற்று | - | 1986 |
| 5. உலக வர்த்தக அமைப்பு (WTO) | - | அயல்நாட்டு வாணிபத்தை செயல்படுத்தல் |

அலகு — 3

| | | |
|---|---|---|
| 1. நுகர்வோர் கூட்டுறவு | - | தரமான பொருட்களை வழங்குதல் |
| 2. பொது விநியோக முறை | - | மானிய விகிதங்கள் |
| 3. UNDP | – | ஐக்கிய நாடுகள் சபை வளர்ச்சித் திட்டம் |
| 4. தேசிய உணவுப் பாதுகாப்பு சட்டம் | - | 2013 |
| 5. கேரளா | - | குறைந்த ஏழ்மை உள்ள பகுதி |

அலகு — 4

| | | |
|---|---|---|
| 1. வருமான வரி | - | நேர்முக வரி |
| 2. ஆயத்தீவை | - | மறைமுக வரி |
| 3. VAT | - | மதிப்பு கூட்டு வரி |
| 4. GST | - | ஜீலை 1, 2017 |
| 5. கருப்புப் பணம் | - | கடத்துதல் |

அலகு — 5

| | | |
|---|---|---|
| 1. தொழில் முனைவோர் | - | அமைப்பாளர் |
| 2. MEPZ | - | ஏற்றுமதி செயலாக்க மண்டலம் |
| 3. இந்திய ஒழுங்குமுறை தொழிற்சாலை | - | அரவங்காடு |
| 4. TNPL | - | கரூர் |
| 5. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் | - | கோயம்புத்தூர். |

## IV. சரியான கூற்றை தேர்வு செய்யவும்

அலகு - 1

1. பின்வரும் காரணங்களினால் இந்தியாவின் சேமிப்பு விகிதம் குறைவாக உள்ளது
   - i) குறைந்த தனிநபர் வருமானம்
   - ii) மோசமான செயல்திறன் மற்றும் பொதுத்துறையின் குறைவான பங்களிப்பு
   - iii) வீடுகள் துறையின் மோசமான பங்களிப்பு
   - iv) கிராமப்புறத்துறையின் சேமிப்பு திறனை முழுமையாக பயன்படுத்தாதது

   ஈ) i, iii, மற்றும் iv சரியானவை

DIRECTORATE OF SCHOOL EDUCATION PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு - 2

i) கிழக்கிந்திய கம்பெனி, குறிப்பாக கிழக்கு இந்திய நறுமணப் பொருட்கள் வர்த்தகத்தில்

ஈடுபட்டு. பின்னர் பருத்தி. பட்டு, இண்டிகோவையும் வர்த்தகத்தில் இணைத்துக் கொண்டது.

ii) டச்சு கிழக்கு இந்தியா நிறுவன வணிகர்கள் தங்கள் நிறுவனத்தை முதன் முதலில் கள்ளிக்கோட்டையில் நிறுவினார்கள்.

**(அ)** i சரியானது

அலகு — 3

1. கூற்று: வாங்கும் சக்தி அதிகரித்தால், விலை குறைகிறது மற்றும் இது நேர்மறையானது
காரணம்: பொருட்களின் உற்பத்தி குறைந்து, விலை அதிகரிப்பதால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

**இ) <u>கூற்று சரியானது ஆனால் காரணம் சரியான விளக்கமல்ல</u>**

அலகு — 4

1. GST பற்றி கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

i) GST ஒரு முனைவரி

ii) இது மத்திய மற்றும் மாநில அரசாங்கத்தால் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு விதிக்கப்டும் அனைத்து நேரடி வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது

iii) இது ஜீலை 1, 2017 முதல் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது.

iv) இது இந்தியாவில் வரி கட்டமைப்பை ஒன்றிணைக்கும்

**இ) <u>i , iii மற்றும் iv சரியானது</u>**

2. சரியில்லா கூற்றை தேர்ந்தெடுக்கவும்

i ) இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்களின் பற்றாக்குறை கருப்பு பணத்திற்கு மூலக் காரணமாகும்

ii) கருப்பு பணம் தோன்றுவதற்கு மிக முக்கிய பங்கு வகிப்பது தொழிற்துறையாகும்.

iii) கருப்பு பணம் உருவாவதற்கு கடத்தல் ஒரு முக்கிய மூலமாகும்

iv) வரி விகிதம் குறைவாக இருக்கும் போது அதிக கருப்பு பணம் தோன்றுகிறது.

**<u>ஆ) iv மட்டும் சரி</u>**

அலகு — 5

1. i ) தொழில் முனைவு பொது மக்களின் செயலற்ற சேமிப்பை அணிதிரட்டுவதன் மூலம் மூலதன
உருவாக்கத்தை ஊக்குவிக்கிறது.

ii) அவர்கள் கைவினைஞர், தொழில்நுட்ப தகுதி வாய்ந்த நபர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கு பெரிய அளவிலான வேலைவாய்ப்பை வழங்கவில்லை.

iii) மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் தலா வருமானத்தையும் அதிகரிக்க தொழில் முனைவோர் நாட்டிற்கு உதவுகிறார்கள்.

iv) தொழில் முனைவோர் நாட்டின் ஏற்றுமதி வர்த்தகத்தை ஊக்குவிப்பதில்லை.

**ஈ) <u>i மற்றும் iii சரி</u>**

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SAGARITHAI NOKKI 2019-20

## V. சுருக்கமான விடையளி

அலகு — 1

1. நாட்டு வருமானம் — வரையறு

   நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

2. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பொருளென்ன?

   ஓர் ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்திக் காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

3. GDP யின் முக்கியத்துவத்தை எழுதுக.

   * பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு பற்றி அறிந்துகொள்ளப் பயன்படுகிறது.
   * வாங்கு திறன் மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
   * பொருளாதார திட்டமிட வழிகாட்டியாகப் பயன்படுகிறது.
   * உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு பயன்படுகிறது.

4. தனிநபர் வருமானம் என்றால் என்ன?

   * நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் தனிநபர் வருமானம் பெறப்படுகின்றது.
   * தனிநபர் வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.

5. மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு.

   மதிப்புக் கூட்டு முறையில் ஒவ்வொரு இடைநிலைப் பண்டத்தின் மதிப்பைக் கூட்டினால் இறுதிப் பண்டத்தின் மதிப்பை அளவிடலாம்.
   எடுத்துக்காட்டாக - டீதூள் + பால் + சர்க்கரை = தேனீர்

6. GDP யின் பங்களிப்பு உள்ள துறைகளை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
   i. முதன்மைத் துறை: விவசாயம், காடுகள், மீன்பிடித்தல், சுரங்கங்கள்
   ii. இரண்டாம் துறை: இரும்பு மற்றும் எஃகுத் தொழில், ஜவுளித் தொழில்
   மூன்றாம் துறை: வர்த்தகம், போக்குவரத்து, தகவல் தொடர்பு

7. இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் காரணிகள் யாவை?

   * இந்தியாவில் 35 வயதிற்கு உட்பட்ட உழைக்கும் வயதில் வேகமாக வளரும் மக்கள்தொகை.
   * இந்தியா கடுமையான சட்டமுறையையும் அதிகமான ஆங்கிலமொழி பேசுபவர்களையும் கொண்டுள்ளது.
   * இந்தியாவில் கூலிச் செலவு குறைவாக உள்ளது.

8. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையின் பெயர்களை எழுதுக.

   i. வேளாண் கொள்கை.
   ii. தொழில் துறைக் கொள்கை
   iii. புதிய பொருளாதாரக் கொள்கை
   iv. வேலை வாய்ப்புக் கொள்கை
   v. கூலிக் கொள்கை

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

9. சிறு குறிப்பு வரைக. (i) GNH, (ii) HDI

GNH:

* GNH என்பது மொத்த தேசிய மகிழ்ச்சி (Gross National Happiness) ஆகும். அது ஒரு நாட்டு மக்களின் கூட்டு மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வை அளவிடப் பயன்படும் குறியீட்டை உள்ளடக்கியது.
* இது பூட்டான் நாட்டு அரசாங்கத்தை வழிநடத்தும் ஒரு தத்துவம் ஆகும்.

HDI:

* HDI என்பது மனித மேம்பாட்டுக் குறியீடு (Human Development Index) ஆகும்.
* இது பிறப்பின்போது வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கைத் தரம், GDP யின் மடக்கை செயல்பாடு என கணக்கிடப்பட்டு வாங்கும் சக்தி (PPP) சமநிலைக்கு சரிசெய்யப்படுகிறது.

அலகு — 2

1. உலகமயமாக்கல் என்றால் என்ன?

* உலகமயமாக்கல் என்பது பண்டங்கள், மற்றும் பணிகள், தொழில்நுட்பம், மூலதனம், உழைப்பு அல்லது மனித மூலதனம் ஆகியவற்றின் தடையில்லா ஓட்டத்தில் எந்தத் தடையும் ஏற்படாமல் உலகின் பல்வேறு பொருளாதாரங்களை ஒன்றிணைப்பதற்கான செயல்முறையாகும்.

2. உலகமயமாக்கலின் வகைகளை எழுதுக.

   1. தொன்மையான உலகமயமாக்கல்
   2. இடைப்பட்ட உலகமயமாக்கல்
   3. நவீன உலகமயமாக்கல்

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIS SARANAIMANOKKI 2019-20

3. பன்னாட்டு நிறுவனங்கள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

* தன்னுடைய சொந்த நாட்டில் மட்டுமின்றி ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெளிநாடுகளில் பண்டங்களையும் அல்லது பணிகளையும் உற்பத்தி செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் பெரு நிறுவனங்களை பன்னாட்டு நிறுவனங்கள் என்கிறோம்.
* எ-கா. பஜாஜ், டி.வி.எஸ், பாரத ஸ்டேட் வங்கி.

4. உலக மயமாக்கலை மேற்கொள்ளும் சீர்திருத்தம் யாவை?

* சில தொழிற்சாலைகளைத் தவிர தொழில் உரிமம் பெறுவதை நீக்கியது.
* பொதுத்துறை நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.
* இந்திய பொருட்களின் ஏற்றுமதி பரிமாற்றத்தில் நிலையான பணத்தின் மாற்று வீதத்தை சரி செய்தது.

5. நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?

நியாயமான வர்த்தகம் என்பது விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு சிறந்த விலை, சிறந்த வேலைவாய்ப்பை அளித்தல் மற்றும் வர்த்தகம் தொடர்பான நியாயமான விதிமுறைகளை அளிப்பதாகும்.

6. நியாயமான வர்த்தக நடைமுறைகளில் ஏதாவது ஐந்து கொள்கைகளை எழுதுக.

   1. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு
   2. நியாயமான வர்த்தக / நடைமுறைகள் மற்றும் நியாயமான விலையில் கொடுப்பது.

3. குழந்தைத் தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

4. திறனை வளர்த்தல் மற்றும் நியாயமான அமைப்பினை மேம்படுத்துதல்.

சுற்றுச் சூழலுக்கு மதிப்பளித்தல்.

7. உலக வர்த்தக அமைப்பின் முக்கிய நோக்கம் என்ன?

* அயல்நாட்டு வாணிபத்திற்கான விதிகளை அமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்.
* வர்த்தக தகராறுகளைக் கையாளுதல்
* முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல்.

8. TRIPS மற்றும் TRIMS - சிறு குறிப்பு வரைக.

TRIPS: அறிவுசார் சொத்துரிமை தொடர்பான வர்த்தக உரிமைகள் TRIPS இன் கீழ் பண்டங்கள் அல்லது செயல்முறைகள் அனைத்து துறைகளின் தொழில்நுட்பங்களில் எந்த ஒரு கண்டுபிடிப்புக் காப்புரிமை வழங்கப்படுகின்றது.

TRIMS: வர்த்தக தொடர்புடைய முதலீட்டு நடவடிக்கைகள், உள்நாட்டு தொழில்களின் வளர்ச்சிக்காக தேவையான வசதிகளை வழங்குவதற்கு அந்நாட்டில் செய்யப்படும் வெளிநாட்டு முதலீட்டிற்கு சில நிபந்தனைகள் அல்லது கட்டுப்பாடுகளை அரசு விதிக்கும் என்பதையே TRIMS குறிக்கின்றது.

9. உலகமயமாக்களின் நேர்மறையான தாக்கத்தை எழுதுக.

* வாழ்க்கைத் தரம் அதிகரித்துள்ளது.
* உலகமயமாக்கல் வேகமாக வர்த்தகத்தை அதிகரித்து அதனால் மக்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.
* உலகமயமாக்கல் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

அலகு — 3

1. FAO வின்படி உணவுப் பாதுகாப்பை வரையறு.

எல்லா மக்களும் எல்லா நேரங்களிலும் போதுமான பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக பொருளாதார அணுகுமுறையைக் கொண்டிருக்கும்போது, அவர்களின் உணவுத் தேவைகளையும் சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவுப் பாதுகாப்பு இருக்கிறது. (FAO, 2019)

2. உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பான அடிப்படைத் கூறுகள் யாவை?

உணவு மற்றும் உட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகள்.

i. உணவு கிடைத்தல்
ii. உணவுக்கான அணுகல்
iii. உணவினை உறிஞ்சுதல்.

3. கப்பலுக்கு வாயில் நிகழ்வை விளக்கு

* பணக்கார நாடுகளிலிருந்து உணவு தானியங்களை சலுகை விலையில் இந்தியா கோரவேண்டியிருந்தது.
* 1960 களின் முற்பகுதியில் அமெரிக்கா தனது பொதுச் சட்டம் 480 (பி.எல். 380) திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு உதவி வழங்கியது. இந்த நிலைமை பிரபலமாக கப்பலுக்கு வாயில் (Ship to Mouth) என்று அழைக்கப்பட்டது.

4. பசுமைப் புரட்சியில் FCI—யின் பங்கு என்ன?

* அறுவடை செய்யப்பட்ட தானியங்களை இந்திய உணவுக்கழகம் (FCI) மூலம் அரசு கொள்முதல் செய்கிறது.

* இந்திய உணவுக்கழகம் (FCI) மிகப்பெரிய சேமிப்புக்கிடங்கினை அமைத்து அறுவடை காலத்தில் உணவு தானியங்களைப் பெற்று இருப்பில் வைத்து அதனை ஆண்டு முழுவதும் மக்களுக்கு வழங்குகின்றது.

5. பசுமைப் புரட்சியின் விளைவுகள் என்ன?
   * பசுமைப் புரட்சி நாட்டின் உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழிவகுத்தது.
   * உயர்ரக விதைகளான HYV அரிசி மற்றும் கோதுமை உணவு தானியங்கள் பயிரிடப்பட்ட பகுதியில் உற்பத்தியை அதிகரிக்க முடிந்தது.
   * 65 ஆண்டுகளில் உணவு நிலைமை நிலையான முன்னேற்றம் கண்டது.

6. உலகலாவிய பொது வழங்கள் முறைக்கும் இலக்கு பொது வழங்கல் முறைக்கும் உள்ள வேறுபாட்டை எழுதுக.

   உலகளாவிய முறை

   * தமிழ்நாடு உலகளாவிய பொது வழங்கல் முறைனை ஏற்றுக்கொண்டது.
   * உலகளாவிய பொதுவழங்கல் முறையின் கீழ் குடும்ப வழங்கல் அட்டை பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் பொதுவழங்கல் முறைமூலம் வழங்கப்படுகிறது.

   இலக்கு வழங்கல் முறை

   * இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் இலக்கு பொது வழங்கல் முறை செயல்பாட்டில் இருந்தது.
   * இலக்கு பொதுவழங்கல் முறையில் பயனாளிகள் சில அளவுகோலின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு உரிமைகள் வழங்கப்படுகிறது.

7. வாங்கும் திறன் பற்றி சிறு குறிப்பு வரைக.
   * வாங்கும் திறன் என்பது ஒரு அலகு பணம் வாங்கக் கூடிய பொருள்கள் அல்லது சேவைகளின் அளவின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் நாணயத்தின் மதிப்பு.
   * விலை ஏறும்போது வாங்கும்திறன் குறைகிறது.

8. புதிய வேளாண் கொள்கைக்கான் முக்கிய காரணங்கள் யாவை?
   * கரிம அல்லது பதப்படுத்தப்பட்ட விவசாயப் பொருட்களுக்கு ஏற்றுமதி வரி, ஏற்றுமதி தடை மற்றும் ஒதுக்கீடு கட்டுப்பாடு போன்ற எந்த ஒரு ஏற்றுமதி கட்டுப்பாடுகளின் கீழும் இருக்காது என்ற உறுதிமொழியே புதிய வேளாண் கொள்கைக்கான முக்கிய காரணமாகும்.
   * விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தி திறனை உயர்த்துவதற்கும் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் விவசாயிகளின் வருமானநிலை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் புதிய வேளாண் கொள்கை அரசாங்கத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

9. வறுமையின் பல பரிமான தன்மை குறித்து சிறு குறிப்பு எழுதுக.

   உடல்நலம், கல்வி, வாழ்க்கைத்தரம், வருமானம், அதிகாரம் அளித்தல், பணியின் தரம் மற்றும் வன்முறையினால் அச்சுறுத்தல் போன்ற ஏழைமக்களின் அனுபவத்தை இழக்கும் பல காரணிகளால் வறுமை உருவாகிறது.

10. தமிழ்நாட்டில் உள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயர்களை எழுது.
    * புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் — ஊட்டச்சத்து உணவுத்திட்டம்.
    * ஆரம்பக்கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவுத் திட்டம்.
    * பொது ICDS திட்டங்கள்.
    * பிரதம மந்திரி கிராமோதய யோஜனா திட்டம்
    * தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.
    * மதிய உணவுத்திட்டம்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION PUDUCHERRY
SIGARATHAHOKKI 2019-20

அலகு — 4

1. வரி — வரையறு.

பேராசிரியர் செலிக்மேன் கருத்துப்படி, ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் செலுத்துகையாகும். அரசிடமிருந்து எந்தவித நேரடி நன்மையும் எதிர்பார்க்காமல் கட்டாயமாக செலுத்தவேண்டியதே வரி என வரையறை கூறுகிறார்.

2. அரசுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்?
   * வரிவிதிப்பு என்பது அரசுக்கு நிதியளிப்பதற்காக வருவாயை உயர்த்துவதையோ அல்லது தேவையை பாதிக்கும் பொருட்டு விலைகளை மாற்றுவதையோ நோக்கமாகக் கொண்டுள்ளது.
   * வரிவிதிப்பதன் மூலம் பெற்ற நிதியிலிருந்தே போக்குவரத்து, துப்புரவு, கல்வி, உடல்நலம் போன்ற உட்கட்டமைப்பு செலவுகளும் இராணுவம் அறிவியல் ஆராய்ச்சி போன்ற செலவுகளும் செய்யப்படுகின்றன.

3. வரிமுறையின் வரிக் கொள்கைகளை எழுதுக.

ஆடம் ஸ்மித் முதல் பல பொருளாதார வல்லுனர்கள் வரிவிதிப்பு கொள்கைகளைக் கொடுத்துள்ளனர். அவையாவன.
சமத்துவ விதி, உறுதி விதி, சிக்கன மற்றும் வசதி விதி, உற்பத்தித்திறன் மற்றும் நெகிழ்ச்சி விதி.

4. வரிகளின் வகைகள் யாவை? எடுத்துக்காட்டுகள் தருக.
   * வரிகள் இரண்டு வகைப்படும்.
   * நேர்முக வரி: வருமான வரி, சொத்துவரி மற்றும் நிறுவன வரி
   * மறைமுக வரி: முத்திரைத்தாள் வரி, பொழுதுபோக்கு வரி, சுங்கத்தீர்வை வி, பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST)

5. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி சிறு குறிப்பு வரைக.
   * இவ்வரி இந்தியப் பாராளுமன்றத்தில் மார்ச் 29, 2017-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. மேலும் ஜூலை 1, 2017 முதல் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.
   * இதன் குறிக்கோள் ஒருநாடு — ஒரு அங்காடி - ஒரு வரி என்பதாகும்.

6. வளர்வீத வரி என்றால் என்ன?
   * வளர்வீத வரிவிதிப்பு முறையில் வரியின் அடிப்படைத் தளம் அதிகரிக்கும்போது வரிவீக்கமும் அதிகரிக்கிறது.
   * இம்முறையில் வருமானம் அதிகரிக்கும்போது வரிவிகிதமும் அதிகரிக்கிறது.

7. கருப்புப் பணம் என்பதன் பொருள் என்ன?
   * கருப்புப் பணம் என்பது கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப்பணமாகும்.
   * வரிநில்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட கணக்கிடப்படாத பணம் கருப்பு பணம் என்று அழைக்கப்படுகிறது.

8. வரி ஏய்ப்பு என்றால் என்ன?
   * தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவை சட்ட விரோதமாக வரிசெலுத்தாமல் இருப்பது வரி ஏய்ப்பு எனப்படும்.
   * வரி ஏய்ப்பு என்பது பொதுவாக முறைசாரா பொருளாதாரத்துடன் தொடர்புடைய ஒரு செயலாகும்.

9. வரிஏய்ப்பின் விளைவுகளைக் கூறுக.
   * வரி ஏய்ப்பு மத்திய அரசின் வரி திரட்டல் முயற்சிகளை தடுக்கிறது.
   * வரிஏய்ப்பு அரசாங்கத்தின் அறிவிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளில் தலையிடுகிறது.
   * வரி ஏய்ப்பு வரி அமைப்பின் சமத்துவப் பண்புகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARAM THODU KKI 2019-20

10. வரிக்கும் கட்டணத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

* வரி என்பது கட்டாய செலுத்துகை ஆகும்.
  எடுத்துக்காட்டு: வருமான வரி, சொத்துவரி
* கட்டணம் (Fee) என்பது தன்னார்வக் கட்டணமாகும்.
  எடுத்துக்காட்டு: முத்திரை வரி ஓட்டுநர் உரிமைக் கட்டணம், அரசாங்க பதிவுக் கட்டணம்.

அலகு — 5

1. வளரும் பொருளாதாரம் ஏன விவசாயத்திலிருந்து பன்முகப்படுத்தப்பட வேண்டும்.

* முதலாவது நிலத்தின் இறுதிநிலை உற்பத்தித்திறன் குறைந்து கொண்டு வருவதால் வேளாண் பணிகளுக்கு தொழிலாளர்களை ஈர்த்துக்கொள்வதில் ஆட்களை ஏற்பதில் சில வரையறைகள் பின்பற்ற நேரிடுகிறது.
* இரண்டாவது நுகர்வோர் வேளாண்மை உற்பத்தி பொருள்களுக்கு தங்கள் வருமானத்தில் ஒரு சிறு பகுதியை மட்டுமே செலவிடுகிறார்கள்.
* மூன்றாவது நுகர்வோர்கள் வாங்கும் விலையைவிட விவசாயிகள் பெறும் விலை குறைவாக உள்ளது.

2. தொழில் துறை தொகுப்பு என்றால் என்ன?

* தொழில் தொகுப்புகள் என்பது பொதுவான சந்தைகள், தொழில் நுட்பங்கள் மற்றும் திறன்களுக்கான தேவைகளைப் பகிர்ந்துகொள்ள வரையறுக்கப்பட்ட புவியியல் பகுதியில் உள்ள நிறுவனங்களின் தொகுப்புகளாகும்.
* தொகுப்புகளின் முக்கிய அம்சம் நிறுவனங்களுக்கிடையேயான ஒரு பரஸ்பர தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதாகும்.

3. நாட்டின் மிகவும் தொழில் மயமான மாநிங்களில் ஒன்றாக தமிழ்நாடு மாற உதவிய கொள்கை வகுப்பின் 3 பகுதிகளைக் குறிப்பிடுக.
   கல்வி, உட்கட்டமைப்பு மற்றும் தொழில்துறை ஊக்குவிப்பு

4. தமிழ்நாட்டில் உள்ள மூன்று தொழில்துறை வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனங்களையும் அவற்றின் பங்கினையும் குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| SIPCOT | : | இது 1971 இல் தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டு தொழில் தோட்டங்களை அமைத்தது. |
| TANSIDCO | : | இது 1970 இல் மாநிலத்தில் சிறுதொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்ட ஒரு அரசு நிறுவனமாகும். |
| TIDCO | : | தொழில் தோட்டங்களை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் உதவும் மற்றொரு அரசு நிறுவனமாகும். |

5. தொழில் முனைவோர் என்பவர் யாவர்?

* தொழில் முனைவோர் என்பவர் புதிய சிந்தனைகளுக்கும் வணிக செயல் முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் ஆவார்.
* இவரிடம் சிறந்த நிர்வாகத்திறன்களும், வலிமையான குழுவை அமைக்கும் திறமைகளும் மற்றும் தலைமைக்கான பண்புகளும் இருக்கும்.

6. தொழில் முனைவு என்றால் என்ன?

* தொழில் முனைவோர் தங்கள் தொழிலைப் பெருக்குவதற்கான செயல்முறைகளே தொழில் முனைவு எனப்படும்.
* இவை புதிய ஒன்றை உருவாக்குவதற்கும் மேலும் பெரிதுபடுத்துவதற்குமான திறன் ஆகும்.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

## VI. முக்கிய விரிவான வினாக்கள்

அலகு-1

1. நாட்டு வருமானத்தைக் கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துகளை விவரி.
2. GDP-ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.

அலகு-2

1. உலகமயமாக்கல் வரலாற்றை சுருக்கமாக எழுதுக.
2. உலக வர்த்தக அமைப்பு பற்றி எழுதுக.

அலகு-3

1. வாங்கும் திறனை பாதிக்கும் காரணிகள் யாவை? அவற்றை விளக்குக.
2. இந்தியாவின் வேளாண் கொள்கையின் சில முக்கிய நோக்கங்களை சுருக்கமாக எழுதுக.

அலகு-4

1. பொருளாதார முன்னேற்ற கொள்கைகளில் அரசின் பங்கினை விவரி.
2. சில் நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.

அலகு-5

1. தமிழ்நாட்டில் நெசவுத் தொழில் தொகுப்பு பற்றி எழுதுக.
2. தொழில் முனைவோரின் பங்கினைப் பற்றி விளக்குக.

DIRECTORATE OF SCHOOL EDUCATION, PUDUCHERRY
SIGARATHAI NOKKI 2019-20

## காலக்கோடு – I

**1910 முதல் 1935 ஆம் ஆண்டு வரையிலான எவையேனும் ஐந்து உலக வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிக்கவும்**



## காலக்கோடு – 2

**1935 முதல் 1960 ஆம் ஆண்டு வரையிலான எவையேனும் ஐந்து உலக வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிக்கவும்**



## காலக்கோடு – 3

**1910 முதல் 1930 ஆம் ஆண்டு வரையிலான எவையேனும் ஐந்து இந்திய வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிக்கவும்**



## காலக்கோடு – 4

**1930 முதல் 1950 ஆம் ஆண்டு வரையிலான எவையேனும் ஐந்து இந்திய வரலாற்று நிகழ்வுகளை காலக்கோட்டில் குறிக்கவும்**



**உலகம்-WORLD** **உலக வரைபடம் - வரலாறு**




*Printed by :* Government Central Press, Pondicherry


இந்தியா-INDIA
1857 இல் பெருங்கலகம் நடைபெற்ற மையங்கள்
அம்பாலா
மீரட்
டெல்லி
பரெய்லி
லக்னோ
ஆக்ரா
குவாலியர்
கான்பூர்
அலகாபாத்
பனாரஸ்
ஜான்சி
பாரக்பூர்
Printed by : Government Central Press, Pondicherry


இந்தியா-INDIA
இந்திய தேசிய இயக்கம்
(1900 - 1947)
லாகூர்
ஜாலியன் வாலா பாக்
(அமிர்த சரஸ்)
சௌரி சௌரா
சம்பரான்
பாட்னா
அகமதாபாத்
(சபர்மதி ஆசிரமம்)
கேதா
கல்கத்தா
பர்தோலி
நாக்பூர்
தண்டி
பம்பாய்
பூனா
சதாரா
மதராஸ்
வேதாரண்யம்
Printed by : Government Central Press, Pondicherry


தமிழ்நாடு-TAMIL NADU
ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக
தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால
கிளர்ச்சிகளின் மையங்கள்
வேலூர்
ஆற்காடு
மதராஸ்
சேலம்
கோயம்பத்தூர்
திருச்சிராப்பள்ளி
புதுக்கோட்டை
மதுரை
சிவகங்கை
காளையார் கோவில்
இராமநாதபுரம்
எட்டையபுரம்
கயத்தாறு
நாகலாபுரம்
பாஞ்சாலங் குறிச்சி
திருநெல்வேலி
கலக்காடு
Printed by : Government Central Press, Pondicherry


இந்தியா-INDIA
6 சிகரங்கள்
5 பீடபூமிகள்
கே.2
எவரெஸ்ட்
கஞ்சன் ஜங்கா
மலை அபு
மால்வா பீடபூமி
புந்தேல்கண்ட் பீடபூமி
பாகல்கண்ட் பீடபூமி
சோட்டா நாக்பூர் பீடபூமி
தக்காணப் பீடபூமி
மகேந்திரகிரி
தொட்டபெட்டா
Printed by : Government Central Press, Pondicherry


இந்தியா-INDIA
5 மலைகள் (வடக்கில்)
4 மலைகள் (தெற்கில்)
2 மழைப் பொழிவு இடங்கள்
காரகோரம்
கைலாஷ் மலைத் தொடர்
இமாலயம்
சிவாலிக் மலைத்தொடர்
குறைவான மழை (100 செ.மீ. குறைவு)
ஆரவல்லி ம.தொ.
அதிகமான மழை [200 செ.மீ. மேல்]
விந்திய ம.தொ.
சாத்புரா ம.தொ.
கிழக்குத் தொடர்ச்சி மலைகள்
மேற்குத் தொடர்ச்சி மலைகள்
Printed by : Government Central Press, Pondicherry


இந்தியா-INDIA
4 வட இந்திய நதிகள்
3 மத்திய இந்திய நதிகள்
4 தென்னிந்திய நதிகள்
7 ஏரிகள்
சிந்து
உலர் ஏரி
சட்லெஜ்
மானசரோவர் ஏரி
கங்கை
பிரம்மபுத்திரா
சாம்பார் ஏரி
நர்மதை
தபதி
மகா நதி
சிலிக்கா ஏரி
கோதாவரி
கிருஷ்ணா
கொல்லேறு ஏரி
பழவேற்காடு ஏரி
காவிரி
வேம்பநாடு ஏரி
வைகை
Printed by : Government Central Press, Pondicherry


இந்தியா-INDIA
6 மண் வகைகள்
① மலை மண்
② வண்டல் மண்
③ பாலை மண்
④ கரிசல் மண்
⑤ செம்மண்
⑥ சரளை மண்
Printed by : Government Central Press, Pondicherry


இந்தியா-INDIA
3 உணவுப் பயிர்கள்
3 பணப் பயிர்கள்
3 தோட்டப் பயிர்கள்
கோதுமை
கரும்பு
பருத்தி
பருப்பு வகைகள்
நெல்
காபி
தேயிலை
ரப்பர்
Printed by : Government Central Press, Pondicherry


இந்தியா-INDIA
3 முக்கிய இடங்கள்
4 காடுகள்
இமய மலைக் காடுகள்
பாலைவன காடுகள்
மௌசின்ராம்
ராண் ஆப் கட்ச்
அலை காடுகள்
[மாங்குரோவ் காடுகள்]
சேஷாச்சலம்
ஆந்திர பிரதேசம்
மன்னார் வளைகுடா
Printed by : Government Central Press, Pondicherry


இந்தியா-INDIA
4 கடற்கரைகள்
2 தீவுக் கூட்டங்கள்
2 ரயில் வழிகள்
டெல்லி
நாக்பூர்
கொல்கத்தா
மும்பை
சென்னை
லட்சத்தீவு
(இந்தியா)
Printed by : Government Central Press, Pondicherry


தமிழ்நாடு-TAMIL NADU
தமிழ்நாடு-இயற்கையமைப்பு
கிழக்குத் தொடர்ச்சி மலைகள்
பாலாறு
சேர்வராயன் மலை
மேட்டூர் அணை
கொல்லி மலை
பச்சை மலை
தொட்டபெட்டா
2637
கல்லணை
ஆனைமுடி
ஆனை மலை
பழனி மலை
பெரியாறு
வைகை ஆறு
வைகை அணை
முல்லைப் பெரியாறு அணை
பாபநாசம் அணை
தாமிரபரணி ஆறு
Printed by : Government Central Press, Pondicherry


தமிழ்நாடு-TAMIL NADU
தமிழ்நாடு-போக்குவரத்து
எண்ணூர்
சென்னை
வேலூர்
சேலம்
புதுச்சேரி
கோயம்புத்தூர்
காரைக்கால்
நாகப்பட்டினம்
மதுரை
மணியாச்சி
நாகர் கோயில்
Printed by : Government Central Press, Pondicherry